KDK
SINCE 1909 JAPAN
Buy Online:
shop.eliteradio.com
கொழும்பில் விநியோகம் இலவசம்
(011) 250 0823
facebook.com/kdksrilanka

VIRAKESARI
# வீரகேசரி
THE PREMIER NATIONAL TAMIL DAILY IN SRI LANKA
Registered as a Newspaper at the G.P.O No. QD/133/News/2021 www.virakesari.lk
பிராந்திய,நகரப்பதிப்பு

KDK
SINCE 1909 JAPAN
Buy Online:
shop.eliteradio.com
கொழும்பில் விநியோகம் இலவசம்
(011) 250 0823
facebook.com/kdksrilanka

மலர் : 92 இதழ்: 109 கொழும்பு பிலவ வருடம் கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி திங்கட்கிழமை (13.12.2021) ஹிஜ்ரி 1443 ஜ.அவ்வல் 08 விலை :ரூ.30 பக்கங்கள் : 20



தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்கள் நேற்று கொழும்பில் சந்தித்து பேசிய பின்னர் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போது... (படப்பிடிப்பு.தினேத் சமல்க)

# அதிகாரப்பகிர்வுக்கு இந்தியாவின் தலையீடு வேண்டும்

## தமிழ் பேசும் கட்சிகள் ஒருமித்து தீர்மானம்; தலையீட்டைக்கோரிய ஆவணத்தை கையளிக்கவும் முடிவு

(ஆர்.யசி)

இலங்கை அரசாங்கம் புதிய அரசியலமைப்புக்கான முயற்சிகளில் தமது கடும்போக்கான கொள்கையை கையாண்டு, 13 ஆம் திருத்த சட்டத்தை முழுமையாக நீக்கும் முயற்சிகளை முன்னெடுத்து வருவதாகவும், எனவே தமிழ் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ளும் வரையில் தற்போதைய ஒற்றையாட்சிக்குள் தமிழ் பேசும் மக்களுக்கான அதிகாரங்களை பெற்றுக்கொடுக்க இந்தியா தலையீடு செய்ய வேண்டும் எனவும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் கட்சி தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

மேலும் 13 ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக இந்தியாவின் தலையீட்டை கோரிய ஆவணமொன்றை 9



## 13ஐ அமுல்படுத்தி தமிழ்பேசும் மக்களின் மனங்களை வெல்லுங்கள்

### அரசாங்கத்துக்கு சவால் விடுக்கின்றார் மனோ கணேசன்

(ஆர்.யசி)

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வுகள்வழங்கப்படும்என்றசெய்தியை இந்தியாவும் உலக நாடுகளும் வெளிப்படுத்தின.ஆனால்அவற்றைஇன்னமும் முழுமைப்படுத்தும் முயற்சிகள் பூர்த்தியாகவில்லை. 10

## சமஷ்டியை பெற்றே தீருவோம்

### அதுவரை 13 ஆம் திருத்தச்சட்டத்தையேனும் முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்கிறார் விக்கினேஸ்வரன்

(ஆர்.யசி)

சமஷ்டி தீர்வு எமது குறிக்கோளாக என்றென்றும் இருக்கின்றது. ஒரு காலகட்டத்தில் அதனை பெற்றே தீருவோம். அரசியல் அமைப்பின் 13 ஆம் திருத்தச்சட்டம் எமக்கான நிரந்தர அரசியல் தீர்வு அல்ல, ஆனாலும் தற்போது சட்ட புத்தகத்தில் இருக்கும் 9

## அதிகாரப் பகிர்வின் அமுலாக்கலே தமிழ்பேசும் மக்களை பாதுகாக்கும்

### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(ஆர்.யசி)

ஜனாதிபதி செயலணி என்ற பெயரில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக மத்திய அரசாங்கம் எடுக்கும் கபளீகர செயற்பாடுகளை முழுமையாக முடிவுக்கு கொண்டு வர வேண்டுமாயின், அரசியலமைப்பில் உள்ள அதிகார பகிர்வு விடயங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என 10

## இலங்கையில் மனித உரிமை மீறல்கள் முடிவுக்குக்கொண்டுவரப்படவில்லை

### அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் கடும் விசனம்

(நா.தனுஜா)

இலங்கையில் இடம்பெற்ற மூன்று தசாப்தகாலப்போர் கடந்த 2009 ஆம் ஆண்டில் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதன் பின்னரும் கூட மனித உரிமை மீறல்கள் முடிவுக்கு கொண்டுவரப்படவில்லை. 2019 ஆம் ஆண்டில் சுமார் 250 இற்கும் அதிகமானோரைப் பலியெடுத்த உயிர்த்த ஞாயிறுதினத்தாக்குதல்களைத் தொடர்ந்து 10

## பழைய தேர்தல் முறையை புதிதாக நிறைவேற்றிய பின்னரே தேர்தல்

### பெப்ரவரி அல்லது மார்ச் மாதமளவில் சட்ட ரீதியில் நடவடிக்கை என்கிறது அரசாங்கம்

(ரொபட் அன்டனி )

மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்பதை அரசாங்கமும் விரும்புகின்றது. எனவே எதிர்வரும் பெப்ரவரி அல்லது மார்ச் மாதமளவில் பழைய தேர்தல் முறைமையை மீண்டும் புதிய தேர்தல் முறையாக சட்ட தேவைகளை நிறைவேற்றி பாராளுமன்றத்தில் 10





அம்பாறை சங்கமன்கண்டி பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு திடீரென புத்தர் சிலை வைக்கப்பட்டதையடுத்து அங்கு பெரும் பதற்றம் நிலவியது. அப்பகுதி தமிழ் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து அந்த புத்தர் சிலை அங்கிருந்து சனிக்கிழமை இரவு அகற்றப்பட்டிருந்தது. புத்தர் சிலையையும் அகற்றப்பட்டதன் பின்னரான தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

### பொரளை நகைக்கடை கொள்ளை:

## ஐந்து சிறப்பு பொலிஸ் குழுக்கள் விசாரணை

( எம்.எப்.எம்.பஸீர்)

கொழும்பு பொரளையில் தங்க நகை கடையொன்று ஆயுதம் தரித்த அடையாளம் தெரியாத கொள்ளையர்களால் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் 5 சிறப்பு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. பொரளை பொலிஸார், 10

## வசந்த கரன்னாகொடவின் நியமனம் தவறான தீர்மானம்

### பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா



(இராஜதுரை ஹஷான்)

வடமேல் மாகாண ஆளுநராக முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் ஒப்த பீல்ட் வசந்த கரன்னாகொட நியமிக்கப்பட்டுள்ளமை தவறான தீர்மானமாகும்.இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டியூ குணசேகரவை 10

## யுகதனவி ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்ய முடியாது

### அமைச்சர் பந்துல குணவர்த்தன



(இராஜதுரை ஹஷான்)

யுகதனவி மின்நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.எதிர்த்தரப்பினர் குறிப்பிடுவதை போன்று கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தை மீள்பரிசீலனை 10

## 'ஏல விற்பனை பூமியாக இலங்கை'

இலங்கை தற்போது ஏல விற்பனை பூமியாக மாற்றப்பட்டுள்ளது. பொறுப்பற்ற ஆட்சியாளர்களினால் முழு நாடும் அபாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளது. வெளிநாட்டவர்களுக்கும் 9




அவசியமான நேரத்தில் தேவைப்படும் மேலதிக டேட்டாவை
நாளாந்தம் வாராந்தம் மாதாந்தம்
ரூ.60/- முதல் Add செய்து கொள்ளுங்கள்
செயற்படுத்தல்
MyDialog App, dialog.lk அல்லது #678# மூலம்
Dialog
எதிர்காலம் இன்றே.
TRC/D/PRO/20/09
வரிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது

# அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல

## -வர்த்தகத்துறை அமைச்சர்

(இராஜதுரை ஹஷான்)

அத்தியாவசிய பொருட்களின் விலை யேற்றம் இலங்கைக்கு மாத்திரம் வரைய றுக்கப்பட்டதல்ல. முழு உலகமும் இப்பிரச் சினையை தற்போது எதிர்கொண்டுள்ளது. அத்தியாவசிய பொருட்களை நிவாரண அடிப்படையில் வழங்க அரசாங்கம் பல திட்டங்களை முன்னெடுத்துள்ளது. அதற் கமைய பண்டிகை காலத்தை முன்னிட்டு இன்று முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை சதொச விற்பனை நிலையங்களில் அரிசி,பருப்பு உள்ளிட்ட 50 பிரதான அத்தி யாவசிய பொருட்கள் நிவாரண விலைக்க மைய விற்பனை செய்யப்படும் என வர்த் தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வர்த்தகத்துறை அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட் 19 வைரஸ் தாக்கத்தின் காரண மாக சர்வதேச சந்தையில் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வடைந்துள் ளதுடன்,விநியோக சேவைக்கான கட்ட ணங்களும் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள் ளன.அத்தியாவசிய பொருட்களின் விலை யேற்றம் இலங்கைக்கு மாத்திரம் வரையறுக் கப்பட்டதல்ல,முழு உலகமும் அப்பிரச்சி னையை எதிர்க்கொண்டுள்ளது.

அத்தியாவசிய பொருட்களின் விலை அதி கரிப்பின் சுமையை முழுமையாக மக்கள் மீது சுமத்தாமல் நிவாரண விலையின் அடிப் படையில் பொருட்களை விற்பனை செய்ய அரசாங்கம் பல திட்டங்களை இதுவரையில் செயற்படுத்தியுள்ளது.சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக அத்தியாவசிய பொருட்கள் நிவாரண விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

பண்டிகை காலத்தை முன்னிட்டு இன்று முதல் இவ்வருடம் நிறைவு பெறும் வரை தெரிவு செய்யப்பட்ட அத்தியாவசிய பொருட்களை நிவாரண விலைக்கமைய விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய சதொச விற்பனை நிலை யங்களில் ஒரு கிலோ கிராம் நாட்டு அரிசி 99.5 ரூபாவுக்கும்,ஒரு கிலோ 130 ரூபா விற்கும் விற்பனை செய்யப்படும்.அனைத்து வகையான அரிசியினையும் ஒருவர் 5 கிலோ கிராம் அடிப்படையில் பெற்றுக் கொள்ள முடியும்.அத்துடன் சீனி, பருப்பு,நூடில்ஸ் உள்ளிட்ட 50 பிரதான அத்தியாவசிய பொருட்களை சந்தை விலையை காட்டிலும் குறைவான விலைக்கு விற்பனை செய்ய தீர்மானித்துள்ளோம்.

டொலர் நெருக்கடிக்கு தீர்வு காண சர் வதேச நாணய நிதியத்திற்கு செல்வது அவசியம் என எதிர்த்தரப்பினர் தொடர்ந்து குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்றால் அங்கு முன் வைக்கப்படும் நிபந்தனைகளுக்கு அடிப ணிய நேரிடும்.

சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் நிபந்தனைகள் அடிபணியும் போது நாட்டில் அரசியல் ரீதியிலும்,அரச நிர்வாக கட்டமைப்பிலும் பாரிய பிரச்சினை தோற்றம் பெறும்.அவை குறித்து எதிர்த்தரப்பினர் மக்கள் மத்தியில் கருத்துரைப்பதில்லை. நாளை இடம்பெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் சர்வதேச நாணய நிதியம் குறித்து அதிக கவனம் செலுத்தப்படும் என்றார்.

**மூன்றாம் கட்ட தடுப்பூசி இன்றி பண்டிகை கொண்டாட்டங்களில் ஈடுபட்டால்**

# டிசம்பர் இறுதியில் கொவிட் சுனாமிக்கு தயாராகுங்கள்

## - இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண

(எம்.மனோசித்ரா)

நத்தார் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு முன்னர் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அவ்வாறன்றி மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் பண்டிகை கொண்டாட்டங்களில் ஈடுபட்டால் டிசம்பர் மாத இறுதியில் கொவிட் சுனாமியை எதிர்கொள்ள தயாராக வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

இரண்டாம் கட்ட தடுப்பூசியைப் பெற்று 3 மாதங்கள் நிறைவடைந்துள்ள 20 வயதுக்கு மேற்பட்ட சகலரும் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும். எந்தவொரு தடுப்பூசி நிலையத்திற்கும் சென்று அதனைப் பெற்றுக் கொள்ள முடியும். முதல் இரு கட்டங்களாகவும் அஸ்ட்ரசெனிகா, சைனோபார்ம், ஸ்புட்னிக் மற்றும் மொடர்னா என எவ்வகை தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்களும் மூன்றாம் கட்டமாக பைசர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆரம்பத்தில் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் மத்தியில் பின்னடைவை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எவ்வாறிருப்பினும் தற்போது மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்கின்றனர். இம்மாதத்தின் இறுதி இரு வாரங்களில் பண்டிகை கொண்டாட்டங்கள் இடம்பெறக்கூடும். அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை.

எனவே கொண்டாட்டங்களுக்கு முன்னர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். மாறாக மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் பண்டிகை கொண்டாட்டங்களில் ஈடுபட்டால் டிசம்பர் மாத இறுதியில் கொவிட் சுனாமியை எதிர்கொள்ள தயாராக வேண்டும் என்றார்.



போரா சமூகத்தின் ஆன்மீகத் தலைவர் கலாநிதி செய்யதினா முஃபத்தல் செய்ஃபுத்தீன் சஹெப் தலைமையிலான குழுவினரை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் அலரிமாளிகையில் சந்தித்த போது ...

# வெளிவிவகார அமைச்சருடன் போலந்து தூதுவர் சந்திப்பு

(எம்.மனோசித்ரா)



இலங்கை மற்றும் போலந்துக்கு இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் முழுமையான அணுகு முறையைக் கடைப்பிடிக்கும் நோக்கில், அரசியல், வர்த்தகம், முதலீடு, சுற்றுலா உறவுகள் மற்றும் மக்களுக்கிடையேயான தொடர்புகளை மேம்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் ஒரே நேரத்தில் அங்கீகாரம் பெற்ற போலந்து தூதுவர் அடம் புராகோவ்ஸ்கி , வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பின் போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

இலங்கைக்கான லொட் பொலிஷ் எயார்லைன்ஸின் நேரடி விமான சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதை முன்னிட்டு, தூதுவர் புரகோவ்ஸ்கி கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார். இலங்கைக்கும் போலந்துக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டுடன் 65 வருடங்கள் நிறைவடையுள்ளமையை நினைவு கூர்ந்த அமைச்சர், போலந்துடனான பன்முகப் பங்காளித்துவத்தை மேலும் முன்னேற்றுவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தினார்.

இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் முழுமையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் நோக்கில், அரசியல் மற்றும் வர்த்தகம், முதலீடு, சுற்றுலா உறவுகள் மற்றும் மக்களுக்கிடையேயான தொடர்புகளை மேம்படுத்துவதற்கு இதன்போது முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இது சம்பந்தமாக, இரு நாடுகளினதும் வணிக சபைகளுக்கு இடையேயான வழக்கமான தொடர்புகளின் அவசியம் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கை ஏற்றுமதிக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் சந்தையின் முக்கியத்துவத்தின் பின்னணியில் ஐரோப்பிய ஒன்றிய இலங்கை ஒத்துழைப்புகுறித்துஅமைச்சர், தூதுவருக்கு விளக்கமளித்தார். போலந்தின் பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் இருவழி சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக 2022 இல் இலங்கையில் முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள ஒரு நிகழ்வு குறித்தும் தூதுவர் தெரிவித்தார்.

# மாகாண சபை தேர்தலை நடத்தும் அரசின் முயற்சி கவலைக்குரியது

## - ஆளும் கட்சி எம்.பி. ஆதங்கம்

(இராஜதுரை ஹஷான்)

கொவிட்19 வைரஸ் தாக்கத்தின் காரண மாக புதிய அரசியலமைப்பு உருவாக்கத் திற்கான நடவடிக்கைகள் தாமதப்படுத்தப் பட்டுள்ளன என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. புதிய அரசியலமைப்பு உருவாக்கம் திட்டமிட்ட வகையில் பிற் போடப்படுகிறது. மாகாண சபை தேர்தலை நடத்த அரசாங்கம் முயற்சிக்கின்றமை கவலைக்குரியது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந் துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண் டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் கால பிரசார மேடைகளில் அரசிய லமைப்பின் 20ஆவது திருத்தம் உரு வாக்கம்,ஒற்றையாட்சி முறைமையை உறு திப்படுத்தும் அரசியலமைப்பு உருவாக்கம் ஆகியன பிரதான பேசுபொருளாக காணப் பட்டன.காலத்திற்கு பொருந்தும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதை 69 இலட்சம் மக்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

2020ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலின் வெற்றியை தொடர்ந்து அரசி யலமைப்பின் 19ஆவது சட்டம் நீக்கப் பட்டு 20ஆவது அரசியலமைப்பு திருத்தம் விரைவாக உருவாக்கப்பட்டது.20ஆவது திருத்தத்தில் மக்களாணைக்கு முரணான ஒரு சில விடயங்கள் உள்வாங்கப் பட்டுள்ளன.

இரட்டை குடியுரிமையினை உடையவர் தேர்தல்களில் போட்டியிடுவதற்கும்,அரச உயர்பதவிகளை வகிப்பதற்கும் 20ஆவது திருத்தம் ஊடாக அனுமதி வழங்கப்பட் டது.20ஆவது திருத்தத்தில் காணப்பட்ட மக்களாணைக்கு முரணான விடயங்கள் புதிய அரசியலமைப்பின் ஊடாக திருத்திக் கொள்ளப்படும் என வாக்குறுதி வழங் கப்பட்டதை தொடர்ந்து அதற்கு ஆதரவு வழங்கினோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இரண்டாண்டு பதவிக்காலம் நிறைவு பெறுவதற்கு முன்னர் புதிய அரசியலமைப் பிற்கான மூல வரைபை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதாக நீதியமைச்சர் அலிசப்ரி பாராளுமன்றில் வாக்குறுதியளித்தார். இது வரையில் மூல வரைபு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை.புதிய அரசிய லமைப்பு உருவாக்கத்திற்கான நடவடிக் கைகள் கொவிட் தாக்கத்தின் காரணமாக தாமதமடைகின்றன என குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் திட் டமிட்ட வகையில் பிற்போடப்படுகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.அரசியல மைப்பின் 13ஆவது திருத்தம் தேவையற்ற பிரச்சினைகளை மாகாண சபை முறைமை ஊடாக ஏற்படுத்தியுள்ளது. புதிய அரசியலமைப்பின் ஊடாக மாகாண சபை முறைமையை ரத்து செய்வதாக குறிப்பிடப்பட்டது.தற்போது மாகாண சபை தேர்தலை நடத்த அரசாங்கம் முயற்சிக்கின்றமை மக்களாணைக்கு விரோதமானதாகும் என்றார்.

# நாட்டில் எந்தவகையிலும் உணவு தட்டுப்பாடு ஏற்படாது

## அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சஜித், சம்பிக்க, ரணில்,அநுர, அர்ஜுன போட்டியிடுவார்கள்- அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே

(இராஜதுரை ஹஷான்)

அரசாங்கத்தின் சிறந்த திட்டங்கள் ஊடகங்களில் தவறான முறையில் சித்தரிக்கப்படுகின்றன. விவசாயத்துறை அமைச்சின் பொறுப்புக்கள் இராணுவத்துக்கு பொறுப்பாக்கப்படவில்லை. நாட்டில் ஒருபோதும் உணவுத்தட்டுப்பாடு ஏற்படாது என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நல்லாட்சி காலத்தில் நாட்டு மக்களுக்கு வழங்கி பொய்யான வாக்குறுதிகள் குறித்து கருத்துரைக்க விரும்பவில்லை. 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலிலும் பொதுஜன பெரமுன நிச்சயம் பெற்றி பெறும். சஜித், சம்பிக்க, ரணில்,அநுர மற்றும் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிடுவார்கள் எனவும் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

விவசாயத்துறை அமைச்சின் செயற்பாடுகள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுவது முற்றிலும் பொய்யானது. கொவிட் தாக்கத்திலிருந்து மீள்வதற்கு இராணுவத்தினர் முழுமையான ஒத்துழைப்பை வழங்கினார்கள்.இராணுவத்தினரது உதவியில்லாமல் கொவிட் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியாது என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள்.தடுப்பூசி செலுத்தல் திட்டத்தை இராணுவத்தினர் நேர்த்தியான முறையில் முன்னெடுத்துள்ளார்கள்.

இலங்கையை பசுமை நாடாக உருவாக்குவதற்கு தேவையான முக்கிய விடயங்கள் அடையாளம்காணப்பட்டுள்ள நிலையில்அவற்றைமுறையானதாகவும், நிலையானதாகவும், செயற்படுத்துவதற்கு 'பசுமை விவசாய செயற்பாட்டு மையம்'ஒன்றை ஸ்தாபிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.பாதுகாப்பு படைகளின் பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் வழிகாட்டலின் கீழ் பசுமை விவசாய செயற்பாட்டு மையம் செயற்படுத்தப்படவுள்ளது. அரசாங்கத்தின் சிறந்த திட்டங்கள் ஊடகங்களில் தவறான முறையில் சித்தரிக்கப்படுகின்றன.

சேதனபசளை திட்டத்தை பலவீனப்படுத்த திட்டமிட்ட வகையில் சூழ்ச்சி முன்னெடுக்கப்படுகின்றது.இரசாயன உரம் தடை செய்யப்பட்ட போது மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரிக்கப்பட்டது. இரசாயன உரம் இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மரக்கறிகளின் விலை சடுதியாக குறைவடைந்தது.சேதன பசளை திட்டத்துக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுப்பவர்கள் இரசாயன உர பயன்பாட்டினால் ஏற்படும் விளைவுகள் தொடர்பில் எவரும் கருத்துரைப்பதில்லை.

எதிர்வரும் காலங்களில் நாட்டில் பெரும் உணவு தட்டுபாடு ஏற்படும் என எதிர்த்தரப்பினரும்,ஆளும் தரப்பின் ஒருசில உறுப்பினர்களும் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.எக்காரணிகளுக்காகவும் உணவு தட்டுப்பாடு ஏற்படாது. பெரும்போக விவசாயம் நிச்சயம் வெற்றி பெறும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் நாட்டு மக்களுக்கு வழங்கிய பொய்யான வாக்குறுதிகள் பற்றி குறிப்பிட விரும்பவில்லை.அரசாங்கத்திற்குள் இருந்துகொண்டு அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

2024ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நிச்சயம் பெற்றிபெறும்.எதிர்த்தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க, சஜித் பிரேமதாஸ,அநுரகுமார திஸநாயக்க ஆகியோரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்கவும் ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிடுவார்கள் என்றார்.

# மட்டக்குளியில் சுழியோடல் மையம் திறப்பு

## பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்





இளம் வர்த்தகராக கடல் சார் தொழில்கள் பலவற்றில் கவனம் செலுத்தி நாட்டுக்கு அந்நிய செலாவணியை கொண்டுவர நடவடிக்கை எடுக்கும் சுகந் குழுமத்தின் வர்த்தகம் தொடர்பில் தனது பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பு 15 மட்டக்குளியில் அமைந்துள்ள சுகந் குழுமத்தின் கீழ், புதிய வர்த்தக நடவடிக்கையாக சுகந் சுழியோடல் மையம் கடந்த 5 ஆம் திகதி, மீன் பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்பட்டது. இதனூடாக முகத்துவாரம், காக்கை தீவு கடற்கரை பூங்காக்களை அண்மித்து, நீருக்கு அடியிலான விளையாட்டுக்கள் தொடர்பில், துறைசார்ந்தோருக்கும், பயிற்சி பெறுவோருக்கும் உரிய வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன. அத்துடன் இந்த மையம், சுழியோடல் மையம், சுழியோடல் பயிற்சி பாடசாலையாக விஸ்தரிக்கப்படும் என சுகந் குழுமம் மற்றும் சுகந் சுழியோடல் மையத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சுகந்த சீலன் அரவிந்தன் தெரிவித்தார்.

சமுத்திரவியல் பல்கலைக் கழகத்துடன் இணைந்து என்.வி.கியூ. தரம் 3 தகமையுடன் கூடிய சுழியோடல் பயிற்சி பாடநெறியை ஆரம்பிக்க தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், யாழ்ப்பாணம், மன்னார், முல்லைதீவு, கிளிநொச்சி, புத்தளம், மாத்தறை, அம்பாந்தோட்டை பகுதிகளில், ' ஸ்குபா சுழியோடிகள்' 1000 பேரை உருவாக்கி தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்க இந்த மத்திய நிலையம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரவிந்தன் மேலும் கூறினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இளம் வர்த்தகராக கடல் சார் தொழில்கள் பலவற்றில் கவனம் செலுத்தி நாட்டுக்கு அந்நிய செலாவணியை கொண்டுவர நடவடிக்கை எடுக்கும் இந்த வர்த்தகம் தொடர்பில் தனது பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் போது, சமுத்திரவியல் பல்கலைக்கழகம், நாரா நிறுவனம், மீன் பிடி அமைச்சு உள்ளிட்ட பல நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்துகொண்டனர். இதன்போது யாழ்ப்பாணத்தை சேர்ந்த சுழியோடிகள் பலருக்கு உபகரணங்கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கி வைக்கப்பட்டன.

# சுபயோகம்

**13. 12.2021 ஸ்ரீ பிலவ வருடம் கார்த்திகை மாதம் 27ஆம் நாள் திங்கட்கிழமை**

சுக்கிலபட்ச தசமி திதி பின்னிரவு 1.15 வரை அதன்மேல் அதன் மேல் ஏகாதசி ரேவதி நட்சத்திரம் பின்னிரவு 5.44 வரை அதன்மேல் அஸ்வினி நட்சத்திரம் சிரார்த்த திதி வளர்பிறை .தசமி சித்தயோகம் முழுவதும் சமநோக்குநாள் சந்திராஷ்டம நட்சத்திரங்கள் பூரம், உத்தரம் . சுபநேரங்கள் 9.30–10.30, மாலை 4.30–5.30 ராகுகாலம் 7.30–9.00 எமகண்டம் 10.30–12.00 குளிகை காலம் 1.30–3.00 வாரசூலம் கிழக்கு பரிகாரம்– தயிர்

| | | | |
|---|---|---|---|
| சந் | | ராகு | |
| குரு | தினசரி கிரகநிலை கார்த்திகை 27 திங்கள் அதிகாலை 5.44 மேஷ, சந்திர காலசர்ப் தோஷம் | | |
| சுக் சனி | | | |
| புத | சூரி செவ் கேது | | |

| | |
|---|---|
| மேடம் | —உதவி, நட்பு |
| இடபம் | —பதவி, உயர்வு |
| மிதுனம் | — தனம், லாபம் |
| கடகம் | —பிரயாணம், செலவு |
| சிம்மம் | —சுகம், ஆரோக்கியம் |
| கன்னி | —நோய், எச்சரிக்கை |
| துலாம் | —காரியசித்தி, அனுகூலம் |
| விருச்சிகம் | —செலவு, விரயம் |
| தனுசு | —பணமுடக்கம், தடை |
| மகரம் | —புகழ், செல்வாக்கு |
| கும்பம் | —சுகம், போசனம் |
| மீனம் | —அன்பு, பாசம் |

*இன்று ரேவதி நட்சத்திரம் அனந்த சயன ஸ்ரீபத்மநாப பெருமானை வழிபடல் நன்று. ஸ்ரீவைகுந்த ஏகாதசி விரத்தை திருவரங்கம் தவிர ஏனைய ஸ்ரீ வைஷ்ணவ மார்கழி மாதம். 13..1.2022 அனுஷ்டிக்கவும் சொர்க்கவாசல் அன்று திறக்கப்படும்.*

*ராகு, குரு கிரகங்களின் ஆதிக்க நாளின்று*

*அதிர்ஷ்ட எண்கள்:* 1,5,9,3
பொருந்தா எண்: ,8,
அதிர்ஷ்ட வர்ணங்கள்: மஞ்சள், கலந்த வர்ணங்கள்

**இராமரத்தினம் ஜோதி**
**(தெஹிவளை ஸ்ரீ விஷ்ணு கோயில்)**

# நிபுணர் குழுவின் அறிக்கைக்காக அரசு காத்துக்கொண்டிருக்கின்றது

## புதிய அரசியலமைப்பு குறித்து சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தன கூறுகிறார்

(ரொபட் அன்டனி )

புதிய அரசியலமைப்பு தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவின் அடிப்படை வரைபு விரைவில் அரசாங்கத்துக்கு கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். அந்த வரைபு அறிக்கை வரும் வரை நாம் காத்திருக்கின்றோம் என்று கல்வி அமைச்சரும் சபை முதல்வருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பான நிபுணர் குழு தனது அறிக்கையை அரசாங்கத்திடம் கையளித்ததன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதாக அறிவித்து இருக்கின்றது. அது தொடர்பாக ஒரு நிபுணர் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த குழுவே அரசியலமைப்பின் அடிப்படை வரைபை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அந்த நிபுணர் குழு விரைவில் தனது அடிப்படை வரைபை தயாரித்து அரசாங்கத்திடம் கையளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பின்னர் அரசாங்கம் அந்த அறிக்கையை பெற்றுக்கொண்டுஅடுத்தகட்டநடவடிக்கைகளை எடுக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. பெரும்பாலும் அரசாங்கம் இது தொடர்பில் ஒரு சர்வகட்சி மாநாடு அல்லது பாராளுமன்ற தெரிவுக் குழுவை நியமித்து அடுத்த கட்டமாக நடவடிக்கைகள் எடுக்கும் என்றும் கருதப்படுகின்றது. அரசாங்கத்திடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அது அமைச்சரவைக்கும் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. அதன் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இது தொடர்பாக அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் பாராளுமன்றத்தில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

# இந்தியா ஒருபோதும் இலங்கையை கைவிடாது

## மருந்து, உணவுப்பொருள் இறக்குமதிக்கான நிதியை அந்நாட்டிடம் கோருங்கள் –ஹர்ஷ டி சில்வா

(எம்.மனோசித்ரா)

இந்தியா ஒருபோதும் இலங்கையை கைவிடாது. இலங்கை மக்கள் உணவின்றி தவிக்கும் நிலை வரும் வரை பார்த்துக் கொண்டிருக்காது. மருந்து, உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதிக்கான நிதியை இந்தியாவிடம் கோருமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதா இல்லையா என்பது தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடுவதற்கு இப்போது தீர்மானித்துள்ளமை காலம் கடந்த ஞானமாகும். ஒரு வருடத்திற்கு முன்னரே இந்த தீர்மானத்தை எடுத்திருந்தால் நாட்டில் இந்தளவிற்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்காது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதா இல்லையா என்பது தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடுவதற்கு இப்போது தீர்மானித்துள்ளமை காலம் கடந்த ஞானமாகும். இது ஒரு வருடத்திற்கு முன்னர் எடுக்கப்பட்டிருக்க வேண்டிய தீர்மானமாகும். தற்போது இந்த தீர்மானத்தை எடுத்துள்ளமை பிரயோசனமற்றது. காரணம் சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதற்கு தீர்மானித்தாலும் வரையறுக்கப்பட்ட சலுகைகளே கிடைக்கப் பெறும்.

இந்தியா எப்போதும் எம்மை கைவிடாது. இலங்கை மக்கள் உணவின்றி தவிக்கும் நிலை வரும்வரை பார்த்துக்கொண்டிருக்காது. எனவே மருந்து, உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதிக்கான நிதியை இந்தியாவிடம் கோருமாறு அரசாங்கத்தை அறிவுறுத்துகின்றோம். செலுத்த வேண்டியுள்ள கடன் தொகையை மீள புதுப்பிக்க வேண்டும். அவ்வாறில்லை எனில் உரிய காலத்தில் கடனை மீள செலுத்த முடியாது. இவ்வாறு செய்வதன் ஊடாக மருந்து மற்றும் உணவு பொருட்கள் இறக்குமதிக்கான பணத்தை மீதப்படுத்த முடியும். எம்மால் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை முற்றாக மீட்க முடியும் என்ற 100 வீத நம்பிக்கை எமக்கிருக்கிறது என்றார்.

# கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது

(எம்.மனோசித்ரா)

பம்பலப்பிட்டி பகுதியில் கார், பணம் மற்றும் தங்க ஆபரணங்களை கொள்ளையிட்ட சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

40 இலட்சம் பெறுமதியுடைய கார், கார் சாரதியிடம் காணப்பட்ட 30,000 ரூபா பணம், 3,60,000 பெறுமதியுடைய தங்க நகைகள் உள்ளிட்டவை கொள்ளையிடப்பட்டமை தொடர்பில் கடந்த 9ஆம் திகதி பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுக்கமைய கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய நேற்று முன்தினம் சனிக்கிழமை சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கிருலப்பனை பொலிஸ் பிரிவில் பூர்வாராம புரவரய பிரதேசத்தில் 5 கிராம் 900 மில்லிகிராம் ஹெரோயினுடன் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் அவரது மோட்டார் சைக்கிளை மறைத்து, தன்னை பொலிஸ் அதிகாரி எனத் தெரிவித்து வாடகைக்கு செல்வதாகக் கூறி காரில் ஏறியுள்ளார். சாரதி காரை செலுத்திக்கொண்டிருந்த போது அவரை கத்தியைக் காண்பித்து மிரட்டி பணம் மற்றும் தங்க நகைகளைக் கொள்ளையிட்டுள்ளார். அத்தோடு சாரதியை தள்ளிவிட்டு, சந்தேகநபர் காரில் தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த கார் பம்பலப்பிட்டி பொலிஸ் பிரிவிலிருந்து மீட்கப்பட்டுள்ளதோடு, கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் பயணித்த மோட்டார் சைக்கிள் கொழும்பு வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவில் கொள்ளையிடப்பட்டது என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 33 வயதுடைய கிருலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிப்பதற்கே முயற்சிகள்

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

(எம்.மனோசித்ரா)

போராடிப் பெற்ற சமாதானத்திற்கு களங்கம் விளைவிக்கும் வகையில் சில விரோத சக்திகள் செயற்படுகின்றன. இனங்களுக்கிடையில் முரண்பாடு, அவநம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு இவ்வாறான முயற்சிகள் இடம்பெறுவதாக பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

நட்பு நாடுகளின் புலனாய்வு அமைப்புகளுக்கு இடையே புலனாய்வு தகவல்களை பகிர்ந்து கொள்வதானது பேரபாயங்களை எதிர்த்துப் போராடுவதில் ஒரு முக்கிய காரணியாக அமைவதாகவும் பாதுகாப்பு செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு தாமரைத் தடாகத்தில் இடம்பெற்ற பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பதவி நிலை அதிகாரிகள் கல்லூரியின் 15ஆவது கற்கை நெறிக்கான பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

போராடிப் பெற்ற சமாதானத்திற்கு களங்கம் விளைவிக்கும் வகையில் சில விரோத சக்திகள் செயற்படுகின்றன. இனங்களுக்கிடையில் முரண்பாடு, அவநம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு இவ்வாறான முயற்சிகள் இடம்பெறுகின்றன. இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு எதிராக தோன்றும் பேரபாயங்களை தடுப்பதற்கு சாத்தியமான அச்சுறுத்தல்கள் பற்றிய ஆழமான பகுப்பாய்வுகளை மேற்கொள்வதும், தீங்கு விளைவிக்கும் சக்திகளுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்கூட்டியே தொடங்குவதும் எமது பாரிய பொறுப்பாகும்.

நட்பு நாடுகளின் புலனாய்வு அமைப்புகளுக்கிடையே புலனாய்வு தகவல்களை பகிர்ந்து கொள்வதானது பேரபாயங்களை எதிர்த்துப் போராடுவதில் ஒரு முக்கிய காரணியாக அமைகிறது. சமகால சூழலில் உருவாகக்கூடிய சாத்தியமான அச்சுறுத்தல்களை மதிப்பிடுவதற்கு புவிசார் அரசியல் சூழலின் நிலையான மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வு அவசியம்.

வெளிநாடுகளிலுள்ள புலிகளுக்கு ஆதரவான சக்திகள் மற்றும் அதன் மறைமுக ஆதரவான உள்ளூர் சக்திகள் விடுதலைப் புலிகளின் கோரிக்கையான பிரிவினைவாத சித்தாந்தத்தை கொண்டிருக்கின்றன. அந்த சக்திகளால் கணிசமான அச்சுறுத்தல் ஏற்படுகின்றன. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் அண்மையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் மூலம் அறியலாம் என்றார்.

# விபத்தில் 16 பேர் காயம்

## புத்தளம் வனாத்துவில்லு பகுதியில் சம்பவம்





(புத்தளம் மேலதிக நிருபர்)

புத்தளம் எலுவங்குளம் பிரதான வீதியின் வனாத்தவில்லு பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் 2 சிறுவர்கள் உட்பட 16 பேர் காயமடைந்துள்ளனர்.

எலுவங்குளத்திலிருந்து புத்தளம் நோக்கிப் பயணம் செய்த தனியார் பயணிகள் பஸ் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த வேன் ஒன்றுக்கு இடம்கொடுக்க முற்பட்ட போது குடைசாய்ந்து வீதியோரத்திலுள்ள பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தின் போது இரண்டு சிறுவர்கள் உட்பட 16 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவ்வாறு காயமடைந்தவர்களில் 11 பேர் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 5 பேர் வனாத்துவில்லு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு சென்றுள்ளதாகவும் வனாத்துவில்லு பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிபர் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது எனவும் பொலிஸார் கூறினர். இந்த விபத்தில் வீதியின் அருகில் இருந்த மின்கம்பம் ஒன்றும் முழுமையாக சேதமடைந்து கீழே விழுந்தமையால் வனாத்துவில்லு பகுதியில் மின்சாரமும் தடைப்பட்டுள்ளது.

விபத்து சம்பவம் தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் வனாத்துவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# காலையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் மாலையில் பொய்யாக்கப்படுகின்றன

## அரசாங்கத்தை விமர்சிக்கிறது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி

(இராஜதுரை ஹஷான்)

அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களினால் பொருளாதார பாதிப்புக்கள் தீவிரமடைந்துள்ளதுடன் அரசியல் பிரச்சினைகளும் தற்போது தோற்றம் பெற்றுள்ளன. காலையில் முன்னெடுக்கப்படும் தீர்மானம் மாலையில் பொய்யாக்கப்படுகிறது. வெகு விரைவில் அரசியல் ரீதியில் சிறந்த மாற்றம் ஏற்படும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தன்னிச்சையான செயற்பாடுகள் முழு அரசாங்கத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. அரசாங்கத்தில் உள்ள சிரேஷ்ட தலைவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை. கூட்டணியிலுள்ள பங்காளி கட்சிகளை புறக்கணிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களினால் பொருளாதார பாதிப்புக்களுடன் அரசியல் பிரச்சினைகளும் தற்போது தீவிரமடைந்துள்ளன. வெளிநாட்டு கையிருப்பு வரையறுக்கப்பட்டுள்ளதால் அத்தியாவசிய பொருள் கொள்வனவு மற்றும் விநியோகத்தில் பாரிய முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.

ஊழல் மோசடி மற்றும் பொறுப்பற்ற தன்மை தீவிரமடைந்துள்ளன. அரசாங்கம் காலையில் எடுக்கும் தீர்மானம் மாலையில் பொய்யாக்கப்படுகிறது. தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் முழுமையாக மறக்கடிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் செயற்பாடுகளை நாட்டு மக்கள் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

புதிய ஐக்கிய முன்னணியை பலப்படுத்தும் செயற்பாடுகளை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி முன்னெடுத்துள்ளது. ஜனநாயகம் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை சுதந்திர கட்சி தலைமையிலான அரசாங்கத்தினால் மாத்திரம் பலப்படுத்த முடியும். வெகுவிரைவில் அரசியல் ரீதியில் மாற்றம் ஏற்படும் என்றார்.

# மூன்று பிரதான சூழ்ச்சிக்காரர்களை அரசிலிருந்து வெளியேற்ற வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க

(இராஜதுரை ஹஷான்)

நாட்டில் கடந்த 2015ஆம் ஆண்டு அரசியல் சூழ்ச்சி செய்தவர்கள் தற்போது அரசாங்கத்தில் இருந்துகொண்டு அரசாங்கத்தை பலவீனப்படுத்த முயற்சிக்கிறார்கள். மூன்று பிரதான சூழ்ச்சிக்காரர்களை அரசாங்கத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்பதை பல முறை பகிரங்கமாக அறிவித்துள்ளேன் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

பொலனறுவைப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கத்தில் இருந்துகொண்டு அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் செயற்பாடுகளை கூட்டணியின் பங்காளி கட்சியினர் முன்னெடுக்கிறார்கள். அரசாங்கத்தின் கொள்கைக்கு முரணாக செயற்படுபவர்களுடன் இணைந்து செயற்படுவது கடினமானது.

2015ஆம் ஆண்டு அரசியல் சூழ்ச்சியை முன்னெடுத்தவர்கள் தற்போது அரச வரப்பிரசாதங்களை முழுமையாக அனுபவித்துக் கொண்டு அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் வகையில் மக்கள் மத்தியில் கருத்துரைக்கிறார்கள்.

அரசாங்கத்திற்குள் உள்ள மூன்று பிரதான அரசியல் சூழ்ச்சிக்காரர்களை வெளியேற்ற வேண்டும் என்பதை பலமுறை பகிரங்கமாக குறிப்பிட்டுள்ளேன்.

கொவிட் தாக்கத்தின் பின்னரான பொருளாதார பாதிப்புக்களினால் ஏற்பட்டுள்ள சவால்களுக்கு மத்தியில் அரசாங்கம் அரச நிர்வாகத்தை முன்னெடுத்துள்ளது. செயற்பாட்டு ரீதியில் ஏற்பட்ட குறைபாடுகளை அடிப்படையாக வைத்து அதனூடாக அரசியல் இலாபம் தேடிக்கொள்ள அரசாங்கத்திலுள்ள ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியிலுள்ள பங்காளி கட்சியினர் அரசாங்கத்தில் காணப்படும் பிரச்சினைகளுக்கு உள்ளக பேச்சுவார்த்தை ஊடாக தீர்வு காண எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

இடம்பெறவுள்ள தேர்தல்களில் விருப்பு வாக்கினை அதிகளவில் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கத்தின் கொள்கைக்கு முரணாக செயற்படுகிறார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உள்ளிட்ட ஏனைய பங்காளி கட்சியினர் அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க செயற்பட முடியாவிடின் கூட்டணியிலிருந்து தாராளமாக வெளியேறலாம் என பலமுறை பகிரங்கமாக குறிப்பிட்டுள்ளோம். அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டு தொடர்ந்து அரசாங்கத்துடன் ஒன்றிணைந்துள்ளார்கள் என்றார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

பின்வருவன ஊடாக நீங்கள் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு நாணயத்தை உங்கள் உடமையில் வைத்திருப்பீர்களாயின்...

I. வெளிநாட்டு பயணத்திற்காக வங்கியொன்றிலிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நாணயமாற்றுநரிடமிருந்து கொள்வனவுசெய்து, பயன்படுத்தாது இலங்கைக்கு திருப்பிக் கொண்டுவரப்பட்டவை (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),

II. வெளிநாட்டு பயணத்திற்காக தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து (PFCA) மீளெடுப்புச்செய்தல் (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),

III. வெளிநாட்டிலிருக்கும் போது தொழில், தொழில்சார்நிபுணத்துவம் அல்லது வியாபாரம் என்பவற்றிலிருந்தான வருவாய்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை,

IV. சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடுவதற்காக 2020 சனவரி 01 அன்று அல்லது அதற்கு பின்னர் பெற்று இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை.

அத்தகைய வெளிநாட்டு நாணயங்களை நீங்கள்,

- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியில் இலங்கை ரூபாவாக மாற்றலாம்; அல்லது
- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியிலுள்ள இலங்கை ரூபா கணக்கில் வைப்பிலிடலாம்; அல்லது
- உங்களது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் (PFCA) அல்லது சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடலாம்;
- உங்களது வங்கியூடாக இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்யலாம்.

* செலாவணி வீதம்: ரூ.200 + விசேட ஊக்குவிப்பு ரூ.10

குறிப்பு: இலங்கை மத்திய வங்கி மூலம் மேற்குறித்தவை தொடர்பிலான அவசியமான அறிவுறுத்தல்கள் அனைத்து வங்கிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
0112477255 0112477716 dfe@cbsl.lk www.dfe.lk

## இன்றைய சிந்தனை

**பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**
**வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல**
(திருக்குறள்)

**பொருள் சேர்க்கும் போது பழிக்கு அஞ்சிச் சேர்த்து, செலவு செய்யும் போது பகிர்ந்து உண்பதை மேற்கொண்டால், அவ்வாழ்க்கையின் ஒழுங்கு எப்போதும் குறைவதில்லை**

VIRAKESARI
வீரகேசரி
2021 டிசம்பர் 13ஆம் திகதி திங்கட்கிழமை
எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிட்டெட்,
267, ராஜ மாவத்தை, எக்கல, ஜா–எல. Tel. : 011 7322750, 011 7322751, 011 7322754, 011 7322755, 0117322736
Fax : 011 7322752 Web Site : www.virakesari.lk
E-mail : editordaily@virakesari.lk, kesari25@virakesari.lk
News On-line : onlinenews@virakesari.lk Advertisment : advertising@virakesari.lk
Circulation : circulation@virakesari.lk

# அரசியல் தீர்வு தொடர்பில் டிலானின் முற்போக்கு சிந்தனை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற சூழ்நிலையில் அந்த புதிய அரசியலமைப்பில் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு உள்ளடக்கப்பட வேண்டும் என்பது தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக பல்வேறு மட்டங்களிலும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. முக்கியமாக சர்வதேச சமூகம், இந்தியா, ஐக்கிய நாடுகள் சபை என்பன தொடர்ச்சியாக புதிய அரசியலமைப்பில் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. அதேபோன்று உள்நாட்டிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட வடக்கு, கிழக்கு கட்சிகள் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வு உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன.

அதேபோன்று தென்னிலங்கையிலும் கூட பிரதான அரசியல் கட்சிகளிலுள்ள முற்போக்கு தலைவர்கள் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வை வலியுறுத்திக் கொண்டே இருக்கின்றனர். எனினும் அதற்கான நடவடிக்கைகள் சரியான முறையில் இடம்பெறவில்லை. தற்போது புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அது தொடர்பாக ஆராய்வதற்கு அதாவது அடிப்படை வரைபை தயாரிப்பதற்கு நிபுணர் குழு நியமிக்கப்பட்டது. அந்த நிபுணர் குழு தற்போது பல்வேறு தரப்பினரிடமும் யோசனைகளை பெற்றிருக்கின்றது. தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட , வடக்கு, கிழக்கு அரசியல் கட்சிகளும் இதற்கு தமது யோசனைகளை முன்வைத்து இருக்கின்றன. அந்த நிபுணர் குழு விரைவில் தமது அறிக்கையை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்பின்னர் அந்த வரைபு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அடுத்த கட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்போது சர்வகட்சி மாநாடு நடத்தப்பட்டு புதிய அரசியலமைப்பு தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் இதில் எவ்வாறு தற்போது தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு உள்ளடக்கப்படும் என்பது தொடர்பான விடயம் இன்னும் தெளிவற்றதாக இருக்கின்றது. தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒரு புதிய விடயமாக இதில் உள்ளடக்கப்படுமா அல்லது தற்போது இருக்கின்ற மாகாணசபை முறைமை அமல்படுத்தபடுமா அல்லது மாகாண சபை முறைமை நீக்கப்படுமா போன்ற கேள்விகள் தற்போது பல்வேறு வகையிலும் எழுந்திருக்கின்றன. இது தொடர்பாக ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ச்சியாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். ஒருசிலர் 13 ஆவது திருத்தம் நீக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றனர். சிலர் 13ஆவது திருத்தச்சட்டம் பலப்படுத்தப்பட வேண்டும் என்று கூறுகின்றனர். மற்றுமொரு தரப்பினர் 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் சென்று ஒரு புதிய அரசியல் தீர்வு முன்வைக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டு வருகின்றனர். இவ்வாறான பல்வேறு கருத்துக்கள் பல வழிகளிலும் வெளியிடப்பட்டு வருவதை காணமுடிகிறது. ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா அண்மையில் இது தொடர்பாக கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

அதாவது இந்த விவகாரம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா புதிய அரசியலமைப்பை உருவாக்கும் போது தமிழ் பேசும் மக்களுக்கான தேசிய இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வை கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும். காரணம் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் தேசிய பிரச்சினையை மீண்டும் 50 வருடங்களுக்கு பின்கொண்டு செல்லக்கூடாது. அதில் அர்த்தம் இல்லை. நாம் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் இறுதியாக வந்த பஸ்ஸை தவறவிட்டு விட்டோம். இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து ஆட்சி அமைத்து இருந்த கட்டத்தில் இந்த பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண முடியுமாக இருந்தது. ஆனால் அப்போது வந்த இறுதி பஸ்ஸை நாம் தவற விட்டோம். அதற்கான பொறுப்பை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். கூட்டமைப்பும் அதற்கு காரணமாகும். அதன் பொறுப்பை அவர்கள் ஏற்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும்போது தமிழ் பேசும் மக்களுக்கான தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமொன்று உள்ளடக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதற்காக தற்போது பயன்படுத்தக்கூடிய மிக முக்கிய ஆயுதமாக மாகாண சபை முறை காணப்படுகிறது. அதனை வெள்ளையானை என விமர்சனம் செய்தாலும் கூட மாகாண சபை சிறந்ததாகும். என்னை பொறுத்தவரை மாகாணசபை ஒரு சிறந்த முறையாக காணப்படுகிறது. அதில் சில பிரச்சினைகள் இருக்கலாம். அவற்றை பேச்சுவார்த்தை நடத்தி தீர்த்துக்கொள்ள முடியும். அதனால் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் போது தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த அணுகுமுறை மிக அவசியமாக இருக்கின்றது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அந்தவகையில் ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா சில முக்கியமான விடயங்களை பகிர்ந்திருக்கிறார். அதாவது கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் இந்த புதிய அரசியலமைப்பை உருவாக்குதல் அல்லது தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஒரு சந்தர்ப்பம் காணப்பட்டாலும் கூட அதனை கடந்த நல்லாட்சி அரசாங்கம் தவறவிட்டதாகவும் இதற்கு பல்வேறு தரப்பினர் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார். உண்மையில் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் சிறந்த முறையில் காணப்பட்டது என்பதை சகலரும் ஏற்றுக்கொள்கின்றனர். காரணம் வரலாற்றில் முதல் தடவையாக இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கத்தைஅமைத்திருந்தன. அதன் ஊடாக தேசிய பிரச்சினைக்கான தீர்வை காண்பதற்கான ஒரு சந்தர்ப்பம் காணப்பட்டது. ஆனால் அந்த தேசிய அரசாங்கத்தை அமைத்திருந்த தரப்புக்கள் சரியான முறையில் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இந்தநிலையிலேயே தற்போது புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுகின்ற நிலையில் அதன் ஊடாக அரசு தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வை உள்ளடக்கிவிட வேண்டும் என்ற கோரிக்கை வலுவாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

முக்கியமாக தமிழ் தேசிய கட்சிகளுடன் அரசாங்கம் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தி இது தொடர்பாக ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தவேண்டும் என்ற விடயமும் வலியுறுத்தப்படுகின்றது. ஆனால் அரசாங்கம் இதுவரை தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இந்த விடயம் குறித்த பேச்சுக்களை நடத்தவில்லை. ஏற்கனவே ஒரு முறை தமிழ் தேசிய கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏற்பாடாகி இருந்தது. ஆனால் அந்தப் பேச்சுவார்த்தை ரத்துச் செய்யப்பட்டது. இந்தநிலையில் அரசியல் தீர்வு புதிய அரசியலமைப்பில் நிச்சயமாக உள்ளடக்கப்பட வேண்டும். ஏழு தசாப்த காலமாக தமிழ் பேசும் மக்கள் தமக்கான ஒரு அரசியல் அதிகாரப் பகிர்வில் அமைந்த தீர்வை கோரி வருகின்றனர். அதற்கான முயற்சிகள் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட போதிலும் கூட அவை வெற்றிபெறவில்லை. இந்நிலையில் அந்த மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும். அது அந்த மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்வதாக அமைய வேண்டியது மிக அவசியமாகும்.

இது தொடர்பில் அரசாங்கம் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். அதன் பின்னர் தென்னிலங்கைக் கட்சிகளுக்கு அது தொடர்பாக தெளிவுபடுத்தலை மேற்கொள்வது மிக முக்கியமானதாக அமையும். தற்போது புதிய அரசியலமைப்பை உருவாக்குவதானது அரசியல் தீர்வை காண்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. அந்த சந்தர்ப்பத்தை வடகிழக்கு தென்னிலங்கை என சகல அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் அனுபவசாலிகளும் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# டொலர் நெருக்கடியை சமாளிக்க சர்வதேச நாணய நிதியத்தை நாடும் நோக்கமில்லை

## அடுத்துவரும் மாதங்களில் அத்தியாவசிய பொருள் இறக்குமதி தடைப்படாது

தற்போது சர்வதேச நாணய நிதியத்திடம் நீண்ட கால கடன் கட்டத்துக்கு செல்ல வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. அவ்வாறு செல்லும்போது பாதகமான நிலைமை ஏற்படும். ஒரு நாடாக பாதகமான நிலைமைக்கு நாம் செல்லக்கூடாது. மேலும் எதிர்வரும் மாதங்களில் அத்தியாவசிய பொருள் இறக்குமதி தொடர்பில் எந்த பிரச்சினையும் வராது.

அதற்கான நடவடிக்கைகளை நிச்சயமாக எடுப்போம் என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய டொலர் நெருக்கடி விவகாரம் தொடர்பில் கேசரிக்கு வழங்கிய விஷேட செவ்வியிலேயே அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டார். செவ்வியின் விபரம் வருமாறு,

### மத்திய கிழக்கு நாடுகள் பலவற்றுடன் நாணய பரிமாற்று திட்டங்கள்

**கேள்வி: நாடு எதிர் கொண்டிருக்கின்ற டொலர் நெருக்கடி நிலைமை தற்போது எவ்வாறு இருக்கின்றது?**

**பதில்:** பல்வேறு தரப்பினரும் இதனை நெருக்கடி நெருக்கடி என்று கூறினாலும் இங்கு உண்மையில் நெருக்கடி ஒன்று இல்லை. தற்போதைய சூழலில் சகலரும் தமது வேலைத் திட்டங்களை மேற்கொண்டு செல்ல கூடிய சந்தர்ப்பம் காணப்படுகிறது. சில சில சிறிய அளவிலான தடைகள் இருந்தாலும் அது நெருக்கடியை நோக்கி நகரவில்லை. மிக முக்கியமாக சகலவிதமான அத்தியாவசிய பொருட்களையும் தற்போது இறக்குமதி செய்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. அப்படிப் பார்க்கும்போது எங்கும் எந்தவித மான ஒரு நெருக்கடியும் தெரியவில்லை. சகலரும் தமது கடமையை எவரும் பதற்றப்படாமல் தமது செயற்பாடுகளை பரபரப்பின்றி பதற்றம் இன்றி செய்து கொண்டு போனால் அது ஒரு பிரச்சினையாக யாருக்கும் தெரியாது.

**கேள்வி:எப்படி இருப்பினும் எமக்கான ஒரு டொலர் பற்றாக்குறை இருக்கின்றமையை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. எதிர்வரும் காலங்களில் டொலர் உள்வருகையை அதிகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எவ்வாறு காணப்படுகின்றன?**

**பதில்:**தற்போது ஏற்றுமதி வருமானம் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. அத்துடன் ஏற்றுமதி மூலம் கிடைக்கின்ற நிதியை புதிய சட்டங்களை கொண்டு வந்து அவற்றை ரூபாவாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளில் பணிபுரிகின்ற இலங்கை தொழிலாளர்கள் அனுப்புகின்ற அந்நிய செலாவணியை அதிகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்காக புதிய திட்டங்களை நாங்கள் கொண்டு வந்திருக்கின்றோம். அவை தற்போது நடைமுறையில் செயற்படுத்தப்படுகின்றன. அதுமட்டுமன்றி இலங்கையில் தற்போது எம்மால் பயன்படுத்தப்படாமல் இருக்கின்ற சில வளங்களை வெளிநாட்டு நேரடி முதலீடுகளை மேற்கொண்டு டொலர் உள் வருகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் அரசாங்கம் நீண்டகால கடன்களைப் பெற்றுக் கொள்வதற்காக பல பேச்சுவார்த்தைகளை பல்வேறு நாடுகளுடன் மேற்கொண்டு வருகின்றது. மத்தியவங்கி இன்னும் பல நாடுகளின் மத்திய வங்கியுடன் நாணய பரிமாற்று திட்டங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கிருக்கின்றது. தற்போது இலங்

### 2022 ஆம் ஆண்டில் 4.4 பில். டொலர் கடன்களை செலுத்தமுடியும்

கைக்கு வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்பும் போக்கு அதிகரித்து இருக்கின்றது. இவை நடைபெறுவதுடன் சுற்றுலாத் துறையும் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு கொண்டிருக்கின்றது. அதனால் விரைவில் இந்த பிரச்சினையில் இருந்து வெளியே வரமுடியும். நீண்டகாலம் செல்லாமல் இதிலிருந்து நாம் வெளியே வர முடியும்.

**கேள்வி:வெளிநாடுகளில் பணிபுரிகின்ற இலங்கையர்கள் அனுப்புகின்ற அந்நிய செலாவணி குறைவடைந்து இருப்பதாக அறிவித்திருந்தீர்கள். அது எவ்வாறு நடைபெறுகிறது?**

**பதில்:** இது ஒரு சில சட்ட விரோதமான முறைகளில் இடம் பெற்றதனால் எமக்கான உள்வருகை குறைவடைந்தது. ஹவாலா போன்ற முறைகளின் ஊடாக பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன. எனினும் அவற்றை மீள அதிகரித்துக் கொள்வதற்காக நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

**கேள்வி: நிலைமை எவ்வாறு காணப்பட்டாலும் கூட வெளிநாட்டு கையிருப்பு மிகவும் குறைவாக காணப்படுவதால் எதிர்வரும் காலங்களில் ஒரு மாதத்திற்கு இறக்குமதி செய்வதற்கு கூட எம்மிடம் வெளிநாட்டு செலாவணி இல்லை. ஆனால் மத்திய**



**வங்கி ஆளுநர் நெருக்கடி இல்லை என்று கூறுகின்றார் என்று எதிர்க்கட்சிகள் கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனவே?அதற்கு உங்கள் பதில் என்ன ?**

**பதில்:** அவர்கள் எதிர்க்கட்சியில் இருப்பதால் அவ்வாறு கூறிக் கொண்டிருக்கின்றனர். இந்த பொருளாதார துறை வீழ்ச்சியடைந்து செல்ல வேண்டும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. எமது நாட்டை வெளிநாடுகளுக்கு சிக்கவைத்து விடவே எதிர்க்கட்சிகளுக்கு தேவையாக இருக்கின்றது. அது நன்றாக தெளிவாக தெரிகின்றது. நாம் ஒவ்வொரு நாளும் அதனைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அதற்கு நாம் பதற்றமடைய வேண்டிய அவசியம் இல்லை. நாம் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றோம்.

**நேர்கண்டவர்: ரொபட் அன்டனி**

தற்போது கூட பல நெருக்கடிகளை சந்தித்து மீண்டுவருகிறோம். எதிர்க்கட்சியினர் கூறுகின்ற விடயங்கள் பெரும்பாலும் புஷ்வாணமாகவே மாறிக் கொண்டிருக்கின்றன. அதனை நாங்கள் பல இடங்களில் கண்டு இருக்கின்றோம். 2020ஆம் ஆண்டில் கடன்களை செலுத்த முடியாது என்று கூறினர். பின்னர் 2021ஆம் ஆண்டில் கடன் செலுத்த முடியாது என்று கூறினர். தற்போது 2022ஆம் ஆண்டில் கடன் செலுத்த முடியாது. பொருளாதாரம் விழுந்துவிடும் என்று கூறுகின்றனர். அவ்வாறு பொருளாதாரம் வீழ்ச்சி அடைவதை எதிர்க்கட்சியினர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு அதுதான் தேவையாக இருக்கின்றது. அது நடக்காமல் இருக்கும் போது அவர்களுக்கு கஷ்டமாக இருக்கின்றது. அதனால் என்னை அவர்கள் தொடர்ச்சியாக



எம்மை விமர்சித்து கொண்டிருக்கின்றனர்.

**கேள்வி: தற்போதைய இந்த சூழலில் இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு எவ்வாறு காணப்படுகின்றது?**

**பதில்:**2019 ஆம் ஆண்டில் எமது வெளிநாட்டு கையிருப்பானது 7 பில்லியன் டொலர்களாக இருந்தது. எனினும் நேற்று 2019 ஆம் ஆண்டில் நாம் 7 பில்லியன் டொலர்களை கடனாக செலுத்தி இருக்கின்றோம். அப்படியானால் எமது வெளிநாட்டு கையிருப்பானது பூச்சியமாக இருக்கவேண்டும் அல்லவா? ஆனால் நாம் மீண்டும் 2020 ஆம் ஆண்டில் 7 பில்லியன் டொலர்களை கடனாக செலுத்தினோம். 2021 ஆம் ஆண்டில் மீண்டும் நாங்கள் 6.5 பில்லியன் டொலர்களை கடனாக செலுத்தி இருக்கின்றோம். அப்படியானால் தற்போது வெளிநாட்டு கையிருப்பு மறைபெறுமானத்தில் அல்லவா இருக்கவேண்டும். ஆனால் தற்போது எம்மிடம் 3 பில்லியனுக்கு நெருங்கிய வகையில் வெளிநாட்டு கையிருப்பு காணப்படுகிறது. அதனை மட்டும் கவனத்தில் கொள்ளாமல் எமது உள்வருகை மற்றும் வெளிச்செல்கையை நாம் கருதிக் கொள்வது அவசியமாகும். எவ்வளவு வெளிநாட்டு நிதி உள்வருகின்றது. எவ்வளவு நிதி வெளிச்செல்கின்றது என்பதை நாம் பார்க்க வேண்டும். அதனை தான் நாம் தற்போது சரியான முறையில் முகாமை செய்துகொண்டு செல்கின்றோம். எமது வெளிநாட்டு கையிருப்பின் அளவு பல சந்தர்ப்பங்களில் கூடும் குறையும். அதனைவிட முக்கியமானதாக எமக்கு உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் நிதியின் போக்கே காணப்படுகின்றது. அவற்றை நாம் சரியான முறையில் முகாமை செய்யும் பட்சத்தில் இந்த பிரச்சினையை எதிர்கொள்ள முடியும். அதைத்தான் தற்போது செய்து கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி:அப்படியென்றால் எதிர்வரும் மாதங்களில் எமக்கு இறக்குமதி தொடர்பான அதாவது அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி தொடர்பான பிரச்சினைகள் எதுவும் வராது என்று நீங்கள் உறுதியாக கூறுகிறீர்களா?**

**பதில்:**எதிர்வரும் மாதங்களில் அத்தியாவசிய பொருள் இறக்குமதி தொடர்பில் எந்த பிரச்சினையும் வராது. அதற்கான நடவடிக்கைகள் நிச்சயமாக எடுப்போம். தற்போது கூட நாம் அதனை செய்திருக்கின்றோம். இதுவரை கூட எம்மால் இதனை கொண்டு செல்ல முடியாது என்று கூறினார்கள். ஆனால் நாங்கள் செய்து காட்டியிருக்கின்றோம்.

**கேள்வி: 2022 ஆம் ஆண்டிலும் நாம் 4.5 பில்லியன் டொலர்களை கடனாக செலுத்த வேண்டி இருக்கிறது. அதில் எவ்வாறான நிலைமையை எதிர் கொள்வீர்கள்?**


**பதில்:**கடன்களை செலுத்த முடியும். நாம் தற்போது கூட இவற்றை மதிப்பீடு செய்து இருக்கின்றோம். நாம் தற்போது மதிப்பிட்டிருக்கின்ற வகையில் எமக்கான டொலர்கள் வருகின்ற போது நாம் கடன்களை செலுத்த முடியும். இது தொடர்பாக யாரும் பதற்றம் அடைய வேண்டிய அவசியமில்லை. எமக்கான ஏற்றுமதி வருமானம் இருக்கின்றது. சுற்றுலாத்துறையும் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு கொண்டிருக்கிறது. அதனுடன் அதிகமான வெளிநாட்டு செலாவணி உள்வரும். இந்த விடயத்தில் பதற்றமடையாமல் இருக்கலாம். அதனை முகாமைத்தும் செய்து கொள்ள முடியும்.

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

## பொன் மொழி

**பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால், அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்.**
**—சுவாமி விவேகானந்தர்**

## திருவருகை காலம்



மனமாற்றம் என்பது நம் உள்ளத்தில் நிகழ்கின்ற மாற்றம். பழைய சிந்தனைப் பாணிகளைக் கைவிட்டு விட்டு, நலமான புதிய சிந்தனை முறைகளை நாம் உள்ளத்தில் உருவாக்க வேண்டும். ஆனால் அத்தகைய மாற்றம் உள்ளத்தோடு மட்டுமே நின்றுவிடாது. மாறாக நம் வாழ்வில் செயல்முறையில் வெளிப்படும். எனவேதான் புனித அருளப்பர் "மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்" (மத் 3:8) என்றார்.

"இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும்; உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்" என்று புனித அருளப்பர் மக்களுக்கு அறிவுறுத்தினார். அந்த அறிவுரை நமக்கும் பொருந்தும். மண்ணுலகின் நலன்கள் அனைத்து மனிதருக்கும் பொதுவானவை என்பதை எல்லோரும் கருத்தில் கொள்ளவேண்டும். இந்நலன்களைப் பயன்படுத்தும் மனிதர்கள் முறையான வழியில் தாம் உடைமையாகக் கொண்டிருக்கும் பொருள்களைத் தமக்கே உரியனவாக மட்டுமன்றி, எல்லோருக்கும் பொதுவானவையாகவும் கருதவேண்டும். அதாவது, தமது உடைமைகள் தமக்கு மட்டுமன்றி, பிறருக்கும் பயன்படுவதற்காகவே உள்ளன எனக்கொள்ள வேண்டும். இதையே இன்றைய உலகின் திருச்சபை நமக்கு வலியுறுத்துகின்றது.

ஏ.அபி

# நாளைய தினம் தொடர்பில் நிச்சயமற்ற நிலையில் மக்கள்

## - ஐ.தே.க. பிரதி தலைவர் ருவன் விஜேவர்தன

(எம்.மனோசித்ரா)

நாட்டில் 1.5பில்லியன் டொலர் மாத்திரமே கையிருப்பில் உள்ளது. இதில் மருந்து மற்றும் எரிபொருள் இறக்குமதிக்கான நிதியை ஒதுக்கினால் இம்மாத இறுதியில் 1100 மில்லியன் மாத்திரமே எஞ்சும். அடுத்த ஆண்டு இறக்குமதித் தேவையுடன் ஒப்பிடும்போது, அடுத்த ஆண்டில் முதல் இரு வாரங்களுக்குக் கூட இந்த தொகை போதுமானதாக இருக்காது என்று ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

சுபீட்சத்தை இலக்காகக் கொண்டு தற்போதைய அரசாங்கத்திற்கு அதிகாரத்தை வழங்கிய மக்கள் தற்போது நாளைய தினம் குறித்து நிச்சயமற்ற நிலையில் உள்ளனர். எதிர்வரும் இரு மாதங்களுக்குள் 5 பில்லியன் டொலரேனும் கிடைக்கப் பெறாவிட்டால் நாட்டை கொண்டு செல்வது மிகக்கடினமாகும் என்றும் ருவன் விஜேவர்தன சுட்டிக்காட்டினார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கட்சி செயற்பாட்டாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சுபீட்சத்தை இலக்காகக்கொண்டு தற்போதைய அரசாங்கத்திற்கு அதிகாரத்தை வழங்கிய மக்கள் தற்போது நாளைய தினம் குறித்து நிச்சயமற்ற நிலையில் உள்ளனர். எப்படி வாழ்வது என்ற எண்ணம் மக்களுக்கு தோன்றியுள்ளது. அரசாங்கத்தை நியமித்த 69 இலட்சம் மக்கள் மாத்திரமின்றி, வாக்களிக்காத மக்களும் இந்தப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்

அரசாங்கத்தின் திட்டமிடல் அற்ற வேலைத்திட்டங்களின் காரணமாகவே மக்கள் இவ்வாறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். அரசாங்கத்திடம் பொருளாதார முகாமைத்துவம் குறித்த எவ்வித அறிவும் இல்லை. சகல விடயங்களுக்கும் கொவிட் தொற்றை காரணமாகக் கூறி அதன் காரணமாகவே பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததாகவும் கூறுகின்றனர். எவ்வாறிருப்பினும் இலங்கையை விட கொவிட் தொற்றால் பாரியளவில் பாதிக்கப்பட்ட நாடுகள் கூட பொருளாதாரத்தை சீராக முகாமைத்துவம் செய்துள்ளன.

அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணம் டொலர் இன்மையே ஆகும். தற்போது நாட்டில் 1.5 பில்லியன் மாத்திரமே கையிருப்பில் உள்ளது. இதில் மருந்து மற்றும் எரிபொருள் இறக்குமதிக்கான நிதியை ஒதுக்கினால் இம்மாத இறுதியில் 1100 மில்லியன் மாத்திரமே எஞ்சும். அடுத்த ஆண்டு இறக்குமதித் தேவையுடன் ஒப்பிடும்போது, அடுத்த ஆண்டு இரண்டு வாரங்களுக்குக் கூட இந்த தொகை போதுமானதாக இருக்காது.

வரலாற்றில் அந்நிய செலாவணி இருப்பு இவ்வாறு வீழ்ச்சியடைந்தமை இதுவே முதன் முறையாகும். எதிர்வரும் இரு மாதங்களுக்குள் 5 பில்லியன் டொலரேனும் கிடைக்கப் பெறாவிட்டால் நாட்டை கொண்டு செல்வது மிகக்கடினமாகும். இது நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் நேரடியாகப் பாதிக்கும். இதன் பிரதிபலன் மீண்டும் வெளிப்பட ஆரம்பித்துள்ளது. தற்போது மீண்டும் பால்மா தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இரசாயன உரத்திற்கு தடை விதித்த அரசாங்கம் தற்போது அந்த தடையை நீக்கியுள்ளது. எனினும் இறக்குமதி நிறுவனங்கள் உரத்தை இறக்குமதி செய்யவில்லை. அதற்கான காரணம் டொலர் தட்டுப்பாடு மற்றும் உலகச் சந்தையில் இரசாயன உரத்தின் விலை உயர்வடைந்துள்ளமையாகும். இயற்கை உரம் என்ற கருத்தாக்கத்தால், விவசாய பயிர்களின் விளைச்சல் குறைந்துள்ளது. அதனால் மரக்கறிகளின் விலைகளும் உயர்வடைந்துள்ளன.

உலக சந்தையில் யூரியா உரத்தின் விலை உயர்வடைந்துள்ளமையால் அதனை உபயோகித்து நெல் பயிரிடப்பட்டால் அரிசியின் விலை 500 ரூபா வரை அதிகரிக்கும் என்று கடந்த வாரம் விவசாயத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். எவ்வாறிருப்பினும் தற்போது நாட்டில் 25 கிலோ கிராம் யூரியா உரம் 9000 –12,000 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

அடுத்த பெரும்போகத்தின் பின்னர் அரிசியின் விலை பாரியளவில் அதிகரிக்கக் கூடிய அபாயமுள்ளது. அனைத்து மரக்கறிகளினதும் கிலோ ஒன்றுக்கான விலை 600 ரூபா வரை உயர்வடைந்துள்ளது. இதேபோன்று கருவாடு உள்ளிட்ட மீன் உணவு பொருட்களின் விலைகளும் உயர்வடைந்துள்ளன. மக்களால் எவ்வாறு வாழ முடியும்? அமைச்சர்கள் இவற்றை கவனத்தில் கொள்வதில்லை. காரணம் அவர்களுக்கு தேவையான உணவு, நீர் என்பன தடையின்றி கிடைக்கின்றன.

ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியில் மக்கள் மூன்று வேளையும் உணவு உண்ணக் கூடிய சூழல் காணப்பட்டது. பணம் காணப்பட்டது. எமது ஆட்சியில் மூன்று வேளையும் உண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்த மக்கள் அந்த வாழ்க்கையை விடவும் சுபீட்சமான வாழ்க்கையை எதிர்பார்த்து இன்று நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். நாம் ராஜபக்ஷாக்களின் கடனை செலுத்தி, மக்களுக்கு வருமானம் வரக் கூடிய சூழலை ஏற்படுத்தினோம்.

எனவே தற்போதைய அரசாங்கம் செலுத்திக் கொண்டிருப்பது நாம் பெற்ற கடனை அல்ல. அதுவும் ராஜபக்ஷ அரசாங்கம் பெற்ற கடனே ஆகும். டொலர் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு ஐ.தே.க தலைவர் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்திய போதிலும், அரசாங்கம் அதனை கவனத்தில் கொள்ளாமல் செயற்பட்டமைக்கான காரணம் என்ன? சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெறும் கடனில் மோசடி செய்ய முடியாது.

மக்கள் நாட்டை கைவிட்டுச் செல்லும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. நாட்டை விட்டுச் செல்ல முடியாதவர்கள் உண்ண உணவின்றி சிரமத்துடன் வாழ்கின்றனர். ஐக்கிய தேசிய கட்சியால் மாத்திரமே நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்பது வரலாற்று செயற்பாடுகள் ஊடாக தெளிவாகிறது. ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் பொருளாதாரம் மேம்பட்டது. எனினும் இந்த அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றிய அனைத்து சந்தர்ப்பங்களிலும் மக்களின் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்தது.

சர்வதேச தொடர்புகள் கொண்ட ஒருவரிடம் ஆட்சியை ஒப்படைத்தால் மாத்திரமே நாட்டிலுள்ள தற்போதுள்ள டொலர் நெருக்கடிக்கு தீர்வு காண முடியும். அந்த இயலுமை உள்ள ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே. வேறு எவருக்கும் அந்த வாய்ப்பு இல்லை. ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆட்சியை கையளித்தால் நாடு அபிவிருத்தியடையும். இந்த நிலைப்பாட்டை நாம் கிராமமட்டத்திலுள்ள மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் என்றார்.

# உலகில் மிகப் பெரிய நீலக்கல் இலங்கையில் கண்டுபிடிப்பு



(எம்.மனோசித்ரா)

உலகில் மிகப் பெரிய நீலக்கல் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இரத்தினபுரி பட்டுகெதர பிரதேசத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த நீலக்கல்லின் எடை 310 கிலோ கிராம் ஆகும். இதற்கு 'ஆசியாவின் ராணி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையினால் இந்த நீலக்கல்லிலிருந்து ஐந்து மாதிரிகள் பெறுகிக்கொள்ளப்பட்டு, அவை இரத்தினபுரியிலுள்ள இரத்தினவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் குறித்த நீலக்கல் உலகிலேயே மிகப் பெரிய நீலக்கல் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை அறிவித்துள்ளது.

அத்தோடு இது மிகவும் அரியவகை நீலக்கல் என்பதோடு, உலகில் எந்தவொரு பகுதியிலும் இதுவரையில் இவ்வாறானதொரு நீலக்கல் கண்டுபிடிக்கப்படவில்லை என்று அதனை ஆய்விற்கு உட்படுத்திய இரத்தினவியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இரத்தினவியலாளர்களான எச்.ஜே.ஹேமசந்திர, எச்.எஸ்.விக்கிரமசிங்க மற்றும் இரத்தினவியல் ஆய்வகத்தின் ஆலோசகர் கலாநிதி பிரஷான் பிரான்சிஸ் ஆகியோரால் குறித்த நீலக்கல் தொடர்பிலானதரவுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

# ஜனவரி 11ஆம் திகதி புத்தாண்டின் முதலாவது பாராளுமன்ற அமர்வு

எதிர்வரும் 2022ஆம் ஆண்டுக்கான பாராளுமன்ற அமர்வுகளை எதிர்வரும் ஜனவரி 11ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய டிசம்பர் 10ஆம் திகதி வரவு செலவுத்திட்ட விவாதம் முடிவடைந்த பின்னர் எதிர்வரும் ஜனவரி 11, 12 மற்றும் 13ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 11ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்குப் பாராளுமன்றம் கூடவிருப்பதுடன் முற்பகல் 10.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மு.ப 11.00 மணி முதல் பி.ப 4.30 மணி வரை மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் அரசாங்கத்தின் தினப் பணிகளின் பின்னர் ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் இரண்டாவது வாசிப்பைத் தொடர்ந்து சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படவிருப்பதாகவும் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார். ஜனவரி 13ஆம் திகதி முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தொடர்பான அனுதாபப் பிரேரணை மீதான விவாதத்தை நடத்த இங்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

# பண மோசடி தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் கைது

(எம்.மனோசித்ரா)

பண மோசடி தொடர்பில் 5 சந்தர்ப்பங்களில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வந்த சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

4 இலட்சம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக கொஹூவலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது. இந்த முறைப்பாடு தொடர்பாக நுகேகொட குற்ற விசாரணைப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துருகிரிய பொலிஸ் பிரிவில் ஒருவல பிரதேசத்தில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு கடுவலை மற்றும் அவிசாவளை நீதவான் நீதிமன்றங்களினால் 5 பிடியாணை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த சந்தேகநபர் 47 வயதுடைய தெடிகமுவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். நுகேகொட குற்ற விசாரணைப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.


S&S SINCE 1992

LTL டிரான்ஸ்போமர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஏல விற்பனை

அகற்றப்பட்ட செப்பு வயர்க் கம்பி கழிவுத் துண்டுகள், கழிவு இரும்புகள், செப்புக் கழிவுகள், அகற்றப்பட்ட செப்புத் தகட்டுத் துண்டுகள், உலோகக் கழிவுகள், உருக்கு வயிர்க் கம்பித் துண்டுகளும் உருக்கு பனல் உறைகளும் மற்றும் கொள்கலன்களுக்குப் பொருத்தமான அலுமாரிகள் என்பனவும் மொத்தமாக விற்பனைக்கு

2021 டிசம்பர் 17 வெள்ளிக்கிழமை

கொழும்பு 07, பௌத்தாலோக மாவத்தையில் BMICH இன் மிஹிலக்க மெதுர மண்டபத்தில்

மு.ப 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

பார்வையிடல் - 2021 டிசம்பர் 15 புதன் மற்றும் 16 வியாழன் LTL டிரான்ஸ்போமர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் இல. 154/11, புகையிரத நிலைய வீதி, அங்குலான, மொறட்டுவ (காலை 9.00 முதல் மாலை 4.00 மணி வரை)

மேலதிக விபரங்களுக்கு www.sandslanka.com என்ற எமது இணைய தளத்தைப் பார்க்கவும்.

விற்பனை நிபந்தனை

- சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் ஏலவிற்பனை நடைபெறும்.
- பொருட்களைப் பார்வையிட கொள்வனவாளர்கள் தொகுதி அடிப்படையில் அனுமதிக்கப்படுவார்கள்.
- [illegible]
- [illegible]
- [illegible]
- LTL டிரான்ஸ்போமர்ஸ் நிறுவனம் / ஏலதாரரின் தீர்வே இறுதி முடிவாகும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம

ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்

011 2671468 www.sandslanka.com




# கூட்டு ஒப்பந்தம் மீண்டும் வேண்டும்

## தொழிலாளர்கள் போராட்டம் – இ.தொ.கா.ஆதரவு





(அட்டன் நிருபர்)

தோட்ட நிர்வாகம் மற்றும் கம்பனிகளுக்கு எதிராகவும், தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க கூட்டு ஒப்பந்தம் மீண்டும் வேண்டும் என வலியுறுத்தியும், தோட்டத் தொழிலாளர்களால் லிந்துலை நகரில் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளும் பங்கேற்று, கூட்டு ஒப்பந்தத்துக்காக குரல் எழுப்பினர்.

லிந்துலை நகரில் நடைபெற்ற இப்போராட்டத்தில் டயகம, தலவாக்கலை, கொட்டகலை, லிந்துலை மற்றும் ஏனைய சில தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

இ.தொ.கா.வின் பிரதித் தலைவர் அனுஷியா சிவராஜா, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சக்திவேல், கொட்டகலை, தலவாக்கலை பிரதேச சபைகளை சேர்ந்த உறுப்பினர்கள் உட்பட இ.தொ.கா.வின் பிரதிநிதிகளும் இப்போராட்டத்தில் பங்கேற்று, தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இப்போராட்டத்தில் பங்கேற்ற மக்கள், தோட்ட நிர்வாகம் மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்களின் கெடுபிடிகளை கண்டித்ததுடன், தமக்கு உரிய வகையில் சம்பள கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

கொழுந்தின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. அரை நாள் பெயர்தான் விழுகின்றது. ஆயிரம் ரூபா கிடைத்தும் பயன் இல்லை என தொழிலாளர்கள் தமது உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தினர்.

கூட்டு ஒப்பந்தம் இல்லாததால்தான் தமக்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளது என சுட்டிக்காட்டிய மக்கள், அந்த ஒப்பந்தம் மீண்டும் வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

# நான் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுவது கிடையாது

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



(அட்டன் நிருபர்)

நான் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுவது கிடையாது. அரசியலைவிடவும் சிறந்த நிர்வாகத்தையே செய்ய விரும்புகின்றேன். அதனால்தான் கடந்த ஆட்சியில் முழுமைப்படுத்தப்படாத வீட்டுத் திட்டங்களை முழுமைப்படுத்தி மக்களுக்கு வழங்கி வருகின்றேன். எனது அமைச்சு ஊடான புதிய வேலைத்திட்டங்கள் ஜனவரி முதல் ஆரம்பமாகும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

எதையும் செய்யவில்லை என சிலர் விமர்சனங்களை முன்வைக்கின்றனர். புதுமையாக நான் எதையாவது செய்வதாக இருந்தால் அரசியல் பழிவாங்கலில் தான் ஈடுபட்டிருக்க வேண்டும். அதை நான் செய்யவில்லை. குறைவாக முழுமை பெறாத நிலையில் இருந்த திட்டங்களை முழுமைப்படுத்துவதில் தீவிரம் காட்டினேன்.

நான் அமைச்சுப் பதவியை ஏற்கும்போது அந்த அமைச்சு 2 ஆயிரத்து 300 மில்லியன் ரூபா கடன் சுமையில் இருந்தது. நல்லாட்சியின்போது 4 ஆயிரம் இந்திய வீட்டுத் திட்டத்தில் 699 வீடுகள்தான் மக்களிடம் கையளிக்கப்பட்டிருந்தன. நான் அமைச்சுப் பதவியை ஏற்ற பின்னர் ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. எஞ்சியவை இம்மாதத்துக்குள் கையளிக்கப்படும்.

அவர்களால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களை நிறுத்தியிருக்க முடியும். அதனை நாம் செய்யவில்லை. எனது அமைச்சின் புதிய வேலைத்திட்டங்கள் அடுத்தவருடம் முதல் ஆரம்பமாகும்.

அதேவேளை, கூட்டு ஒப்பந்தம் மூலம் நாம் தொழிலாளர்களை பாதுகாத்தோம். ஆனால் அது தொடர்பில் போலி பரப்புரைகளை முன்னெடுத்து எம்மையும் தொழிலாளர்களையும் தூரப்படுத்த முற்பட்டனர். அன்று கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிராக செயற்பட்ட சங்கங்களும், அரசியல் கட்சிகளும் இன்று சந்தா பணத்துக்காக ஒப்பந்தம் வேண்டும் என்கின்றன. எனவே, சுயநல அரசியலை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கை சனத்தொகையில் 10 வீதமானோர் அரச சேவையில் உள்ளனர். கொரோனா நெருக்கடி நிலையால் இனி ஆட்சேர்ப்பு நடக்குமா என தெரியவில்லை. எனவே, நாம் சுயதொழில் பற்றி கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். சிலர் வேலை தேடியே காலத்தை வீணடிக்கின்றனர். சொந்த முயற்சி மீதும் நம்பிக்கை செலுத்த வேண்டும்.

நாம் அபிவிருத்திகளை செய்தாலும் திறப்புவிழா நடத்தி பிரசாரம் செய்யவில்லை. அரசியலைவிடவும் சிறந்த நிர்வாகத்தையே நான் விரும்புகின்றேன் என்றார்.




# பாதிக்கப்பட்டோருக்கு நட்ட ஈடு வழங்க வேண்டும்

## செந்தில் தொண்டமான் கோரிக்கை



எரிவாயு நிறுவனத்திற்கு உடனடியாக தற்காலிக தடை விதிக்க வேண்டும் என்பதுடன், எரிவாயு வெடிப்பு சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உரிய நிவாரணத்தையும் உடனடியாக வழங்க வேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும், பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியாக கடந்த ஒரு மாதகாலமாக பதிவாகும் எரிவாயு வெடிப்பு சம்பவங்களால் அச்சத்துடன் சமையலை மேற்கொள்ளும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் பல குடும்பங்கள் உணவுகள் இல்லாமலும் தவித்துள்ளன.

இலங்கை என்பது ஒரு வெப்ப மண்டல நாடாகும். வெப்ப சமநிலையை பேணும் வகையில்தான் எரிவாயு உற்பத்திகள் இதுவரைகாலமும் இடம்பெற்று வந்தன. குறிப்பாக சிலிண்டர்களில் திரவவாயுவின் கலவை 80 சதவீதமாக காணப்பட்டது. திரவவாயு கலவை 80 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளமையால் தான் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றதாக தகவல்கள் மூலம் அறிய முடிகிறது. திரவவாயு சதவீதத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளமை ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டால் அவ்வாறு திரவவாயு மாற்றத்திற்கான அனுமதியை வழங்கியது யார்?.

எரிவாயு நிறுவனத்திற்கு உடனடியாக தற்காலிக தடை விதிக்கப்பட வேண்டும். இதனால் ஓர் உயிர் ஏற்கனவே பறிபோயுள்ளது. ஆகவே, எரிவாயு வெடிப்பு சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உரிய நிவாரணத்தையும் நிறுவனம் உடனடியாக வழங்க வேண்டும்.

இதேவேளை, திரவவாயு மாற்றப்பட்ட விவகாரம் தொடர்பில் உடனடி விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், பொறுப்புக்கூற வேண்டியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றார்.

# கொட்டகலையில் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவம்



(அட்டன் நிருபர்)

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை டிரேட்டன் தோட்டம் கே.ஓ. பிரிவில் உள்ள வீடு ஒன்றில் எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்த சம்பவம் பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம் நேற்று காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேநீர் தயாரிப்பதற்காக எரிவாயு அடுப்பை பற்ற வைத்துள்ளனர். 5 நிமிடங்களுக்கு பிறகு வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக குறித்த வீட்டைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். மேலும் வெடிப்பை அடுத்து அடுப்பு முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், அதன்பின்னர் எரிவாயு சிலிண்டர் உள்ளிட்ட உபகரணங்களை அகற்ற நடவடிக்கை எடுத்ததாக தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் திம்புள்ள பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



நுவரெலியா வை.எம்.எம்.ஏ சங்கத்தினர் ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நுவரெலியா மாவட்ட செயலகத்தில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சட்ட விதிகளுக்கமைய நடைபெற்றது.
( படம்: நுவரெலியா நிருபர்)

### சங்கமன்கண்டிப் பிரதேசத்தில்

# மக்களின் எதிர்ப்பால் அகற்றப்பட்டது புத்தர் சிலை









(காரைதீவு நிருபர் )

பொத்துவில், சங்கமன்கண்டி தமிழ் கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு வேளை வைக்கப்பட்ட புத்தர் சிலையானது அப்பிரதேச மக்களின் பலத்த எதிர்ப்பு காரணமாக அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது. எனினும் புத்தர் சிலை வைத்திருந்த இரும்புத் தூண்கள் , பௌத்தகொடிகள் அங்கிருந்து அகற்றப்படவில்லை.

பொத்துவில், சங்கமன்கண்டி தமிழ் கிராமத்தில் வெள்ளிக்கிழமை நள்ளிரவு திடீரென வைக்கப்பட்ட புத்தர் சிலையால் அப்பிரதேசத்தில் பதற்றம் நிலவியது. அதாவது சனிக்கிழமை காலைமுதல் இப்பிரதேசத்தில் பதற்றம் நிலவியதுடன், இச்செயற்பாட்டைக்கண்டித்து இப்பிரதேச மக்கள் எதிர்ப்புப்போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

திருக்கோவில், பொத்துவில் பிரதேச பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் என பொலிஸ் உயரதிகாரிகளும் அங்கு குழுமியிருந்தனர்.

இச்சம்பவத்தையறிந்த இப்பிரதேச பொது மக்கள் உட்பட மக்கள் பிரதிநிதிகள் சனிக்கிழமை அதிகாலை 5மணி முதல் அவ்விடத்தில் ஒன்றுகூடி நில ஆக்கிரமிப்பாளர்களின் இச்செயற்பாட்டைக்கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாண்டியடிக்கும் சங்கமன்கண்டிக்கும் இடையிலான பிரதேசத்திலுள்ள காட்டுப்பிரதேசத்திலேயே இவ்வாறு புத்தர் சிலை திடீரென வைக்கப்பட்டுள்ளதுடன் பொத்துவில் பிரதேசத்திலுள்ள் பௌத்த பிக்குகள் சிலரும் அங்கு நின்றிருந்தனர்.

பொதுமக்களின் வேண்டுகோளுக்கமைவாக காலை 9மணியளவில் அங்குவந்த காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் பொலிஸாருடன் பேசிய பின்னர் பொத்துவில் முஹுதுமஹா விகாரை விகாராதிபதி வண.உடதம்பல ரத்னபிரியவுடன் கலந்துரையாடினார்.

இதுகுறித்து காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கூறுகையில்,

இக்கிராமம் 100வீதம் தனித்தமிழ்ப்பிரதேசமாகும். இந்நிலையில் இக்கிராமத்தில் புத்தர்சிலை வைப்பதன் நோக்கம் என்ன? இரவோடிரவாக சிலை வைக்கப்பட்டதனால் இங்கு பதற்றம் நிலவுகிறது. நாம் புத்தரை மதிக்கிறோம்.அவர் பிறப்பால் ஒரு இந்துவாகும்.அவரது போதனைகள் மக்களை நல்வழிப்படுத்துபவையாகும். அவரை வைத்து நாடகமாடுவது முறையல்ல.மதவெறி இந்நாட்டை அழித்துவிடும். ஜனாதிபதி பிரதமருக்கும் இதனை தெரியப்படுத்துகிறோம். நாங்களும் இந்நாட்டுப்பிரஜைகள் தான். இந்நாட்டில் நாம் சுதந்திரமாக வாழ முடியாதா? பௌத்ததுறவிகள் நிதானமாக அமைதியாகபேசவேண்டும். இவ்வாறு சண்டித்தனம் காட்டமுற்படக்கூடாது. இந்துமதகுருவொருவர் தனிச்சிங்கள் பகுதியில் பிள்ளையார் சிலையொன்றைக் கொண்டுவைத்தால்பௌத்தர்கள் சும்மா விடுவார்களா என்றும் கேள்வியெழுப்பினார்.

வண.உடதம்பல ரத்னபிரிய தேரர் கூறுகையில்,இது பௌத்தநாடு. நாம் எங்கும் சிலை வைப்போம். இந்த இடத்தில் 2500ஆண்டுகளுக்கு முன்னும் சிங்களபௌத்தர்கள் வாழ்ந்துள்ளனர். அருகில் தொல்பொருள் இடமுள்ளது.பௌத்தர்கள்தான் இவ்விடத்தின் பூர்வீகமக்கள். சிலையை அகற்றமுடியாது என்றார்.

தவிசாளர் ஜெயசிறில் தேரருடன் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததையடுத்து சிலைக்கு முன்பாக தரையில் அமர்ந்து சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

அவருடன் திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் இ.வி.கமலராஜன், பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் ஏ.றஹீம், உபதவிசாளர் பி.பார்த்தீபன், உறுப்பினர் த.சுபோதரன் மற்றும் பலரும் இணைந்துகொண்டனர்.

இந்நிலையில் முற்பகல் 11.30மணியளவில் பொத்துவில் பிரதேச செயலாளர் சந்துருவன் சம்பவ இடத்துக்கு வந்து பௌத்த பிக்குமாருடன் கலந்துரையாடினார். இந்நிலையில் இவ்விடயம் தொடர்பாக அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் உடன்தொடர்புகொண்டு குழப்பத்தை தவிர்க்குமாறும் சிலையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச செயலாளர் மற்றும் பொலிஸாரை அறிவுறுத்தினார்.

மேலிடத்து உத்தரவுக்கமைவாக புத்தர் சிலை அகற்றப்படும் என பொதுமக்களிடம் பொலிஸ் உயரதிகாரி,பிரதேச செயலாளர் சந்தருவன் ஆகியோர் பிற்பகல் 12.15மணியளவில் கூறினர். எனவே குழப்பமின்றி கலைந்துசெல்லுங்கள் என்றனர். சிலை அகற்றப்படும்வரை நாம் இங்கிருந்து செல்லமாட்டோம்.சுட்டால் சுடுங்கள் என்று அங்கு குழுமியிருந்த தமிழ் மக்கள் அடம்பிடித்தனர்.

அச்சமயம் பிக்குமாரை அங்கிருந்து வெளியேறிச் செல்லுமாறு பொலிஸார் கேட்க, அவர்கள் அங்கிருந்து சிலையையும் பௌத்தகொடிகளையும் அகற்றாமலே பிற்பகல் 1மணியவில் வெளியேறிச் சென்றனர்.அதனையடுத்து 1.30மணியளவில் பொதுமக்களும் வெளியேறினர்.

இறுதியாக இரவுவரை பொலிஸார் இருவரும் அவ்விடத்தில் நின்றிருந்தனர். ஏனைய அனைவரும் கலைந்துசென்றதுடன் இரவு விசேட அதிரடிப்படையினர் காவலுக்கு நின்றிருந்த நிலையில் புத்தர் சிலையும் அகற்றப்பட்டுள்ளது.

ஆனால் சிலைவைத்திருந்த இரும்புத் தூண், பௌத்தகொடிகள் அங்கிருந்து அகற்றப்படவில்லை.

அதாவது 3ஆவது தடவையாக அப்பிரதேசத்தில் சிலை வைக்க எடுத்த முயற்சியும் தோல்வியில் நிறைவடைந்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# சிவத்தபோக்கடி கிராமத்தில் அன்னை வேளாங்கண்ணி ஆலயம்



(வவுணதீவு நிருபர் )

கரடியனாறு, சிவத்தபோக்கடி கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட அன்னை வேளாங்கண்ணி ஆலயம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (12) மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகையினால் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த காலங்களில் ஓர் சிறிய ஆலயத்தில் அமர்ந்திருந்து அருள் வழங்கிய வேளாங்கண்ணி மாதாவுக்கு ஆலய பங்குத் தந்தை ஜெமில்டன் முயற்சியால் இறைமக்களின் ஆதரவுடன் புதிய ஆலயம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. மறைமாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் பங்குத் தந்தை ஜெமில்டன் மற்றும் அருட்தந்தை மகிமைதாஸ் போன்றோரால் விஷேட பூசை நடத்தப்பட்டு கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்ற இந்நிகழ்வில் கரடியனாறு, சிவத்தபோக்கடி, ஆயித்தியமலை போன்ற கிராமங்களைச் சேர்ந்த இறைமக்கள் கலந்து கொண்டனர்.




# மூதூரில் வெடிப்பு; சிறுவன் உயிரிழப்பு

### ஆட்டுக்கு உணவு தேடி அருகிலுள்ள பாழடைந்த இடத்துக்கு சென்றபோது சம்பவம்; மூதூர் பொலிஸார் விசாரணை

( எம்.எப்.எம்.பஸீர், மூதூர் நிருபர்)

ஆடுகளுக்கு உணவு தேடி அருகிலுள்ள பாழடைந்த இடமொன்றுக்கு சென்றுள்ள 15 வயது சிறுவன் ஒருவன், குண்டினை ஒத்த பொருளொன்று வெடித்ததில் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ கூறினார். திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோப்பூர், அல்லை நகர் பகுதியில் நேற்று (12) மாலை 3.50 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பாழடைந்த பகுதியில் காணப்பட்ட மிதி வெடி ஒன்று வெடித்ததில் இந்த சம்பவம் இடம்பெற்றிருக்கலாமென விசாரணைகளை முன்னெடுக்கும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

குறித்த வெடிப்புச் சம்பவத்தை அடுத்து படுகாயமடைந்துள்ள சிறுவன், மூதூர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் எனினும் சிறுவனை காப்பாற்ற முடியாமல் போயுள்ளதாகவும் பொலிஸார் மேலும் கூறினர்.

சம்பவம் பதிவான இடத்துக்கு பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், தடயவியல் பிரிவினர் ஆகியோர் அழைக்கப்பட்டு பகுப்பாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# 13 ஆம் திருத்தத்தையும் தாண்டிய அதிகாரப்பகிர்வை எதிர்பார்த்து நிற்கின்றோம்

## பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்



( எம்.நியூட்டன்)

13ஆம் திருத்தத்தில் சில முக்கியமான நல்ல விடயங்கள் உள்ளன. அவற்றையும் சேர்த்துக் கொண்டு அதையும் தாண்டிய அதிகாரப்பகிர்வை நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சுன்னாகத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் "தமிழர்தம் அபிலாசைகளில் சர்வதேச நாடுகளின் கரிசனை தொடர்பாக சாணக்கியர்களின் கருத்துப் பகிர்வு" என்ற தலைப்பில் நடைபெற்ற நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,தேர்தலில் படித்த ஆற்றலுள்ள இளைஞர்களுக்கு முன்னுரிமை என்று நாங்கள் தீர்மானித்தோம். ஆனால் அது வேட்புமனுவில் காணப்படவில்லை. 2022ஆம் ஆண்டு தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிக முக்கியமான ஒரு ஆண்டாக இருக்கலாம்.

சாணக்கியன் போன்ற ஐந்தாறு இளைஞர்களை நாங்கள் களமிறக்கியிருந்தால் நாட்டையே தலைகீழாக மாற்றி இருப்போம். மாறுகின்ற உலகத்திலேயே நாங்கள் நிறைய மாற்றங்களை உள்வாங்க வேண்டும். சமஷ்டி என்ற சொல் அன்றும் இருந்தது இன்றும் இருக்கின்றது.

ஆனால் சமஷ்டிக்கான விளக்கம் தற்போது மாறிவிட்டது. சம்பந்தன் பிரித்தானிய உயர்ஸ்தானிகரை சந்தித்த பொழுது பிரித்தானியாவில் அன்றிருந்ததைப் போன்று இலங்கையிலும் யாப்பை அறிமுகப்படுத்தினீர்கள். ஆனால் இன்று உங்கள் நாடு எங்கேயோ சென்றுவிட்டது.

ஆனால் எமது நாடோ பின்னோக்கி சென்றுவிட்டது என்றார்.சம்பந்தன் அன்றைய சிந்தனையோடு இருக்கவில்லை. புதியதையும் உள்வாங்குகிறார். அதனாலேயே இன்றும் அவர் எமக்கு தலைவராக இருக்கின்றார்.

13க்கு அப்பால் நாங்கள் செல்வதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கும் பொழுது, 13ஐ அமுல்படுத்த ஒன்றுகூடுகிறோம் என்று சில கட்சிகள் சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்போதைய ஜனாதிபதியும் இன்றைய பிரதமருமான மஹிந்த ராஜபக் ஷ 13க்கு அப்பால் சென்று அர்த்தபுஷ்டியான தீர்வைத் தருவோம் என்றார்.

ஆனால் சில தமிழ் கட்சித் தலைவர்களோ 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்த கோருகின்றனர்.13ஆம் திருத்தம் அடிப்படையிலேயே பழுதுபட்டது. அதனை திருத்த முடியாது என இந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகின்றார்.13ஆம் திருத்தத்தின் சில முக்கியமான நல்ல விடயங்கள் உள்ளன. அவற்றையும் சேர்த்துக் கொண்டு அதையும் தாண்டிய அதிகாரப்பகிர்வை நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம் என்றார்.

# படகு இயந்திரத்தை பரீட்சித்துப்பார்க்க சென்ற மூவரில் இருவர் கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்

## மன்னாரில் சம்பவம்

(தலைமன்னார் நிருபர்)

கடலில் படகின் வெளிக்கள இயந்திரத்தை பரீட்சித்து பார்க்கும் நோக்குடன் ஒரு படகில் சென்ற மூன்று மீனவர்களில் இருவர் கடலில் மூழ்கி காணாமல் போன நிலையில் தேடுதல் இடம்பெற்று வருகின்றது. மற்றைய மீனவர் படகுடன் கரை சேர்க்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் மன்னார் கோந்தப்பிட்டி கடல் பரப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் வேளையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பருத்தித்துறையைச் சேர்ந்த மீனவர்கள் மன்னார் நகர் பகுதியில் அமைந்துள்ள கோந்தப்பிட்டி பகுதியில் தூண்டில் மூலம் தொழில் புரிந்து வருகிறார்கள்.

சம்பவ தினமான நேற்று இவர்கள் மூவரும் தங்களின் வெளிக்கள படகின் இயந்திரத்தை பரீட்சித்து பார்க்கும் நோக்குடன் கோந்தப்பிட்டி கடற்பரப்புக்கு சென்றுள்ளனர்.

அச் சமயம் இப்பகுதியிலுள்ள கால்வாய் பகுதியில் சென்று கொண்டிருந்தபொழுது படகின் இயந்திரம் பழுதடையவே இதில் சென்ற மீனவரில் ஒருவர் கரைக்கு சென்று சாவியை எடுத்து வருவதற்காக கடலில் பாய்ந்து கரைக்குவர எத்தனித்த போது கடல் சுழிக்குள் அகப்பட்டு தத்தளித்துள்ளார்.

இதை கண்ணுற்ற மற்றைய மீனவர் ஒருவர் கடலில் குதித்து சக மீனவரை காப்பாற்ற எத்தனித்த வேளையில் அவரும் கடல் சுழிக்குள் அகப்பட்ட நிலையில் இருவரும் காணாமல் போயுள்ள நிலையில் கடற்படை, மன்னார் பொலிசார் மற்றும் சக மீனவர்கள் இவர்களை தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மற்றைய மீனவர் படகுடன் கரை சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# டிப்பர் வாகனத்துக்குள் புகுந்த துவிச்சக்கரவண்டி

## ஒருவர் காயம்



ஓமந்தை,

வவுனியா புளியங்குளம் பகுதியில் நேற்று காலை 9.30 மணியளவில் டிப்பர் வாகனம் துவிச்சக்கரவண்டியில் சென்றவரை மோதி தள்ளியதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

புளியங்குளம் பகுதியிலுள்ள எரிபொருள் நிலையத்திற்கு அண்மித்த பகுதியில் வீதியோரமாக துவிச்சக்கர வண்டியில் சென்றவரை பின்பக்கமாக வந்து கொண்டிருந்த டிப்பர் வாகனம் மோதியுள்ளது.குறித்த விபத்தில் டிப்பர் வாகனத்தின் கீழ் பகுதியினுள் துவிச்சக்கரவண்டி சிக்குண்டதுடன்துவிச்சக்கரவண்டியில் வந்தவர் காயங்களுக்குள்ளானார்.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கடலாமையை வைத்திருந்தவர் கைது



( எம்.நியூட்டன்)

சுமார் 300 கிலோ கிராம் எடையுள்ள கடலாமையை பிடித்து வந்த ஒருவர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நாவாந்துறையைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரின் உடமையிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆமை உயிருடன் உள்ளதால் நீதிமன்றின் அனுமதியுடன் குறிகாட்டுவான் கடலில் மீள விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உப பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

# வவுனியாவில் ஆட்டோவை பந்தாடிய புகையிரதம்

## சாரதி அதிஷ்டவசமாக உயிர் தப்பிப்பினார்



ஓமந்தை,

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் முச்சக்கர வண்டி கடுமையான சேதமடைந்ததுடன் அதன் சாரதி அதிஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளார்.

குறித்தசம்பவம் நேற்று காலை 10 மணியளவில் வவுனியா தாண்டிக்குளம் புகையிரத கடவையில் இடம்பெற்றுள்ளது.

ஓமந்தை பகுதியில் இருந்து தாண்டிக்குளம் புகையிரதக்கடவையால் கடக்க முற்பட்ட முச்சக்கரவண்டி ஒன்று தண்டவாளப்பகுதியில் சென்றபோது இயந்திரக்கோளாறினால் நின்றுள்ளது.

இதன்போது கொழும்பில் இருந்து யாழ்.நோக்கி சென்ற புகையிரதம் குறித்த முச்சக்கரவண்டியினை மோதித்தள்ளியது.

இந்நிலையில் முச்சக்கரவண்டியின் சாரதி விரைந்து செயற்பட்டு கீழே பாய்ந்தமையால் அதிஷ்டவசமாக உயிர்பிழைத்தார்.

முச்சக்கரவண்டியை பந்தாடிய புகையிரதம் அதனை சிறிது தூரத்துக்கு இழுத்துசென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாகன விபத்தில் மூவர் படுகாயம்

## வரணியில் சம்பவம்



(வடமராட்சி நிருபர்)

தென்மராட்சி வரணிப்பகுதியில் நேற்று பயணிகள் சிற்றூர்தியும் டிப்பர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் 3 பேர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிற்றூர்தியின் பின்பக்கமாக டிப்பர் வாகனம் மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் 3 பேர் படுகாயமடைந்த நிலையில் வரணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவ் விபத்து தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.




திணைக்களங்களுக்கு இடையிலான

# தேசிய தரப்படுத்தலில் யாழ். மாவட்ட செயலகம் முதலிடம்

( எம்.நியூட்டன்)

அரச துறை நிறுவனங்களுக்கான வினைத்திறனான சேவையை மதிப்பிடும் பொருட்டு தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் 2018/2019ஆம் ஆண்டினை தழுவி நடத்தப்பட்ட 2020ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டித் தொடரில் தேசிய ரீதியில் யாழ். மாவட்ட செயலகம் முதலாம் இடத்தைப் பெற்றிருக்கிறது.

அத்துடன் அரச துறையில் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான போட்டித் தொடரில் பங்குகொண்ட 14 பிரதேச செயலகங்களும் வெற்றி பெற்றுள்ளன. அந்த வகையில் தெல்லிப்பளை பிரதேச செயலகம் முதலாம் இடத்தினையும் யாழ்ப்பாணம், தென்மராட்சி, பருத்தித்துறை பிரதேச செயலகங்கள் இரண்டாம் இடத்தினையும் சண்டிலிப்பாய், கோப்பாய், கரவெட்டி மற்றும் மருதங்கேணி பிரதேச செயலகங்கள் மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளன.

மேலும்,உடுவில்,காரைநகர், சங்கானை, ஊர்காவற்றுறை மற்றும் வேலணை பிரதேச செயலகங்கள் சிறப்பு மெச்சுரை விருதினையும் நெடுந்தீவு பிரதேச செயலகம் மெச்சுரை விருதினையும் பெற்றுள்ளன.அதேவேளை இப்போட்டித் தொடரில் கடந்த 2016 ஆம் ஆண்டில் 3ஆம் இடத்தையும் 2018 ஆம் ஆண்டில் 2ஆம் இடத்தையும் பெற்று அரச அலுவலகங்களுக்கு முன்மாதிரியான தனித்துவமான மாவட்டமாக யாழ்.மாவட்டம் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.


LOLC FINANCE

LOLC ஃபினான்ஸ் பிஎல்சி & LOLC ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டட்

LOLC GENERAL INSURANCE

## மாபெரும் மோட்டார் வாகனங்களின் ஏலவிற்பனை

(அழிவிலிருந்து மீட்கப்பட்ட வாகனங்கள் மற்றும் கெபின்ஸ் உள்ளடங்கலாக)

**16 டிசம்பர் 2021 வியாழக்கிழமை**



,மிஹிலக்க மெதுர, BMICH, பௌத்தலோக்க மாவத்தை, கொழும்பு 07 இல்

காலை 10.00 மணியிலிருந்து ஆரம்பம்

### கொத்தட்டுவ

**முச்சக்கர வண்டிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| BAJAJ | 173CC | 2007 | QL | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QS | XXXX |
| BAJAJ | 198CC | 2012 | AAC | XXXX |
| BAJAJ | 145CC | 2006 | QE | XXXX |
| BAJAJ | 150CC | 2003 | HB | XXXX |
| BAJAJ | 150CC | 2004 | JV | XXXX |
| BAJAJ | 160CC | 2003 | HI | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | QL | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QT | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QT | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QS | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QU | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | QZ | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | YU | XXXX |
| BAJAJ | 198CC | 2014 | AAU | XXXX |
| PIAGGIO | 395CC | 2009 | QW | XXXX |
| PIAGGIO | 395CC | 2010 | YB | XXXX |
| PIAGGIO | 395CC | 2011 | YK | XXXX |
| PIAGGIO | 395CC | 2011 | YJ | XXXX |

### கிராண்ட்பாஸ்

| | | | | |
|---|---|---|---|---|
| **பஸ்** | | | | |
| MAZDA WT50LWB | 3455CC | 1996 | 62 | XXXX |
| ASHOK LEYLAND VIKING | 6540CC | 2003 | HS | XXXX |
| TOYOTA | | 1984 | 60 | XXXX |
| MITSUBISHI ROSA | 5240CC | 1999 | JW | XXXX |
| **லொறி** | | | | |
| ASHOK LEYLAND | | 1992 | 43 | XXXX |
| ASHOK LEYLAND | 6540CC | 2004 | JF | XXXX |
| FAW | 2545CC | 2012 | LK | XXXX |
| **பிறைம் மூவர்** | | | | |
| RENAULT 420 DCI | 11116CC | 2004 | LY | XXXX |
| RENAULT 440 DXI | 10837CC | 2006 | LY | XXXX |
| RENAULT PREMIUM 420 DCI | 11116CC | 2001 | LY | XXXX |
| **டிரக்** | | | | |
| MAHINDRA MAXXIMO | 909CC | 2011 | PR | XXXX |
| MAHINDRA MAXXIMO PLUS | 909CC | 2013 | PX | XXXX |
| MAHINDRA MAXXIMO PLUS | 909CC | 2013 | PV | XXXX |
| DFSK EQ1020DR | 1357CC | 2012 | PU | XXXX |
| TATA ACE ZIP | 611CC | 2012 | PV | XXXX |

### வெல்லம்பிட்டி

| | | | | |
|---|---|---|---|---|
| **பஸ்** | | | | |
| JOYLONG HKL6600RCV | 2776CC | 2014 | NB | XXXX |
| **கார்** | | | | |
| TATA NANO | 624CC | 2012 | KS | XXXX |
| BAJAJ QUTE | 216CC | 2020 | GAA | XXXX |
| CHEVROLET UA-HR52S | 1320CC | 2003 | KE | XXXX |
| TATA NANO | 624CC | 2011 | KP | XXXX |
| **கெப்** | | | | |
| TOYOTA HILUX VIGO | 2494CC | 2010 | CAB | XXXX |
| **பிறைம் மூவர்** | | | | |
| RENAULT 420DCI | 11116CC | 2005 | LY | XXXX |
| **முச்சக்கர வண்டிகள்** | | | | |
| BAJAJ | 173CC | 2007 | QM | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | QK | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | QL | XXXX |
| BAJAJ | 173CC | 2008 | QQ | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QS | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QW | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | YR | XXXX |
| BAJAJ | 198CC | 2012 | YY | XXXX |

### வெல்லம்பிட்டி

| | | | | |
|---|---|---|---|---|
| **முச்சக்கர வண்டிகள்** | | | | |
| BAJAJ | 145CC | 2005 | JZ | XXXX |
| BAJAJ | 145CC | 2005 | QB | XXXX |
| BAJAJ | 145CC | 2005 | QD | XXXX |
| BAJAJ | 145CC | 2005 | QA | XXXX |
| BAJAJ | 145CC | 2005 | QA | XXXX |
| BAJAJ | 145CC | 2005 | QD | XXXX |
| BAJAJ | 145CC | 2005 | AAU | XXXX |
| BAJAJ | 145CC | 2006 | QG | XXXX |
| BAJAJ | 145CC | 2006 | QH | XXXX |
| BAJAJ | 145CC | 2006 | QF | XXXX |
| BAJAJ | 145CC | 2006 | QD | XXXX |
| BAJAJ | 145CC | 2006 | QH | XXXX |
| BAJAJ | 145CC | 2006 | QJ | XXXX |
| BAJAJ | 145CC | 2006 | QH | XXXX |
| BAJAJ | 150CC | 2003 | HH | XXXX |
| BAJAJ | 150CC | 2003 | HQ | XXXX |
| BAJAJ | 150CC | 2004 | HZ | XXXX |
| BAJAJ | 150CC | 2004 | JN | XXXX |
| BAJAJ | 150CC | 2005 | JX | XXXX |
| BAJAJ | 173CC | 2003 | HP | XXXX |
| BAJAJ | 173CC | 2003 | HQ | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | QM | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | QK | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | QM | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | QK | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | QJ | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | QJ | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | QL | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | QL | XXXX |
| BAJAJ | 173CC | 2008 | QP | XXXX |
| BAJAJ | 173CC | 2008 | QO | XXXX |
| BAJAJ | 173CC | 2008 | QR | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QS | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QV | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QV | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QV | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QS | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QW | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QT | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QT | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QT | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QS | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QU | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | QU | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | YA | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | QZ | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | QZ | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | YC | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | YA | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | QZ | XXXX |
| BAJAJ | 198CC | 2010 | YH | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | YM | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | YS | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | YP | XXXX |
| BAJAJ | 198CC | 2013 | AAJ | XXXX |
| BAJAJ | 198CC | 2013 | AAM | XXXX |
| BAJAJ | 198CC | 2014 | AAS | XXXX |
| BAJAJ | 198CC | 2014 | AAV | XXXX |
| BAJAJ | 198CC | 2015 | ABH | XXXX |
| BAJAJ | 200CC | 2010 | YE | XXXX |
| PIAGGIO | 395CC | 2007 | QM | XXXX |
| PIAGGIO | 395CC | 2010 | YE | XXXX |
| PIAGGIO | 395CC | 2010 | QW | XXXX |
| PIAGGIO | 395CC | 2010 | YG | XXXX |
| PIAGGIO | 395CC | 2011 | YN | XXXX |
| TVS KING | 200CC | 2011 | YM | XXXX |
| **வேன்** | | | | |
| TOYOTA KR-KDH200K | 2490CC | 2006 | PF | XXXX |

### அழிவிலிருந்து மீட்கப்பட்ட வாகனங்கள் மற்றும் கெபின்ஸ்

| | | | |
|---|---|---|---|
| **பஸ்** | | | |
| ASHOK LEYLAND | 2003 | HL | XXXX |
| **டபுள் கெஃப்** | | | |
| FORD RANGER | 2014 | PF | XXXX |
| **ஜீப்** | | | |
| MITSUBISHI OUTLANDER | 2014 | CAO | XXXX |
| **லொறி** | | | |
| ISUZU DUMP TRUCK | 1999 | HU | XXXX |

**கிராண்ட்பாஸ்**

| | | | |
|---|---|---|---|
| **கார்** | | | |
| SUZUKI UA-HT51S | 2004 | KD | XXXX |
| PERODUA VIVA ELITE | 2012 | KT | XXXX |
| MITSUBISHI GALANT | 1998 | 65 | XXXX |
| NISSAN SUNNY | 1997 | GH | XXXX |
| SUZUKI WAGON R | 2014 | CAJ | XXXX |
| TOYOTA VOXY | 2014 | CAD | XXXX |

| | | | |
|---|---|---|---|
| **மோட்டார் சைக்கிள்** | | | |
| PULSAR 135 | 2012 | XT | XXXX |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| BAJAJ RE | 2008 | QO | XXXX |
| BAJAJ RE | 2012 | YW | XXXX |
| **டிரக்** | | | |
| DFSK (UNIMO) | 2016 | DAD | XXXX |
| TATA ACE | 2013 | PX | XXXX |
| FOTON BJ1010V0JA32 | 2011 | PR | XXXX |

பார்வையிடல் - **14 & 15 ஆம் திகதி டிசம்பர் 2021**

இல.42/5, கொத்தட்டுவ கம்சபா வீதி, **கொத்தட்டுவ,**
இல.260, **கிராண்ட்பாஸ் வீதி,** கொழும்பு - 14
இல.98 J/1, அவிசாவளை வீதி, மஹாபுத்தகமுவ, **வெல்லம்பிட்டி**

காலை 9.00 மணிமுதல் - மாலை 5.00 மணிவரை (ஏல தினத்தன்று வாகனங்களை பார்வையிட முடியாது)

**விற்பனை நிபந்தனைகள்**

- இந்த ஏலமானது சுகாதார அமைச்சின் கடுமையான வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப நடந்து, கொவிட் 19 நெறிமுறைகளை கடைப்பிடிக்கின்றது.
- பார்வையிடும் தினத்தன்று, கொள்வனவாளர்கள் பார்வையிடுவதற்காக தொகுதிகளாக எடுக்கப்படுவார்கள்.
- ஏலம் நடைபெறும் இடத்தில் கொள்வனவாளர்கள் முதல் வருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் உள்வாங்கப்படுவார்கள் & சுகாதார அமைச்சின் வழிகாட்டலுக்கேற்ப வரையறுக்கப்பட்டுள்ளது.
- பிரவேசம் : ஏலத்தினமன்று ஒருவர் மீளப்பெறமுடியாத 2000 ரூபாவுக்கான நுழைவுச்சீட்டுடன் மீளப்பெறக்கூடிய 25,000 ரூபா வைப்புப்பணமும் செலுத்தல் வேண்டும்.
- கொடுப்பனவு : சுத்தியல் அடித்தவுடன் பெறுமதியின் **25%** காசாக செலுத்துவதுடன் (மீளச்செலுத்தப்படாதது) மிகுதி **75%** காசாக 23 டிசம்பர் 2021 வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு இல.100/1, ஜயவர்த்தனபுர மாவத்தை, ராஜகிரியவில் உள்ள **LOLC** இற்கு செலுத்தி வாகனத்தை எடுத்துச்செல்லல் வேண்டும்.
- எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தல் இன்றி ஏலத்திலிருந்து விலக்கிக்கொள்ளும் உரிமை நிர்வாகத்திற்கு உண்டு.
- ஏலவிற்பனையாளரின் தீர்மானமே இறுதி முடிவாகும்.

**SCHOKMAN & SAMERAWICKREME**

ஒரே தேசம். ஒரே ஏலவிற்பனையாளர். 128 வருட மகோன்னத சேவையின் கொண்டாட்டம்.

தலைமை அலுவலகமும் காட்சியறையும் :
24, ரொறிங்டன் வீதி, கண்டி.
தொலைபேசி : 081 2227593
தொலைநகல் : 081 2224371
மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk

நகர அலுவலகமும் காட்சியறையும் :
இல.6A, ஃபெயார் பீல்ட் கார்டன்ஸ்,
கொழும்பு-08.
தொ.பே: 011 2671465, 011 2671468
தொலைநகல் : 011 2671469
மின்னஞ்சல் : schokman@samera1892.com

இணையத்தளம் : www.sandslanka.com



தல்கஸ்பிடியைச் சேர்ந்த தென்கிழக்கு பல்கலைக்கழக முதலாம் வருட மாணவியும்,தல்கஸ்பிடிய மற்றும் மடுல்போவை பாதிபிய்யா முஸ்லிம் மகாவித்தியாலயம் என்பனவற்றின் பழைய மாணவியான சஹீரா சமீரின் "ஓயாதஓலங்கள் என்ற கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா அண்மையில் மேற்படி கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதையும் அதிதிகள் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்

## பதினான்காவது ஆண்டு நினைவஞ்சலி



கலாபூஷணம் கதிராமப்போடி
**மகேஸ்வரலிங்கம்**
(மகிழைமகேசன்)
(சமாதான நீதிவான் ஓய்வுபெற்ற கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)

பிறப்பு : 23.09.1942 இறப்பு : 20.11.2007

திதி : 13.12.2021

எங்கள் அன்புத் தெய்வமே!
காலக் கரைசலில் தீர்ந்துவிடாத
நித்தியவாழ்வே! எங்களது மூலமும்
நீங்கள் தான்- முகவரியும் நீங்கள் தான்
வரும் யுகத்தை எமக்குகாட்டிய தூரதர்சனம்
நீங்கள் மகுடத்திற் குமரியாதை தந்தவரல்ல
மனிதத்துக்கே மகுடம் சூட்டியவர்
படுவான்கரை எனும் சரித்திர பூமியில்
பெயர்த்தெடுக்க முடியாத பெரும் குன்று
-நீங்கள் பிரகாசமாகி ஆண்டுகள் பதினான்கு
ஆகினாலும் உங்கள் திருவுருவே
எம் முன் வியாபித்து நிற்கின்றது.
உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை
வேண்டி நிற்கிறோம்
**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !**
உங்கள் பாசமிகு மனைவி
மக்கள், மருமக்கள், பேரன்மார், உறவினர்கள்
தில்லை
மகிழடித்தீவு,கொக்கட்டிச்சோலை.
Tel : 0652224397, 0771768857

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 19 * 03 * 1961

உதிர்வு 13 * 11 * 2021



## அமரர்.திருமதி. சோதிமலர் வீரசிங்கம்

( J.P., தேசகீர்த்தி, ஆயுர்வேத வைத்தியர் )

அன்பின் உறைவிடமே அம்மா !
பண்பின் திருவுருவே - நல்ல
தூய்மையின் இருப்பிடமே - எங்கள்
நெஞ்சில் நிறைந்தவளே வணங்குகிறோம்.

மகள்மார்:
அமிர்தவேணி, அருள்மொழி

52, திருத்தொண்டர் வீதி,
அரசடி, மட்டக்களப்பு

# மரண அறிவித்தல்

பிறப்பு 23 * 08 * 1944

இறப்பு 11 * 12 * 2021




## திருமதி பாங்காயம்மாள்

பொகவந்தலாவ சுண்டுலாங்கந்தை தோட்டத்தை பிறப்பிடமாகவும் மஸ்கெலியாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு. சின்னையா கவுண்டர் அவர்களின் அன்பு மனைவி திருமதி பாங்காயம்மாள் அவர்கள் 11-12-2021 சனிக்கிழமை அன்று சிவபதம் எய்தினார். அன்னார் ராமசந்திரன் (சரவணாஸ் கொழும்பு - 15), தியாகராஜா (சரவணாஸ் சூப்பர்சிட்டி மஸ்கெலியா), முத்துலிங்கம் (K.M.T கூப்பர்சிட்டி ஹப்புதளை), ரவிச்சந்திரன் (சேர்மன்). சுசிலா காலஞ்சென்ற கணேசன் ஆகியோரின் அன்புத்தாயாரும் கெங்காதேவி (கலா). ஜெயபதி (ஜெயா), துஷாந்தினி (துஷா), பவாணி, பாலசுந்தரம், (சந்திரா ஸ்டோர்ஸ் ஹப்புத்தளை) ஆகியோரின் அன்பு மாமியாரும் சந்திரா ஸ்டோர்ஸ் ஹப்புத்தளை பழனியாண்டி கவுண்டர் காலஞ்சென்றவர்களான செங்கோடன் கவுண்டர், பெரியண்ணன் கவுண்டர், கோவிந்தசாமி கவுண்டர். செல்லத்துரை கவுண்டர் ஆகியோரின் சம்பந்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13-12-2021 இன்று திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று காலை 10.30 மணியளவில் பூதவுடல் மஸ்கெலியா பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

**ஆழ்ந்த துயரத்திலிருக்கும்**
மகன்மார், மகள், மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

தகவல் : S.தியாகராஜா சரவணாஸ் சூப்பர்சிட்டி, ஜீவன் குரோசரர்-மோதர
இல. 28/9, தபால் கந்தோர் வீதி, மஸ்கெலியா. Tel : 071-6572282

# மார்கழி மாதத்தில் மங்கையர் நோற்கும் பாவை நோன்பு - திருவெம்பாவை



தில்லைக் கூத்தனான நடேசப் பெருமானுக்கு உரியது ஆருத்ரா தரிசனம். மார்கழி மாதத்திலே எம் பெருமானுக்கு, கன்னிப்பெண்கள், பாவை நோன்பு நோற்று, மணிவாசகப் பெருமான் பாடியருளிய திருஎம்பாவை பாடல்களைப் பாடுவர். எம் பெருமானைப்போலவே, திரு எம் பாவைப் பாடல்களும் அருள்மிக்கவை. ஆதியும் அந்தமும் இல்லாதவை. தொடர்ந்து திருஎம் பாவை பற்றி விரிவாக நோக்குவோம்.

திருவெம்பாவை மார்கழித் திருவாதிரைக்கு முன் வரும் ஒன்பது தினங்களிலும் இடம்பெறும் சிவனாருக்குரிய மிகச் சிறப்பு வாய்ந்த நாட்கள் இவை. திருவாதிரையோடு சேர்த்துப் பத்து நாட்களும் சிவ வணக்கத்துக்கும், திருவாசகம் ஓதுவதற்கும் மிகச் சிறந்த நாட்களாய் திரு எம்பாவை என பிரித்துப்பார்க்கும் போது திரு என்பது 'அருள்' என்றும் 'எம்' என்பது 'எமது' என்றும் பாவை என்பது சித்திரப்பதுமை போன்ற 'பெண்' என்றும் பொருள்படும். ஏல்.ஓர். எம்பாவாய் என்பது என் அன்புத் தோழியே இதனை ஏற்று ஓர் அதாவது ஆராய்வாயாக என்று பொருள் கொள்ள வேண்டும். திருவாதிரை சிவபெருமானது நட்சத்திரமாகும்.மார்கழி மாதத்தில் மங்கையர் பாவை நோன்பை நோற்பர். இதனை மார்கழி நோன்பு என்றும் கூறுவர். மணமான பெண்கள் இத்திங்களை, மங்களத் திங்களாகக் கொண்டு தூய நீராடி சிவனாரைத் தொழுவர். கன்னிப்பெண்களோ தமக்கு நல்ல கணவர் வாய்க்க எம்பெருமானை வேண்டி தூய நீராடி பாவை நோன்பை மேற்கொள்வர். இந்நோன்பு தமிழ் நாட்டிலே மிகத் தொன்மை பெற்றதொன்றாகும்.

சைவர்களல்லாது வைணவர்களும் இந்நோன்பை அனுஷ்டித்து வந்தனர். சைவர்கள் இந்நோன்பு நாட்களிலே மணிவாசகப்பெருமான் அருளிச் செய்த திருவெம்பாவையில் இடம்பெறும் பாடல்களைப்பாடிச் சிவனாரைப் பூசிப்பர். வைணவர்கள் திருமாலைப்போற்றி ஆண்டாள் பாடியருளிய திருப்பாவையைப் பாடி விஷ்ணு பகவானை வேண்டி நிற்பர்.

தமிழ் நாடு மாத்திரமன்றி எமது நாட்டிலும் கேரள மாநிலத்திலும் இந்நோன்பு அனுஷ்டிக்கப்பெற்று வருகிறது. சுருங்கக்கூறின் சைவ, வைணவ மக்கள் உலகில் எப்பகுதியில் உள்ளனரோ அங்கெல்லாம் இந்நோன்பு நோக்கப்படுவதோடு அதிகாலையில் திருவாசகமும் திருவெம்பாவையும் பக்தி பூர்வமாக ஒலிக்கப்பெறும். திருவாதிரையோடு சேர்ந்த பத்து நாட்களும் சகல சிவாலயங்கள், மடாலயங்கள் யாவிலும் சிறப்பாகக் கொண்டாடப்பெறும். திருவாதிரைக்குச் சிறப்பான தலம் சிதம்பரமாகும்.மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற்காலம் மனிதர்க்கு ஒரு வருடம், தேவர்க்கு ஒரு நாள். எனவே மார்கழி மாத அதிகாலைப்பொழுதில் நாம் செய்யும் வழிபாடு தேவர்களுக்கு மிகவும் பிடித்ததாகவும், உகந்ததாகவும் அமைகிறது. எனவே மார்கழி நோன்பு நோற்றல், திருவாதிரை விரத அனுஷ்டானம் மார்கழி மாதம் முழுவதும் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை ஓதுதல் புராணப்படனம் ஆகியவற்றைச் சைவப்பெருமக்களாகிய யாம் தவறாது செய்தல் புண்ணிய காரியமாகும்.

தேனினுமினிய திருவாசகத்தைப்பாடித் தந்தவர் மாணிக்க வாசகப்பெருமான். திருபெருந்துறையிலே குருந்தமர நிழலிலே எம்பெருமானாகிய குருநாதரிடம் ஞானதீட்சை பெற்றபின் அடிகளார் திருவண்ணாமலைத் தலத்தை அடைகிறார். அங்கே கன்னிப்பெண்கள் ஒன்றுகூடி மார்கழி மாதத்திலே தூய நீராடி ஈசன் புகழ் பாடிப் பரவி நிற்கும் பாங்கினைக்கண்டு களித்து தன்னையும் அவர்களுள் ஒரு அடியவராகக் கற்பனை செய்து அப்பக்தியின்பத்தைத் துய்க்கப் பாடியதே திருவாசகம் ஆகும்.

அழிக்கப்பெற்ற உலகத்தை மீளவும் படைக்கத் தொடங்கும் சிவசக்திகளின் செயலாக இங்கு கருப்பொருள் அமைந்துள்ளது. திருவெம்பாவையிற் – குறிக்கப்பெற்ற நவசக்திகள் முறையே மனோன்மணி, சர்வபூதமணி, பலப்பிரதமணி, பலவிகரணி, கல்விகரணி, காளி,ரௌத்திரி,சேட்டை, வானம் ஆகியனவாம்.

இத்திருவெம்பாவை நாட்களிலே சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னேரே துயிலெழுந்து தூயநீராடி அம்மையையும், அப்பனையும் வழிபடுதல் சாலச்சிறந்த காரியமாகும். இதனால் அன்பு, பண்பு, ஒழுக்கம், உயர்நிலை, ஆத்ம ஞானம் ஆகியவை நிலைபெறும்.

மார்கழி நீராடலின் தத்துவத்தை நோக்கின் ஆன்மாவானது நலமாகிய இருளிலே கிடந்து உழலாது திருவருளிலே படிந்து பரிபாகமடைதல் வேண்டும் என்பதாகும். கீழ்வரும் அடிகளை நோக்குவோம்.

**தங்கள் மலங்கவுழுவார் வந்து சார்தலினால்**
**எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த**
**பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்**
**சங்கச் சிலம்பற் சிலம்பு கலந்தார்ப்ப**
**கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்க**
**பங்கயம் பூம்புனல் (பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்)**

மலம் கழுவுதல் என்பது நீராடலையும் தடாகம் திரு அருட் பெருக்கையும் நீராடல் திருவருட் பெருக்கிலே ஆன்மா வீழ்ந்து திளைத்தலையும் குறித்து நிற்கின்றன.

இறைசக்தியாகிய திருவருள் கௌரி உருவம் ஆக்கப்பெற்று இந்நோன்பின்போது வழிபடப்படுகிறது. இவ்வண்ணம் இப்பத்து நாட்களும் வழிபட்டால் கன்னிப்பெண்களுக்கு நல்ல கணவர் கிடைப்பர். நாடு மழை வளம் பெறும் என்பது நம்பிக்கை. திருவெம்பாவை என்பது சக்தியை வியந்தது என்று பொருள்பெறும். திருவெம்பாவைப் பாடல்களிலே முதல் எட்டுப்பாடல்களும் மனோன்மணி முதல் வாமை ஈறாகக் கூறப்படும் நவசக்திகளும் உலகப்படைப்பின் நிமித்தம் செயற்படும் முறைமையைக் குறித்து அமைந்துள்ளன. திருவெம்பாவையின் முதல் எட்டுப் பாடல்களும் கன்னிப்பெண்கள் தம்முள் ஒருவரை ஒருவர் துயிலெழுப்புதலை உணர்த்தும் வகையில் உள்ளன. ஒன்பதாம் பாடல் இக்கன்னிப்பெண்கள் தமக்கு வேண்டிய கணவரின் இயல்பு கூறி அத்தகையவரைத் தமக்கு கணவராக தந்தருள வேண்டும் என வேண்டிக்கொள்வதாக அமைந்துள்ளது. பத்தாம் பாடல் பெண்களின் நீராடலையும் இறைவன் தம்மை உடனிருந்து காக்க அவர்கள் வேண்டுதலையும் உணர்த்தி நிற்கிறது. பன்னிரெண்டாம் பாடல் இப்பெண்கள் நீராடும் பொய்கை பற்றியும் சுனை பற்றியும் கூறி நிற்கின்றது. பதின்மூன்றாம் பாடல் அம்மன், அப்பனாகத் தோன்றும் தன்மையைக் குறித்து நிற்கின்றது. பதின்னான்காம் பாடல் கௌரி நோன்பிற்கமைய சோதி நிறம் கூறி ஈற்றில் சக்தியின் கருணைத்திறம் பற்றிக் கூறுகிறது. பதினைந்தாம் பாடல் எம்பெருமானின் கல்யாணக் குணங்களில் ஈடுபடுவோரது அனுபவத்தைக் கூறி அத்தகைய இன்ப உணர்வைத் தாமும் பெற்றின்புற அக்கன்னியர் இறையை வேண்டி நிற்பதை உணர்த்தி நிற்கிறது. பதினாறாம் பாடல் உலகமுய்ய மழை வளம் வேண்டி பாடுதலை உணர்த்தி நிற்கிறது. பதினேழாம் பாடல் தன்னை அடைந்த அன்பர்க்கே அன்றி மற்றும் அன்பர் அனைவருக்கும் தானே வலியச் சென்று அருள் பாலிக்கும் ஐயனின் அருட்திறத்தை பரங்கருணையை அறிவித்து அமைகிறது. பதினெட்டாம் பாடல் சூரிய உதயத்தின் அழகிய வர்ணனையையும் பரம்பொருளின் இலக்கணங்களையும் விபரித்து அமைகிறது. பத்தொன்பதாம் பாடல் இப்பெண்கள் தத்தமது கற்பின் கடமைக்கேற்ப கொண்டுள்ள உறுதியான கொள்கைகளைக்கூறி அவற்றைத் தாம் சீராக வாழ்ந்து காட்ட மன உறுதி தர இரந்து நிற்கும் அழகை வர்ணிக்கிறது.

இருபதாம் பாடல் பஞ்சகிருத்தியத்தைத் தன் ஆடல் மூலம் புரிந்தருளும் இறையின் இயல்பைக் கூறுவதுடன் மார்கழி நீராடலின் நிறைவை உணர்த்துகிறது.

கலாபூஷணம். திருமதி.இராஜேஸ்வரி
ஜெகானந்தக்குரு எம்.ஏ.

# மரணஅறிவித்தல்

உதயம் 10 . 06 . 1933

மறைவு 12 . 12 . 2021



## திருமதி.மீனாட்சியம்மாள் சபாரட்ணம்

( ஓய்வுபெற்ற ஆசிரியை)

யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு செட்டிகுறிச்சியைப் பிறப்பிடமாகவும், வவுனியா மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. மீனாட்சியம்மாள் சபாரட்ணம் அவர்கள் 12.12.2021 அன்று காலை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற திரு.சு.சபாரட்ணம் (துபாலதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தியாகராஜன், நாகேஸ்வரி, Dr.யோகராஜா ஆகியோரினதும் திருமதி. சு.அபயாம்பிகையினதும் (Australia) சகோதரியும்.Dr.நாகபூஷணி (கீதா)NHSL . யசோதா (ஆசிரியை, வ/சைவப்பிரகாச மகளிர்கல்லூரி) கார்த்திகேயினி (Education Officer - UNICEF) ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr.ஜெகநாதன் (T.H - Ratnapura), சண்முகநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் C.C.T.M School) ஆகியோரின் மாமியாரும் அபிராம்(USA), கார்த்திகா(UK), ஜனார்த்தனி (Physiotherapist BH Dickoya)-கவிஸ்வரன் (Physiotherapist, G.H Nuwera Eliya). கிருத்திகா (Pharmascist, T.H Jaffna) - லதீகரன் (People's Bank Achchuveli), ஶ்ரீராகுலன் (Associate Tech-Ops Engineer) ஆகியோரின் பேத்தியும் பிரபவின் பூட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 13.12.2021 அன்று மகிந்த மலர்ச்சாலையில் காலை 9:00 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 1:00மணி அளவில் இறுதிக்கிரிகைகள் நடைபெற்று பின்னர் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்: கீதாஜெகநாதன் (மகள்),
23/4, அனுலா வீதி, கொழும்பு–06
0773131755

யசோதா(மகள்) – 0770878923
கார்த்திகேயினி(மகள்) – 0773618823

# நேற்று 19 கொவிட் மரணங்கள் பதிவு

(எம்.மனோசித்ரா)

நாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட 19 மரணங்களுடன் மொத்த கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 14,614 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்று உறுதிப்படுத்தப்பட்ட மரணங்களில் 13 ஆண்களும் 6 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களில் 16 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர்.

நேற்று மாலை வரை 538 கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதற்கமைய இதுவரையில் கொவிட் தொற்றுறுதி செய்யப்பட்டோர் எண்ணிக்கை 5,72,726 ஆக உயர்வடைந்துள்ளது.

இவ்வாறு இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் 5,45,051 பேர் குணமடைந்துள்ளனர். 13,061 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# 45ஆவது பிறந்தநாள் நினைவு தினம் 13.12.2021



இன்று
உன் பிறந்தநாளை
முன்னிட்டு
நாம் எல்லோரும்
இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

அமரர்
மாணிக்கவாசகம் அருண் பிரசாந்த்

அப்பா, அம்மா, அண்ணா, அக்காமார் குடும்பத்தார் மற்றும் உறவினர்கள்
இல.51, லொறிஸ் ரோட், கொழும்பு-04.

மற்றும் அருண் மாணிக்கவாசகம் இந்து கல்லூரி, வத்தளை
ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள்

## அதிகார...

(தொடர்ச்சி)

சகல தமிழர் தரப்பும் கைச்சாத்திட்டு இந்தியாவிடம் கையளிப்பதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களுக்கான அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை இலங்கை அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொடுப்பதற்கு இந்தியாவிடம் ஒருமித்த கோரிக்கையை விடுக்கும் நோக்கில் கொழும்பு வெள்ளவத்தை குளோபல் டவர் ஹோட்டலில் நேற்று தமிழ் பேசும் மக்களின் அரசியல் கட்சித் தலைவர்கள் ஒன்றுகூடி கலந்துரையாடியிருந்தனர். இந்த சந்திப்பின் பின்னர் இடம்பெற்ற தமிழ் பேசும் மக்களின் அரசியல் கட்சித் தலைவர்கள் ஒன்றிணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளையும் ஒன்றிணைத்து வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழும் தமிழ் பேசும் மக்கள் சார்பாகவும் எமது மக்களின் தேவைகளை அறிந்து, அவற்றை ஆராய்ந்து, இந்த விடயத்தில் எந்தவிதமாக தீர்மானம் எடுக்க வேண்டும் என்பது குறித்து ஆராய்ந்துள்ளோம். குறிப்பாக அரசியல் தீர்வு விடயத்தில் புதிய அரசியல் அமைப்பு உருவாக்க முயற்சிகள் இடம்பெற்று வருவதாக கூறப்படுகின்றது. இது எந்தளவுக்கு உண்மையென தெரியாது.

ஆகவே இதனை அவதானித்துக்கொண்டுள்ளோம். அதேபோல் ஒரே நாடு ஒரே சட்டம் என்றொரு கருத்தும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இது அரசியல் அமைப்பு உருவாக்கத்துக்கு முற்றிலும் முரணானது. அத்துடன் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர். இவற்றை அரசாங்கம் கருத்தில் கொள்வதாகத் தெரியவில்லை.

அரசாங்கம் தமது கடும்போக்கு கொள்கையில் பயணிப்பதாக எம்மதியில் சந்தேகம் எழுந்துள்ளது. ஆகவே இந்த விடயங்களை நாம் கவனமாக அவதானித்து வருகின்ற நிலையில் தற்போது தமிழர் பிரதிநிதிகள் ஒன்றுகூடி இந்த விடயங்களை ஆராய்ந்து வருகின்றோம். குறிப்பாக 13 ஆவது திருத்தத்தின் அவசியம் குறித்து வலியுறுத்தி வருகின்றோம். 13 ஆவது திருத்தம் இந்தியாவின் மூலமாக முன்மொழியப்பட்டு, இலங்கைக்கு வழங்கப்பட்ட போதிலும் இன்றுவரை அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு பதிலாக சில அதிகாரங்களை அதில் இருந்து நீக்குவதற்கும் ஒற்றையாட்சியை முழுமையாக கையாள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என இந்தியா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. எனினும் இன்றுவரையில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆகவே இந்த விடயங்களை ஆராயும் விதமாக தமிழ் பேசும் மக்கள் சார்பாக ஒற்றுமையானதும் ஒருமித்த கோரிக்கையை முன்வைக்க வேண்டிய தேவை உள்ளது. ஆகவே இந்த விடயங்களை தொடர்ச்சியாக ஆராய்ந்து வருகின்றோம். தொடர்ந்தும் ஆராய்ந்து கோரிக்கைகளை முன்வைப்போம் என்றார்.

### சி.வி.விக்கினேஸ்வரன்

இது குறித்து தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் கூறுகையில் , எமது இந்த சந்திப்பில் மலையகத் தலைவரும் முஸ்லிம் தலைவரும் ஒன்றிணைந்துள்ளனர். ஆகவே எம் அனைவரையும் இணைக்கும் ஒன்றாகவே 13 ஆவது திருத்தச் சட்டம் காணப்படுகின்றது. வடக்கு கிழக்கு மக்களுக்கு சில பிரச்சினைகள் உள்ளதை போன்றே முஸ்லிம் மக்களுக்கும் மலையக மக்களுக்கும் வெவ்வேறு பிரச்சினைகள் உள்ளன. அவ்வாறன நிலையில் 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் நாம் அனைவருமே பாதிக்கப்படப்போகின்றோம்.இந்தியாவிடம் நாம் மிக முக்கியமான ஒரு விடயத்தை எடுத்துக் கூறவுள்ளோம். அதாவது எமது நிரந்தரத் தீர்வை நாம் கைவிடவில்லை. அது சமஷ்டி அடிப்படையில் அல்லது கூட்டு சமஷ்டியாக இருக்கும். ஆனால் தற்போதைய ஒற்றையாட்சியின் கீழ் எமக்கான அதிகாரங்களை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் இந்தியா அதற்குரிய ஒத்துழைப்புகளை எமக்கு வழங்க வேண்டும்.மாகாணசபைகள் வந்தால் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மலையக தமிழர்களுக்கும் ஏன் சிங்களவர்களுக்கும் நன்மைகள் கிடைக்கும். சிங்களவர்களுக்கு இது தேவையோ இல்லையோ அதனை தாண்டி தமிழ் பேசும் மக்களுக்கு இது நன்மைகளை தரும். அதனை இந்தியாவிடம் வலியுறுத்தியுள்ளோம். ஆகவே சகலரும் ஒன்றிணைந்து இந்த விடயங்களை கலந்துரையாடி இந்தியாவிடம் கோரிக்கையொன்றை முன்வைக்கவுள்ளோம்.இந்தியாவின் உள்ளீட்டை கோரிய ஆவணத்தை விரைவில் தயாரித்து சகலரும் கைச்சாத்திட்டு இந்தியாவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

இது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹகீம் கூறுகையில்,மத்திய அரசாங்கம் பல்வேறு செயலணிகளை அமைத்து சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்வதற்கு எத்தணிக்கும் கபளீகர நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்றால் அரசியல் அமைப்பில் உள்ள அதிகாரப் பகிர்வு விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதேபோல் ஆளுநர்களின் தலைமையில் மாகாண ஆட்சியை நடத்திக்கொண்டு அதன் மூலமாக அரசாங்கத்தின் திட்டமிட்ட மறைமுக நிகழ்ச்சிநிரலை சிறுபான்மை சமூகத்துக்கு பாதிப்பாக நடைபெறுகின்ற விடயங்களிலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.அதன் அடிப்படையில் சிறுபான்மை சமூகம் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து நாட்டின் சகல கட்சிகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் அதேவேளை 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இந்திய தலைமைகளுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளும் சரிவர நிறைவேற்றப்படுவதில் தாமதம் இருக்கின்றது. எனவே இவற்றையெல்லாம் தாமதப்படுத்தாது அமுல்படுத்த வேண்டும் என்பதை இந்த சந்திப்பில் ஆராய்ந்துள்ளோம் என்றார்.

### மனோ கணேசன்

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இது குறித்து கூறுகையில்,ஈழத்தமிழ் மக்களையும் மலையக தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களாகிய நாம், தமிழ் மக்களின் பிரதான பிரச்சினைகள் குறித்து எம்மத்தியில் சிரேஷ்ட தலைவராக உள்ள சம்பந்தன் ஐயாவின் தலைமையில் கூடி ஆராய்ந்துள்ளோம். எதிர்வரும் 21 ஆம் திகதி அடுத்த கூட்டத்தை ஏற்பாடு செய்து அதன் போது பொது ஆவணத்தில் கையெழுத்திட்டு அந்த ஆவணத்தை வெளியிடுவதற்கு ஏகமனதாக தீர்மானம் எடுத்துள்ளோம். இந்த நாட்டில் சமகாலத்தில் தமிழ் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய கட்சிகளின் தலைவர்கள் அதிக எண்ணிக்கையில் கூடிய முதல் நிகழ்வு இதுவாகும்.

ஜனாதிபதி 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று, சமஷ்டிக்கும் மேலே சென்று தீர்வுகளை வழங்க தயாராக இருப்பதை போன்றும் அதை வேண்டாம் என கூறிவிட்டு கட்சித் தலைவர்கள் அனைவரும் கூடி 13ஆவது திருத்தமே போதும் என கூறுவதை போன்ற கருத்து பரிமாற்றங்களை முன்வைப்பதை நாம் நிராகரிக்கின்றோம். இன்றைய எமது கலந்துரையாடலில் 13ஆவது திருத்தத்துக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் மொழி உரிமை, குடிப்பரம்பல் அழிப்பு, தேசிய ஒருமைப்பாடு குறித்தும் முஸ்லிம் மக்களின் மீதான தாக்குதல்கள், இன கலாசார அங்கீகாரம், மலையக மக்களின் குடியுரிமை குறித்தும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட பல தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் இன்றும் சிறையில் உள்ளனர். அவர்களை விடுவிக்கும் கோரிக்கை மற்றும் தேர்தல் சீர்திருத்தம் என்ற பெயரில் சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமையை தடுத்தாளும் தந்திரத்தை அரசாங்கம் கையாண்டு வருகின்றது. இந்த சகல விடயங்களையும் பேசியுள்ளோம். இவை அனைத்துமே சிங்கள மக்களுக்கு எதிரானவை அல்ல. ஒரே நாடு ஒரே சட்டம் என்றால் அது ஆண்டான் அடிமை உரிமைகள் அல்ல. இங்கு எமக்கும் சம உரிமை வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் என்றார்.

## சமஷ்டியை...

(தொடர்ச்சி)

13 ஆவது திருத்தச்சட்டத்தையேனும் முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்பதே எமது கோரிக்கையாகும் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பு வெள்ளவத்தை குளோபல் டவர் ஹோட்டலில் நேற்று தமிழ் பேசும் மக்களின் அரசியல் கட்சி தலைவர்கள் ஒன்றிணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இணைந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

புதிய அரசியலமைப்பை கொண்டுவருவதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் புதிய அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தத்தின் முழுமையான சரத்துக்களை உள்ளடக்கினால் கூட அல்லது அதற்கு மேலதிகமாக வேறு காரணிகளை உள்ளடக்கினால் கூட இந்தியாவின் உள்ளீடல் இல்லாது போய்விடும். தற்போதைய 13 ஆவது திருத்தச் சட்டம் இருப்பதன் காரணமாகவே இந்தியா இந்த விடயங்களில் கரிசனையைக் காட்டக் கூடியதாக அமைந்துள்ளது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் சில நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில் இந்தியா இலங்கையிடம் கேள்வி எழுப்ப முடியும். இப்போதும் இந்தியாவினால் இந்த கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுவிட்டு அவற்றை இலங்கை புறக்கணிக்கின்றது என்ற குற்றச்சாட்டை இந்தியா முன்வைத்துள்ளது. அவ்வாறான நிலையில் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கத்தில் 13 ஆவது திருத்தச்சட்டம் இருக்கும் வரையில் மட்டுமே இந்தியாவின் தலையீடு காணப்படும்.

அதேபோல் தற்போது சட்டப் புத்தகத்தில் இருக்கும் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்பதே எமது கோரிக்கையாகும். அது எமது நிரந்தரமான அரசியல் தீர்வுக்கு பதிலான ஒன்றல்ல. அரசியல் தீர்வு எனும் போது அது கூட்டு சமஷ்டி ரீதியிலான ஒரு நிரந்தரத் தீர்வேயாகும். அந்த தீர்வை எடுக்கும் வரையில் தற்போதைய சட்டத்தை நடைமுறைப்படுத்த காரணம் என்னவெனில், அது இல்லாது போய்விட்டால் நிரந்தர தீர்வுக்கு பாடுபடும் மக்களே இல்லாது போய்விடுவார்கள். இன்று எமது மக்கள் நாட்டை விட்டு செல்கின்றனர். காணிகள் பறிபோகின்றன,வாழ்வாதாரம் பறிபோகின்றது. ஆகவே அதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசியல் தீர்வான சமஷ்டியை கைவிட்டுவிட்டோம் அல்லது கூட்டு சமஷ்டியை கைவிட்டுவிட்டோம் எனக் கூறுகின்றனர். சமஷ்டி தீர்வு எமது குறிக்கோளாக என்றென்றும் இருக்கும். ஒரு காலகட்டத்தில் அதனை எடுத்தே தீருவோம். ஆனால் தற்போது இருக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள் என கோருவதன் காரணம், அது நடைமுறைப்படுத்தாமல் கடந்த நான்கு ஐந்து ஆண்டுகள் மாகாணசபைகளை செயற்படுத்தாது மாகாண சபைகளுக்கான உரித்துக்களை மத்திய அரசாங்கம் அனுபவித்துக்கொண்டுள்ளன. இதனால் பலவிதமான பிரச்சினைகளை எமது மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

இவற்றை ஏதேனும் ஒரு விதத்தில் நிறுத்துவது என்றால் அதற்கு எமக்கு சில அதிகாரங்கள் தேவை. 13 ஆவது திருத்தமே எமக்கு இருக்கும் ஒரே ஒரு பாதுகாப்பாகும். அதனையும் நாம் கைவிட்டுவிட்டால் மிக மோசமான நிலைமைக்கு முகங்கொடுக்க வேண்டிவரும்.

எனவே தான் இந்தியாவின் ஆதரவு தேவைப்படுகின்றது. ஆகவே தான் இந்தியாவிடம் நாம் மிக முக்கியமான ஒரு விடயத்தை எடுத்துக்கூறவுள்ளோம். அதாவது எமது நிரந்தரத்தீர்வை நாம் கைவிடவில்லை. அது சமஷ்டி அடிப்படையில் அல்லது கூட்டு சமஷ்டியாக இருக்கும். ஆனால் தற்போதைய ஒற்றையாட்சியின் கீழ் எமக்காத அதிகாரங்களை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் இந்தியா அதற்குரிய ஒத்துழைப்புகளை எமக்கு வழங்க வேண்டும். இதியாவுடன் இணைந்து எழுதிய உடன்பாடு கைவிடப்பட்டுள்ளது. எனவே இதனை கருத்தில் கொண்டு இந்தியா அரசாங்கத்துடன் பேசி இதற்கு தீர்வு வழங்கவேண்டும் என்றார்.


## அறிவித்தல்

எமது வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறன் மிக்க அதிசிறந்த சேவையை வழங்கும் நோக்குடன் எமது மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் **கம்பஹா கிளையினை** புதிய முகவரியான இல. 116, கொழும்பு வீதி, கம்பஹா எனும் இடத்திற்கு 2021 டிசம்பர் 14ம் திகதி முதல் மாற்றவுள்ளோம்.

நன்றி

Mercantile Investments and Finance PLC

நிர்வாகம்

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ்**


## ஏல...

(தொடர்ச்சி)

நட்புறவு கொண்டாடும் கும்பலுக்கும் நாட்டின் தேசிய வளத்தை தாரைவார்த்து கொண்டிருக்கும் தறுவாயில் அமைச்சரவை வெறும் சமிக்ஞை தூணாக ஆகியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டு மக்களின் நலனுக்காக எதுவுமே செய்யாத அரசாங்கம் என்ற வரலாற்று நாமத்தை பெற்றுள்ள தற்போதைய அரசாங்கம், கடந்த காலங்கள் பூராகவும் நாட்டுக்கு உரித்தாக்கியது எந்தளவு மோசமான நிலைமை என்பதை நாளுக்கு நாள் நடக்கும் சம்பவங்களின் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

நெற்செய்கைக்காக விவசாய திணைக்களத்தினால் தமது விவசாய அமைப்புகளுக்கு 200 திரவ உர கொள்கலன்கள் வழங்கப்பட்டதாகவும் அவற்றில் 100 கொள்கலன்கள் வெடித்துள்ளதாகவும் இதன்காரணமாக திரவ உரம் விரயமாகியுள்ளதாக ஹொரவப்பொத்தான விவசாய அமைப்பின் ஊடாக தகவல் கிடைத்துள்ளது. இதுமாத்திரமின்றி நாடுபூராகவும் இவ்வாறு திரவ உர கொள்கலன் வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. விவசாயிகளை எந்தளவுக்கு அரசாங்கம் ஏமாற்றியுள்ளது என்பது இந்த சம்பவங்களின் ஊடாக உறுதியாகியுள்ளது.

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உரத்தில் எந்தவொரு தரமோ தரச்சான்றிதழோ சுகாதார பாதுகாப்போ இல்லை. ஆனால் எங்கோ உள்ள அரசாங்கத்தின் உற்ற நண்பர்கள் கும்பலுக்கு இதன் இலாபம் கிடைக்கும் என்பது உறுதி. வரலாற்றில் எந்தவொரு யுகத்திலும் எந்தவொரு அரசாங்கமும் விவசாய தலைமுறையினரை இந்தளவுக்கு துரதிர்ஷ்ட மோசமான நிலைமைக்கு தள்ளவில்லை என்பதுடன் அரசாங்கத்தின் இந்த மோசமான செயற்பாடுகள் மற்றும் பொறுப்பற்ற தீர்மானங்களினால் ஒருபுறம் நாட்டின் விவசாய தலைமுறையினரையும் மறுபுறம் நாட்டின் பொருளாதாரத்தையும் பல தசாப்தங்களுக்கு கட்டியெழுப்ப முடியாத அதள பாதாளத்கு தள்ளப்படுவதை தடுத்து நிறுத்த முடியாது.

தற்போதைய அரசாங்கம் ஆட்சியை கைப்பற்றியது முதல் நாட்டு பிரஜைகளை ஆய்வு கூடத்தின் எலிகளாக மாற்றியதுடன் தமக்கு சாதகமான தீர்மானங்களை கொண்டு வந்து நாட்டை மோசமான நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ளது. விசேடமாக இந்நாட்டில் தொடர்ந்து நாளாந்தம் கொரோனா மரணங்கள் பதிவாகின்றன. இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையையும் அரசாங்கம் எடுக்காத காரணத்தினால் தற்போது கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 15,000 அண்மித்துள்ளது.

## டொலர் நெருக்கடியை.....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கேள்வி:அப்படியானால் கடன் நெருக்கடியில் மறுசீரமைப்புக்கு தெரிவுக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லையா?**

**பதில்:** ஒரு சிலர் இவ்வாறான தெரிவுகளுக்கு நாம் செல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். ஆனால் அவ்வாறு செல்ல வேண்டிய அவசியம் எமக்கில்லை. தற்போது கூட நாம் ஒரு சில கடன்களை புதிய திட்டங்களை மேற்கொண்டுபுதியகடன்களைப்பெற்று பழைய கடன்களை செலுத்திக் கொண்டிருக்கின்றோம். அதுவும் கடன் மறுசீரமைப்பு கருவியாகவிருக்கின்றது. சில கடன்களுக்காக நாம் நீண்ட காலத்தை கோரியிருக்கின்றோம். அதுவும் ஒரு கடன் மறுசீரமைப்பு செயற்பாடாகவே காணப்படுகிறது.

**கேள்வி:டொலர் நெருக்கடியை சமாளிப்பதற்கு நீங்கள் நாணய பரிமாற்ற திட்டங்களை மேற்கொண்டு வருகின்றீர்கள். தற்போது எந்தெந்த நாடுகளுடன் இவ்வாறு நாணய பரிமாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன ?**

**பதில்:** நாம் தற்போது மத்திய கிழக்கு நாடுகள் பலவற்றுடன் நாணய பறிமாற்று திட்டங்கள் தொடர்பாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி:இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான உறவின் வரலாறு எவ்வாறு காணப்படுகிறது?**

**பதில்:**சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கைக்கு ஒரு சிறந்த உறவு காணப்படுகிறது. சர்வதேச நாணய நிதியத்தை நாங்கள் நாட வேண்டும் என்றால் அதற்கான நேரம் வரும் போது நாங்கள் அதனை செய்வோம். தற்போது சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டிய அவசியம் இல்லை என்பதே எமது தீர்மானமாக இருக்கின்றது. தற்போது நாம் சர்வதேச நாணய நிதியத்தை நாடும் நோக்கம் இல்லை. ஆனால் அவர்களுடன் எமக்கு ஒரு சிறந்த நட்புறவு காணப்படுகிறது. தேவையான நேரத்தில் அவர்களிடம் நாங்கள் தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வோம். அவர்களுக்கும் நாம் எமது கருத்துக்களை கூறி வருகின்றோம். ஒரு சிறந்த தொடர்பு எமக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இருக்கின்றது.

**கேள்வி:எதிர்க்கட்சியினர் கூறுகின்றதைப் போன்று தற்போது சர்வதேச நாணய நிதியத்திடம் நீண்டகால கடன் திட்டத்துக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லையா?**

**பதில்:**தற்போது சர்வதேச நாணய நிதியத்திடம் நீண்ட கால கடன் கட்டத்துக்கு செல்ல வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. அவ்வாறு செல்லும்போது பாதகமான நிலைமை ஏற்படும். ஒரு நாடாக பாதகமான நிலைமைக்கு நாம் செல்லக்கூடாது. எதிர்க்கட்சி கூறினாலும் அதனை நாம் செய்ய முடியாது. எதிர்க்கட்சி சில நேரங்களில் நாட்டுக்கு பாதகமான விடயங்கள் செய்யுமாறு கூறும். அதற்கு நாம் ஏமாற்றமடைய வேண்டிய அவசியமில்லை. கடந்த ஆட்சியில் இவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு எவ்வாறான பாதகமான நிலைமை ஏற்பட்டது என்பது எமக்குத் தெரியும்.

**கேள்வி: வாகன இறக்குமதி தடை தொடர்ந்து நீடிக்குமா?**

**பதில்:** தற்போதைய சூழலில் வாகன இறக்குமதி மீண்டும் ஆரம்பிப்பதற்குநாம்தீர்மானிக்கவில்லை. அது தொடர்பாக நாம் எதிர்காலத்தில் தீர்மானம் எடுப்போம்.

**கேள்வி:இறுதியாக இந்த நெருக்கடி தொடர்பாக நீங்கள் மக்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

**பதில்:** இந்த நேரத்தில் நாம் மிகவும் நிதானமாகவும் பதற்றம் இல்லாமலும் செயற்படவேண்டும். எமது பொருளாதாரத்தை நாம் முன் கொண்டு செல்ல வேண்டும். அவ்வாறு செல்லும் பட்சத்தில் இந்த சவாலை எம்மால் வெற்றி கொள்ள முடியும். அவசியமற்ற அச்சத்தை ஏற்படுத்தி பதற்றமாக செயல்படும் பட்சத்திலேயே நெருக்கடிகள் ஏற்படும். நெருக்கடிகள் தீவிரமடையும். அவ்வாறு இல்லாமல் நிதானமாக செயற்பட வேண்டும். அவ்வாறு செயல்படும் பட்சத்தில் இந்த உலக நெருக்கடியிலிருந்து நாம் வெளியே வரமுடியும். அந்த நெருக்கடியை எம்மால் நிச்சயமாக முகாமைத்துவம் செய்து முன்செல்ல முடியும். கடந்த இரண்டு வருட காலங்களில் நாங்கள் சவாலான விடயங்களிலிருந்து அதனை முகாமைத்துவம் செய்து காட்டி இருக்கின்றோம். எம்மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அச்சம் வேண்டாம்.


## வாகனம் விற்பனைக்கு

CP RE-XXXX TAFE 45DI 2500.00 CC 2018

0773-747787

கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ் பிஎல்சி



## LOLC FINANCE வாகனங்கள் விற்பனைக்கு

### அம்பாறை

முச்சக்கர வண்டிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| BAJAJ | 198CC | 2013 | EP | AAM | XXXX |
| BAJAJ | 198CC | 2014 | EP | AAQ | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | EP | YC | XXXX |
| BAJAJ | 198CC | 2010 | EP | YH | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | EP | YR | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | EP | YU | XXXX |

LOLC ஓட்டோ மார்ட் இல.223, கண்டி வீதி, அம்பாறை
சமந்த - 063-5780880/881

### பதுளை

முச்சக்கர வண்டிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| BAJAJ | 198CC | 2013 | UP | AAJ | XXXX |
| BAJAJ | 173CC | 2008 | CP | QP | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | NW | QX | XXXX |

டிரக்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| MAHINDRA MAXXIMO | 909CC | 2012 | UP | PS | XXXX |

LOLC வாகன வளாகம், இல.161A, கெப்பெட்டிபொல வீதி,பதுளை.
லஹிரு - 0554549948

### வெல்லம்பிட்டிய

முச்சக்கர வண்டிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| BAJAJ | 150CC | 2003 | WP | HM | XXXX |
| BAJAJ | 150CC | 2004 | WP | JI | XXXX |
| BAJAJ | 145CC | 2004 | WP | JP | XXXX |
| BAJAJ | 145CC | 2005 | WP | QA | XXXX |
| BAJAJ | 145CC | 2005 | WP | QB | XXXX |
| BAJAJ | 145CC | 2005 | WP | QC | XXXX |
| BAJAJ | 145CC | 2005 | WP | QC | XXXX |
| BAJAJ | 173CC | 2006 | WP | QC | XXXX |
| BAJAJ | 173CC | 2008 | WP | QD | XXXX |
| BAJAJ | 145CC | 2006 | WP | QF | XXXX |
| BAJAJ | 145CC | 2006 | WP | QG | XXXX |
| BAJAJ | 145CC | 2006 | WP | QG | XXXX |
| BAJAJ | 145CC | 2006 | WP | QI | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | SG | QL | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | SG | QL | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | SG | QL | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | WP | QL | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | WP | QL | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | WP | QN | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | WP | QN | XXXX |
| BAJAJ | 173CC | 2008 | WP | QO | XXXX |
| BAJAJ | 173CC | 2008 | WP | QO | XXXX |
| BAJAJ | 173CC | 2008 | WP | QP | XXXX |
| BAJAJ | 173CC | 2008 | WP | QQ | XXXX |
| BAJAJ | 173CC | 2008 | NW | QR | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | WP | QS | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | WP | QS | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | WP | QU | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | WP | QV | XXXX |
| BAJAJ | 174CC | 2009 | WP | QV | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | WP | QW | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | WP | QW | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | WP | QX | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | WP | QX | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | WP | QX | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | WP | QX | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | SP | QZ | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | WP | QZ | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | WP | YB | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | WP | YD | XXXX |
| BAJAJ | 198CC | 2010 | WP | YF | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | WP | YV | XXXX |
| PIAGGIO | 395CC | 2011 | WP | YT | XXXX |
| PIAGGIO | 395CC | 2012 | WP | YW | XXXX |

LOLC வாகன வளாகம், இல.98J/1, அவிசாவளை வீதி, மஹாபுத்கமுவ,வெல்லம்பிட்டிய
ஜயந்த - 0773242324

### அம்பலாந்தோட்டை

பஸ்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ASHOK LEYLAND VIKING | 6014CC | 2017 | SP | ND | XXXX |

முச்சக்கர வண்டிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| BAJAJ | 145CC | 2005 | SG | QB | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | SP | QS | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | WP | QU | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | SP | YA | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | UP | YB | XXXX |

LOLC வாகன வளாகம், இல.162, மெயின் வீதி, அம்பலாந்தோட்டை
கவிந்து - 0475118080

### கொத்தட்டுவ

முச்சக்கர வண்டிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| BAJAJ | 198CC | 2012 | WP | AAG | XXXX |
| BAJAJ | 198CC | 2021 | WP | AAG | XXXX |
| BAJAJ | 198CC | 2015 | WP | AAZ | XXXX |
| BAJAJ | 150CC | 2004 | WP | JO | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | WP | QM | XXXX |
| BAJAJ | 173CC | 2008 | WP | QP | XXXX |
| BAJAJ | 173CC | 2008 | WP | QQ | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | WP | QX | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | NC | QX | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | WP | YA | XXXX |
| BAJAJ | 198CC | 2010 | WP | YF | XXXX |

இல.42/5, கொத்தட்டுவ கம்சபா வீதி, கொத்தட்டுவ.
மகேஷ் - 0773493535

### தம்புள்ள

முச்சக்கர வண்டிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| BAJAJ | 145CC | 2006 | NC | QI | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | NW | QJ | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | NC | QL | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | NW | QL | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | CP | QT | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | NW | QU | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | NW | QV | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | NW | QX | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | NC | QZ | XXXX |
| BAJAJ | 198CC | 2010 | NC | YH | XXXX |
| BAJAJ | 198CC | 2012 | NW | YW | XXXX |

LOLC வாகன வளாகம், எத்தாவெந்திவெவ வீதி, தலகிரியாகம, தம்புள்ள.
சமிந்த - 0665118181

### குருவிட்ட

முச்சக்கர வண்டிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| BAJAJ | 173CC | 2007 | SG | QM | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | SG | QT | XXXX |
| BAJAJ | 173CC | 2008 | SG | QN | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | SG | QX | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | SG | QT | XXXX |
| PIAGGIO | 395CC | 2010 | SG | YI | XXXX |

LOLC வாகன வளாகம், இல.472 F, மாலவ, குருவிட்ட
இசங்க - 0772752097

### மத்துகம

முச்சக்கர வண்டிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| BAJAJ | 145CC | 2005 | WP | QA | XXXX |
| BAJAJ | 145CC | 2006 | WP | QD | XXXX |
| BAJAJ | 198CC | 2010 | WP | YG | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | WP | YL | XXXX |

LOLC வாகன வளாகம், மக்கள் வங்கிக்கு அருகில், விஜயா மாவத்தை, மத்துகம.
பிரமோதா - 0775634245

### வவுனியா

முச்சக்கர வண்டிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| BAJAJ | 173CC | 2009 | NC | PZ | XXXX |
| BAJAJ | 198CC | 2012 | NC | YY | XXXX |

LOLC வாகன வளாகம், இல.363, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா
திமோத்தி - 0766582329

எந்தவொரு வாகனத்தை/வாகனங்களை விற்பனையிலிருந்து முன்கூட்டியே அறிவிக்காமல் திரும்பப் பெறுவதற்கான உரிமத்தை நிறுவனம் கொண்டுள்ளது.

கேள்விப்பத்திரங்களை LOLC தலைமை அலுவலகம் - ராஜகிரிய மற்றும் மேற்குறிப்பிட்ட கிளைக்காரியாலங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

2021 டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி, பி.ப. 12.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் மூடப்படும்.

**LOLC FINANCE PLC**

இல.100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய.

## வசந்த... (தொடர்ச்சி)

வடமேல் மாகாண ஆளுநராக நியமித்தி ருக்கலாம்.அரசாங்கத்திலும் பல தவறான செயற்பாடுகள் காணப்படுகின்றன.

எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஆழ்ந்த சிந்தனையில் உள்ளேன் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அட்மிரல் ஒப்த பீல்ட் வசந்த கரன்னா கொடவை முன்னாள் கடற்படைத் தளபதி என்ற ரீதியில் மதிக்கிறேன்.வடமேல் மாகாண ஆளுநராக கடமையாற்றிய ராஜா கொல்லுரே காலமானதைத் தொடர்ந்து வடமேல் மாகாண ஆளுநராக வசந்த கரன் னாகொட நியமிக்கப்பட்டமை தவறான தீர்மானமாகும்.

வடமேல் மாகாண ஆளுநராக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டியூ குணசேகரவை நியமித்திருக்கலாம். அரசியல் ரீதியிலும் நிர்வாக முறைமை தொடர்பிலும் தேர்ச்சிபெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது அவசியமான தாகும்.

எமது அரசாங்கத்தின் செயற்பாடுக ளிலும் ஒரு சில குறைபாடுகள் காணப்படு கின்றன.குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் உரிமை எமக்குண்டு.

இதுவரையில் ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களும் மக்களின் விருப்பங்களுக்கு அமைய செயற்பட்டுள் ளதா என்பது கேள்விக்குறியாக்கப்பட்ட விடயமாகவே காணப்படுகிறது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை போன்று விமர்சனத்துக்குள் ளாக்கப்பட்ட பாதீட்டை எனது அரசியல் வரலாற்றில் காணவில்லை.வரவு செலவுத் திட்டம் மீது ஆளும் தரப்பின் உறுப்பினர் களும் எதிர்த்தரப்பின் உறுப்பினர்களும் பல விமர்சனங்களை முன்வைத்தார்கள்.

சமூகத்தின் மத்தியில் பல பிரச்சி னைகள் தற்போது தோற்றம் பெற் றுள்ளன.சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு பிரதான பிரச்சினையாகவுள் ளது.மக்கள் அரசியல்வாதிகளை பார்த்து பைத்தியம் என்று விளிக்கும் நிலை தோற்றம் பெற்றுள்ளது.பாராளுமன்றிலும் அவ்வாறான தன்மை காணப்படுகிறது. இவ்வாறான பின்னணியில் இனிவரும் தேர்தல்களில் போட்டியிடுவது குறித்து ஆழ்ந்து சிந்தித்து வருகிறேன் என்றார்.

## அதிகாரப்பகிர்வின்... (தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு வெள்ளவத்தை குளோபல் டவர் ஹோட்டலில் நேற்று தமிழ் பேசும் மக்களின் அரசியல் கட்சித் தலைவர்கள் ஒன்றிணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இணைந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

மாகாண சபைகள் இயங்காதுள்ள தரு ணத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்தி, ஜனாதிபதி செயலணி என்ற போர்வையில் மத்திய அரசாங்கம் பல்வேறு செயலணிகளை அமைத்து சிறுபான்மை மக்களின் பிரதிநிதித் துவத்தை இல்லாது செய்வதற்கு எத்தனிக்கும் கபளீகர நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண் டுவர வேண்டும் என்றால் அரசியலமைப்பில் உள்ள அதிகாரப்பகிர்வு விடயங்கள் நடைமு றைப்படுத்தப்பட வேண்டும்.

இதற்கு தேர்தல் முறைமையில் இருக்கின்ற மாற்றத்தை ஒரு சாட்டாக கூறிக்கொண்டு தேர்தலை இழுத்தடிப்புச் செய்வதை இனியும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேபோல் ஆளுநர்களின் தலைமையில் மாகாண ஆட்சியை நடத்திக்கொண்டு அதன் மூலமாக அரசாங்கத்தின் திட்டமிட்ட மறைமுக நிகழ்ச்சி நிரல் சிறுபான்மை சமூகத் துக்கு பாதிப்பாக இடம்பெறுகின்ற விடயங்க ளிலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். அதன் அடிப்படையில் சிறுபான்மை சமூகம் எதிர் நோக்கும் சவால்கள் குறித்து நாட்டின் சகல கட்சிகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் அதேவேளை, 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இந்திய தலைமை களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளும் சரிவர நிறைவேற்றப்படுவதில் தாமதம் இருக்கின்றது. எனவே இவற்றையெல்லாம் தாமதப்படுத்தாது அமுல்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம் என்றார்.

## பொரளை... (தொடர்ச்சி)

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு மற்றும் கொழும்பு தெற்கு வலய குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளை உள்ளடக்கிய 5 பொலிஸ் குழுக்களே இந்த விஷேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அறியமுடிகிறது.

கொள்ளையர்கள் கொள்ளைக்காக பயன் படுத்திய மோட்டார் சைக்கிளின் இலக்கம் மற்றும் அது குறித்த தகவல்கள், சி.சி.ரி.வி. காணொளி உள்ளிட்ட அறிவியல் தடயங் களை மையப்படுத்தி இந்த விசாரணைகள் இடம்பெறுவதாகவும் மிக விரைவில் சந்தேக நபர்களை அடையாளம் காணக் கூடியதாக இருக்கும் எனவும் விசாரணை களுக்குப்பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த விசாரணைகளை கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜீ.ஜே. நந்தன மேற்பார்வை செய்யும் நிலையில், உதவி பொலிஸ் அத்தியட்சர் நெவில் டி சில்வா வழி நடத்துகின்றார். அவர்களின் கீழேயே இந்த 5 பொலிஸ் குழுக்கள் விசாரணை களை முன்னெடுத்துள்ளன.

பொரளை சந்தியை அண்மித்த, பொரளை மருதானை வீதியில் அமைந்துள்ள தங்க நகைக் கடையில் நேற்று முன்தினம் (11) பிற்பகல் 2.50 மணியளவில் கொள்ளையி டப்பட்டுள்ளது.

முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக் கிளில் வந்த இருவர், ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்து, நகைக் கடையில் இருந்தோரை அச்சுறுத்தி இக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

கொள்ளையிடப்பட்ட தங்க நகைகளின் பெறுமதி உறுதியாக மதிப்பிடப்படாத போதும் கொள்ளையர்கள் சுமார் 5 பெட்டி நகைகளை எடுத்துச் சென்றுள்ளதாகவும் அவற்றின் பெறுமதி 3 மில்லியனுக்கும் அதிகமாக இருக்கும் எனவும் கூறப்படுகிறது.

## யுகதனவி... (தொடர்ச்சி)

செய்யவோ இரத்துச் செய்யவோ முடியாது.யுகதனவி விவகாரத்தில் எவ்வித முறைகேடுகளும் இடம்பெறவில்லை என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த் தன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட் 19 வைரஸ் தாக்கத்தினால் சர்வ தேச சந்தையில் அத்தியாவசியப் பொருட் களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் பொருள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கான சேவைக் கட்டணங்களும் குறுகிய காலத்தில் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள் ளன.

நாட்டு மக்களுக்கு நிவாரண விலைக்க மைய அத்தியாவசியப் பொருட்களை விநி யோகிப்பதற்கு அரசாங்கம் சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக பல திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.எதிர்வரும் 31ஆம் திகதி வரை அரிசி உள்ளிட்ட 50 அத்தியா வசியப் பொருட்களை நுகர்வோர் நிவாரண விலையில் சதொச விற்பனை நிலையங் களில் பெற்றுக் கொள்ளலாம்.

யுகதனவி மின்நிலையத்தின் 40 சதவீத பங் குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் ஒப்பந்தம் முறையற்ற வகையில் கைச்சாத் திடப்படவில்லை.ஒப்பந்தம் தொடர்பான உள்ளடக்கங்கள் அமைச்சரவைக்கு சமர்ப் பிக்கப்பட்டு அமைச்சரவையின் அனுமதி யுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தை மீள்பரிசீலனை செய்யவோ இரத்துச் செய்யவோ முடியாது.அம்பாந்தோட்டை துறைமுகம் சீன நிறுவனத்துக்கு 99 வருட கால ஒப்பந்த அடிப்படையில் வழங்கப் பட்டுள்ளது.கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந் தத்தை மீள்பரிசீலனை செய்யவும் இரத்துச் செய்யவும் முடியாது.சர்வதேச ஒப்பந்த சட் டங்களுக்கு அமையவே ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டுள்ளது.

யுகதனவி மின்நிலையத்தின் 40 சதவீத பங் குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் வகையில் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் நாட்டுக்கு எதிரான விடயங்கள் ஏதும் உள்ளடக்கப்படவில்லை.குறுகிய அரசியல் நோக்கத்தை கருத்திற் கொண்டு அனைத்து அபிவிருத்தித் திட்டங்களிலும் குறை கண்டால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என்றார்.

## பழைய... (தொடர்ச்சி)

கொண்டுவந்து நிறைவேற்ற நடவ டிக்கை எடுக்கப்படும். அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று சபை முதல்வரும் தேர்தல் முறைமை தொடர்பான மாற்றம் குறித்து ஆராய்கின்ற பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவரு மான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்று அந்த தேர்தல் தாமதமடைவதற்கு கடந்த அரசாங்கத்தில் செயற்பட்ட தரப்புகள் தற்போது கூறுகின் றன. அதில் தாம் தவறிழைத்ததாகவும் அந்த கட்சிகள் தற்போது தெரிவித்திருக்கின்றன. எப்படி இருப்பினும் நாம் தேர்தலை தாம தப்படுத்தும் ரீதியில் செயற்படவில்லை. தற்போது சட்ட தேவைகளை மேற் கொண்டு புதிய தேர்தல் முறைமையை அதாவது பழைய தேர்தல் முறைமையை புதிதாக மீண்டும் கொண்டுவந்து தேர்தலை நடத்துவதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்றும் அமைச்சர் தினேஷ் குணவர்தன குறிப்பிட்டார் .

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் என்று அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தெரிவித் திருந்தது. மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சக்தி என பல்வேறு தரப்பினரும் மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் உடனடியாக நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி வருகின் றன. இந்தநிலையில் அரசாங்கம் எப்போது எந்த முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்தப் போகின்றது என்று வினவிய போதே அமைச்சர் இந்த விடயங்களை சுட்டிக் காட்டினார்.

அவர் இது தொடர்பில் மேலும் குறிப்பி டுகையில்,

மாகாண சபைத் தேர்தலை தாமதப் படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இல்லை. தற்போது இதில் காணப்படுகின்ற சட்டப் பிரச்சினை காரணமாகவே தேர்தல் தாமதம் அடைந்து வருகிறது. மாகாண சபைத் தேர்தல் தாமதம் அடைவதற்கு கடந் தகால நல்லாட்சி அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும். மூன்றில் இரண்டு பெரும் பான்மைப் பலத்துடன் புதிய தேர்தல் முறைமையை மாகாணசபைத் தேர்தலுக் காக அன்று கொண்டு வந்தனர். ஆனால் அந்த முறைக்கு ஏற்ப அவர்களினால் எல்லை நிர்ணய அறிக்கையை முன்னெ டுக்க முடியவில்லை.

தற்போது அதனால் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதில் சட்டச் சிக்கல் காணப்படுகின்றன. தற்போதைய சட்டத்துக்கு அமைவாக புதிய தேர்தல் முறையே நடைமுறையில் இருக்கின்றது. அதாவது 50 வீத தொகுதி முறை மற்றும் 50 விகிதாசார முறை என்ற கலப்பு தேர்தல் முறையே காணப்படுகின்றது. ஆனால் அந்த முறையில் தேர்தலை நடத்த முடியாத சூழல் காணப்படுகின்றது. காரணம் எல்லை நிர்ணய அறிக்கை நிறைவேற்றப்பட வில்லை. பழைய முறையில் தேர்தலை நடத் தலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன தெரிவிக்கின்றன. ஆனால் நாம் சட்டமா அதிபர் திணைக் களத்துடன் இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்தோம். பழைய முறையில் தேர்தலை நடத்துவதாயின் அந்த பழைய தேர்தல் முறைமையையே அதாவது விகிதாசார தேர்தல் முறைமையையே தற்போது புதிய தேர்தல் முறைமையாக பாராளுமன்றத்தை கொண்டுவந்து நிறைவேற்றவேண்டும்.

அதாவது அமைச்சரவைக்கு அந்த முறையை சமர்ப்பித்து வர்த்தமானியில் வெளியிட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அது தொடர்பாக விவாதம் நடத்தி நிறை வேற்ற வேண்டும். பழைய தேர்தல் முறை யையும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்திலேயே நிறைவேற்ற வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு காணப்படுகிறது.

எனவே அந்த நடவடிக்கைகளை மேற் கொள்ளவேண்டும். நாம் தற்போதுதான் வரவு செலவுத் திட்டத்தை முடித்து இருக் கின்றோம். வரவு செலவுத் திட்ட காலப் பகுதியில் புதிய சட்டங்களை பாராளுமன் றத்தில் நிறைவேற்ற முடியாது. எனவே ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதமளவில் இந்த பழைய தேர்தல் முறையை புதிய முறையாக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

அதன்பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தலை தாமதப்படுத் தும் தேவை அரசாங்கத்துக்கு இல்லை. கடந்த காலங்களில் நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை தாமதப்படுத்தியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை அண்மையில் பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதனை ஏற்றுக்கொள் வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நான்கு வருடங்களுக்கு மேல் சென்றிருக்கின்றன என்றார்.

## இலங்கையில்... (தொடர்ச்சி)

'தேசிய பாதுகாப்பு' என்ற கோஷத்தை முன்னிறுத்தி கோட்டாபய ராஜபக் ஷ ஜனா திபதித் தேர்தலில் போட்டியிட்டார். இருப் பினும் அவரது நிர்வாகத்தினால் தீவிரவா தத்தை இல்லாதொழிப்பதற்கு மேற்கொள் ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் சிறுபான் மையின தமிழ், முஸ்லிம் சமூகங்களின் மீது அடக்குமுறைகளைப் பிரயோகித்து, ஒடுக்கும் வகையில் அமைந்திருப்பதாக அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அதுமாத்திரமன்றி மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களுடன் தொடர்பு பட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகள் அரசாங்கத்தின் உயர்பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்றமை தொடர்பிலும் சிறுபான்மையின தமிழ், முஸ்லிம் மக்களை இலக்குவைத்து பயங் கரவாதத்தடைச்சட்டம் பயன்படுத்தப்படு கின்றமை தொடர்பிலும் அவர்கள் கரிசனை வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்க காங்கிரஸின் டொம் லான்ரோஸ் மனித உரிமைகள் ஆணைக்கு ழுவினால் 'இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல்' தொடர்பில் தகவல்களைத் திரட்டுவதற்கான விசாரணை யொன்று கடந்த வியாழக்கிழமை இலங்கை நேரப்படி அதிகாலை 2.30 மணிக்கு நிகழ்நி லையில் நடத்தப்பட்டது.

அவ்விசாரணைகள் டொம் லான்ரோஸ் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிர தித்தலைவர்கள் மற்றும் காங்கிரஸ் உறுப் பினர்களான ஜேம்ஸ் பி.மெக்கோவேர்ன், கிறிஸ்டோபர் எச்.ஸ்மித் மற்றும் டெபோரா ரோஸ் ஆகியோரால் முன்னெடுக்கப்பட்ட துடன் சட்டத்தரணியும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளருமான அம்பிகா சற்குண நாதன், ஹார்வாட் சட்டக்கல்லூரி மாணவர் சோன்ரா அன்ரன், பெண்களின் செயற்றிட்ட வலையமைப்பின் இணை ஸ்தாபகர் ஷ்ரீன் அப்துல் சரூர், வேக் ஃபோரஸ்ட் பல்க லைக்கழகத்தின் அரசியல் மற்றும் வெளி விவகாரத்துறைப் பேராசிரியர் நெய்ல் டி வோட்டா, சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசிய பிராந்தியப்பணிப்பாளர் கரோலின் நாஷ் மற்றும் மனித உரிமைகள் கண்காணிப் பகத்தின் ஆசிய பிராந்தியப்பணிப்பாளர் ஜோன் சிப்ரொன் ஆகியோர் சாட்சியங்க ளாக ஆஜராகியிருந்தனர்.

இவ்விசாரணைகளுக்கு முன்னதாக ஆற்றிய ஆரம்ப உரையிலேயே காங்கிரஸ் உறுப்பினர்கள் மேற்கண்டவாறு தெரிவித் தனர். இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் அவர்கள் ஆற்றிய உரையில் இடம்பெற்றி ருந்த முக்கிய விடங்கள் வருமாறு,

**கிறிஸ்டோபர் எச்.ஸ்மித்**

கடந்த 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் நிலைவரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தோம். ஆனால் கவலையடையத்தக்க விதத்தில் பொறுப்புக்கூறல் தொடர்பான கரிசனைகள் இப்போதும் தொடர்கின்றன. இலங்கையில் 2009 ஆம் ஆண்டில் முடிவுக்குக்கொண் டுவரப்பட்ட பல தசாப்தகாலப்போர் ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களைப் பறித்ததுடன் ஆயிரக்கணக்கானோர் தமது வாழ்விடங்களிலிருந்து இடம்பெயர்ந்து செல்வதற்கும் வழிவகுத்தது. இலங்கையின் பெரும்பான்மையின சிங்களவர்களுக்கும் சிறுபான்மையினத் தமிழர்களுக்கும் இடை யிலான பிளவுகளின் தொடர்ச்சியாக இரா ணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப்பு லிகள் இயக்கத்துக்கும் இடையில் இந்த மூன்று தசாப்தகாலப்போர் இடம்பெற்றது. இதற்கு மதரீதியான பரிமாணமொன்றும் காணப்படுகின்றது.

இலங்கை பல்வேறு இனங்களைக் கொண்ட நாடாகும். அதன் பின்னணியில் கடந்த 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத்தாக் குதல்களும் அரசாங்கத்தினால் பின்பற்றப் படும் சிங்கள பௌத்தத்தேசியவாதமும் குறிப்பிடத்தக்கவையாகும். இவைய னைத்தும் போரினால் பாதிக்கப்பட்ட தரப் பினருக்கான நீதியும் பொறுப்புக்கூறலும் உறுதிசெய்யப்படுவதைத் தாமதப்படுத்தியி ருக்கின்றன. இவ்வருடம் ஜனவரி மாதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை யினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் மேலோங்கிவரும் இனரீதியான தேசிய வாதம் மற்றும் அதிகரித்துவரும் தண்டனை களிலிருந்து தப்பிக்கும் போக்கு ஆகியவை தொடர்பில் கரிசனை வெளியிடப்பட்டி ருந்தது. கடந்த 2018 ஆம் ஆண்டு விசார ணைகளில் பயங்கரவாதத்தடைச்சட்டம் தொடர்பில் கரிசனைகள் வெளியிடப்பட் டிருந்த போதிலும் இன்னமும் அச்சட்டம் முன்பிருந்ததைப்போன்று நடைமுறையில் உள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

**ஜேம்ஸ் பி.மெக்கோவேர்ன்**

இவ்வாரம் (கடந்த வாரம்) நடத்தப்பட்ட ஜனநாயக மாநாட்டில் கலந்துகொள்வதற் கான ஜனாதிபதி ஜோபைடன் தலைமை யிலான நிர்வாகம் உலகளாவிய ரீதியில் பல்வேறு நாடுகளுக்கும் அழைப்புவிடுத்தி ருந்தது. ஏதேச்சதிகாரத்தை மட்டுப்படுத்தல், ஊழலை இல்லாதொழித்தல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகிய 3 விட யங்களை அடிப்படையாகக்கொண்டே இந்த ஜனநாயக மாநாடு ஏற்பாடு செய் யப்பட்டிருந்தது. அந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு இலங்கைக்கு அழைப்புவிடுக் கப்படவில்லை.

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டில் முடிவுக்குக்கொண்டுவரப்பட்ட 26 வருடகா லப்போரின் போது இடம்பெற்ற மிகமோச மான மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் இன்னமும் உறுதிசெய் யப்படாமை தொடர்பில் இவ்விசாரணைக ளின்போது விசேட கவனம் செலுத்தவேண் டியுள்ளது. கடந்த 2015 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தின் இணையனுச ரணையுடன் ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழு, காணா மல்போனோர் பற்றிய அலுவலகம், இழப் பீட்டுக்கான அலுவலகம் என்பன ஸ்தாபிக் கப்பட்டமை மற்றும் பயங்கரவாதத்தடைச் சட்டத்தை மீளாய்வுக்குட்படுத்துவதற்கான முனைப்புக்கள் ஆகியவை பொறுப்புக்கூ றலை உறுதிசெய்வதற்குரிய முன்னேற்றக ரமான நகர்வாக நோக்கப்பட்டன. இருப் பினும் அந்த நகர்வுகளைப் பின்நோக்கித் திருப்பும் வகையிலான நடவடிக்கைகளே தற்போதைய அரசாங்கத்தினால் முன்னெ டுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக பொதுமக்களைப் படுகொ லைசெய்தமை மற்றும் மிகமோசமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய இராணுவ அதிகாரிகள் உயர்பதவிகளுக்கு நியமிக்கப்பட்டமை, சிறுவர்கள் உள்ளடங்கலாக 8 தமிழர்களைப் படுகொலை செய்த வழக்கின் குற்றவா ளியான முன்னாள் இராணுவ சார்ஜன்ட் ஒருவர் விடுதலைசெய்யப்பட்டமை ஆகியவை இந்த அரசாங்கத்தின் நிலைப் பாட்டைத் தெளிவாகக் காண்பிக்கின்றன. அதுமாத்திரமன்றி போர் முடிவடைந்து 12 வருடங்களின் பின்னர் மிகமோசமான மனித உரிமை மீறல்களுக்கான தண்டனை களிலிருந்து தப்பிக்கும் போக்கு என்பது முன்னெப்போதுமில்லாத வகையில் தீவிரம டைந்திருக்கின்றது.

அடுத்ததாக இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தினருக்கு எதிரான அச்சுறுத்தல் களும் ஒடுக்குமுறைகளும் அதிகரித்துவ ருகின்றன. கொவிட் 19 வைரஸ் தொற் றினால் உயிரிழப்போரின் சடலங்களைக் கட்டாயமாக அடக்கம் செய்வதற்கான தீர் மானம், முகத்தை மறைக்கும் வகையிலான ஆடைகள் அணிவதைத் தடைசெய்தல் போன்ற அரசாங்கத்தின் தீர்மானங்கள் குறிப் பாக முஸ்லிம் சமூகத்தை ஓரங்கட்டும் வகை யிலேயே அமைந்துள்ளன. அதேபோன்று பயங்கரவாதத்தடைச்சட்டம் முஸ்லிம் சமூ கத்தை இலக்குவைத்தும் பயன்படுத்தப்ப டுகின்றன. மேலும் இலங்கையில் சிவில் சமூக செயற்பாடுகளுக்கான இடைவெளி மிகவும் விசனத்துக்குரிய வகையில் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. தமது உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் ஆர்ப்பாட்டங் களில் ஈடுபட்ட தொழிற்சங்கவாதிகள், மாணவர்கள், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் அச்சுறுத் தப்பட்டதுடன் கைதுசெய்யப்பட்டதாகவும் அறியமுடிகின்றது.

**டெபோரா ரோஸ்**

துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் இடம் பெற்ற சிவில் யுத்தம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டதன் பின்னரும் மனித உரிமை மீறல்கள் முடிவுக்குக்கொண்டு வரப்படவில்லை. 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுதினப்பய ங்கரவாதத்தாக்குதல்களில் 250 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். அதனைத்தொடர்ந்து 'தேசிய பாதுகாப்பு' என்ற கோஷத்தை முன்னிறுத்தி கோட்டாபய ராஜபக் ஷ ஜனாதிபதித்தேர்தலில் போட்டி யிட்டார். இருப்பினும் அவரது நிர்வாகத்தி னால் தீவிரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சிறுபான்மையின தமிழ், முஸ்லிம் சமூகங் களின்மீது மேலும் அடக்குமுறைகளைப் பிரயோகிக்கும் வகையிலும் அவர்களை ஒடுக்கும் விதத்திலும் அமைந்துள்ளன. குறிப்பாகத் தற்போது அமுலிலுள்ள பயங்கரவாதத்தடைச்சட்டம் இன, மதரீதியான சிறுபான்மையினரை இலக்குவைத்துத் தன்னிச்சையாகத் தடுத்துவைப்பதற்கும் சித்திரவதைகளுக்கு உட்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகின்றது. ராஜபக் ஷ அரசாங்கம் கடந்தகால மீறல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தவில்லை. போர்க்குற்றங்களுடன் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப் பட்டிருப்பவர்கள் தொடர்ந்தும் அரசாங்கத் தின் முக்கிய உயர்பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்றனர்.

## 13 ஐ... (தொடர்ச்சி)

எனவே இந்தியாவுக்கும் உலக நாடுகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் நாம் கூறுவது என்னவென்றால், அரசியலமைப்பில் இருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தையாவது முதல் கட்டமாக அமுல்படுத்தி காட்டுங்கள் என்பதாகும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வலியுறுத்தினார்.

அதேபோல் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி தமிழ் பேசும் மக்களின் மனங்களையும் இதயத்தையும் வென்று காட்டுங்கள் எனவும் அரசாங்கத்துக்கு அவர் சவால் விடுத்தார்.

கொழும்பு வெள்ளவத்தை குளோபல் டவர் ஹோட்டலில் நேற்று தமிழ் பேசும் மக்களின் அரசியல் கட்சித்தலைவர்கள் ஒன்றிணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இணைந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஈழத்தமிழ் மக்களையும் மலையக தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களாகிய நாம், தமிழ் மக்களின் பிரதான பிரச்சினைகள் குறித்து எம்மத்தியில் சிரேஷ்ட தலைவராக உள்ள சம்பந்தன் ஐயாவின் தலைமையில் கூடி ஆராய்ந்துள்ளோம். இதன்போது 13 ஆவது திருத்தம் குறித்தே அதிகமாக பேசப்பட்டது. ஆனால் 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் இறுதி அரசியல் இலக்காக கருதப்படவில்லை. 13 ஆவது திருத்தம் குறித்து நாம் விசேடமாக கோரிக்கை விடவேண்டிய அவசியம் இல்லை. இது இலங்கை அரசியல் அமைப்புக்குள் இருக்க வேண்டிய ஒரு சட்டமாகும். இதனை அமுல்படுத்தி காட்டுங்கள் என்பதே எமது கோரிக்கையாகும். 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி தமிழ் பேசும் மக்களின் மனங்களையும் இதயத்தையும் வென்று காட்டுங்கள் என்பதே அரசாங்கத்துக்கு நாம் விடுக்கும் சவாலாகும்.

தமிழ் மக்களின் ஒரேயொரு அதிகாரப் பரவலாக்கல் சட்டமாக அரசியல் அமைப் பில் வழங்கப்பட்டுள்ள இந்த சட்டம் இந்திய இலங்கை ஒப்பந்தம் மூலமாகவே உள்ளே நுழைந்தது. ஆகவே இந்திய அரசாங்கத்துக்கும் இதனை வலியுறுத்தும் பிரதானமான கடப்பாடு இருக்கின்றது. கட்சிகள் வேறுபட்டாலும் இந்திய அரசாங்கத்துக்கு இது குறித்த கடமைப்பாடு உள்ளது. உலக நாடுகளுக்கும் இது குறித்த கடப்பாடுள்ளது. தேசிய பிரச்சினை உக்கிரமடைந்து அதன் மூலமாக கொடுமை யான யுத்தம் இடம்பெற்ற வேளையில் உலக நாடுகள் ஒன்றுகூடி இந்தியாவும் சேர்ந்து இலங்கை அரசாங்கத்துக்கு அதிகமாக உதவிகளை செய்தன. யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வுகள் வழங்கப்படும் என்ற செய்தியை அவர்கள் முன்வைத்திருந்தனர். ஆனால் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 12 ஆண்டுகள் பூர்த்தியாகும் இன்றுவரை ஒன்றுமே நடைபெறவில்லை. ஆகவே இது குறித்த நியாயமான கோபம் எம்மிடம் உள்ளது. அதன் வெளிப்பாடே இதுவாகும்.

ஆகவே இந்தியாவுக்கும் உலக நாடுகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் நாம் கூறுவது என்னவென்றால், அரசியல் அமைப்பில் இருக்கும் இந்த சட்டத்தையாவது முதல் கட்டமாக நீங்கள் அமுல்படுத்தி காட்டுங்கள் என கூறுகின்றோம். இந்த கோரிக்கையில் 13ஆவது திருத்தத்துக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. மொழி உரிமை, குடிப்பரம்பல்அழிப்பு, தேசியஒருமைப்பாடு குறித்தும், முஸ்லிம் மக்களின் மீதான தாக்குதல்கள், இன கலாசார அங்கீகாரம், மலையக மக்களின் குடியுரிமை குறித்தும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட பல தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் இன்றும் சிறையில் உள்ளனர். யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 12 ஆண்டுகள் முடிந்துள்ள நிலையிலும் யுத்தத்தில் ஈடுபட்ட பலர் இன்று அரசாங்கத்தில் அமைச்சர்களாகவும் எம்.பி.க்களாகவும் உள்ள நிலையில் அவர்களால் ஆணையிடப்பட்டு சிறு சிறு வேலைகளை செய்த பலர் சிறைக்குள் வாடிக்கொண்டுள்ளனர். அவர்கள் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட வேண்டும்.11 இளைஞர்களை கொழும்பில் கடத்தியதாக முன்னாள் கடற்படை தளபதிக்கு அவர் சம்பந்தமான வழக்கு விசாரணைகளை வாபஸ் பெற்றுக்கொள்ள முடியும் என்றால், மிருசுவில் படுகொலையில் ஈடுபட்ட குற்றத்தில் தண்டனை வழங்கப்பட்ட முன்னாள் இராணுவ வீரருக்கு மன்னிப்பு வழங்க முடியும் என்றால் ஏன் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாது. பிரியந்த குமாரவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பாகிஸ்தானை கேட்கும் நீங்கள் இலங்கை தமிழ் முஸ்லிம் மக்களுக்கு எதிராக அநியாயம் செய்தவர்களுக்கு ஏன் நடவடிக்கை எடுக்க தயங்குகின்றீர்கள் என்பதே எமது கேள்வியாகும் என்றார்.

# சங்கமன்கண்டியில் புத்தர்சிலை; குழப்பத்தை ஏற்படுத்தும் சதி

## பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன்

(வெல்லாவெளி நிருபர்)

பொத்துவில் சங்கமன்கண்டிப் பிரதேசத்தில் புத்தர்சிலை வைக்கப்பட்டுள்ளமை தமிழ். சிங்கள மக்களுக்கு இடையில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கான சதித்திட்டமாகும் என த. கலையரசன் எம்.பி.தெரிவித்தார்.


சங்கமன்கண்டியில் புத்தர்சிலை வைக்கப்பட்டமையைக் கண்டித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சங்கமன்கண்டி மலையில் பௌத்தகுருமார் புத்தர்சிலை ஒன்றினை சனிக்கிழமை அதிகாலை வைத்துள்ளார்கள். இதற்கு முன்னரும் இப்பிரதேசத்தில் புத்தர் சிலை வைப்பதற்கான நடவடிக்கைகள் பலதடவை மேற்கொள்ளப்பட்டபோதும் மக்களது கடும் எதிர்ப்பினால் கைவிடப்பட்ட வரலாறுகளும் அதிகம் உண்டு. இன்று அந்த இடத்தில் புத்தர்சிலையை வைத்து இருக்கின்றார்கள். இந்தப்பிரதேசம் முற்றுமுழுதாக தமிழர்கள் வாழுகின்ற பிரதேசம். இச்செயலானது இந்நாட்டில் வாழுகின்ற தமிழ், சிங்கள மக்களுக்கு இடையில் மீண்டும் ஒரு குழப்பத்தை ஏற்படுத்துவதற்கான சதி நடவடிக்கையாகும்.

இனங்களுக்கு இடையில் குழப்பத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக மதத்தலைவர்கள் செயற்படுவது வேதனையான விடயமாகும். இவ்வாறாக மத குருமார்கள் நினைத்த இடங்களில் மத நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த நாட்டின் சட்டம் இடம்கொடுக்கிறதா? இந்த விடயத்தை சாதாரணவிடயமாக நாங்கள் பார்க்கமுடியாது. வடகிழக்குப் பிரதேசங்களில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.இந்தவிடயம் தொடர்பாக அதிகாரிகளைத் தொடர்புகொண்டு கேட்டபோது இப்பகுதி வனபரிபாலன திணைக்களத்துக்குரியது. அதில் 2 ஏக்கர் பௌத்த மதகுரு ஒருவருக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்தது .இது வேதனையான விடயம். வனபரிபாலன திணைக்களம் தாங்கள் விரும்பிய பெரும்பான்மையினருக்கு காணிகளை வழங்குவது ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ப்ரேக் ஷா நாடக விழா ஆரம்ப நிகழ்வு சனிக்கிழமை (11)மாலை மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் டவர் நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.எஸ்.திசாநாயக்க, பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாஷிம் உமர், தமிழ் நாடக பிரிவுகளின் பணிப்பாளர் ஆகியோரையும் காணலாம்.

# ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயத்தில் கீதா ஜெயந்தி



கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை கீதா ஜெயந்தி அனுஷ்டிக்கப்படும்.

அன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு நடைபெறும் பாராயணத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு பகவத்கீதை அன்பளிப்பாக வழங்கப்படும்.

உலக மக்களின் புனித நூலாக போற்றப்படும் பகவத்கீதையை பக்தர்கள் வீட்டில் வைத்து பூஜித்து நாளாந்தம் ஒரு சுலோகத்தையேனும்வாசித்து பகவான் அருளைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னர் குருஷேத்திரத்தில் நடைபெற்ற 18 நாள் பாரத யுத்தத்தின் முதல்நாளன்று பகவான் கிருஷ்ணரால் அர்ச்சுனனுக்கு பகவத் கீதை போதிக்கப்பட்ட தினமே பகவத்கீதை ஜெயந்தி தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த தினத்தில் பகவத் கீதையைப் பெற்றுக்கொள்வது ஒரு மாபெரும் புண்ணியமும் அதிர்ஷ்டமும் நிறைந்த நிகழ்வு என்று நம்பப்படுகிறது.

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு பக்தர்கள் பகவத்கீதையொன்றைப் பெற்று வாழ்வில் எல்லா நலன்களையும், வெற்றிகளையும் பெற பகவான் அருள்புரிவாராக.

# வீரகேசரி சிறுவிளம்பரங்கள்

### மைவெளிச்சம்

ஓம் சாயப்பா உங்கள் பிறந்த திகதி வருடம் மாதம் என்பனவற்றுடன் முன்கூடியே தொடர்பு கொண்டு வரவும். காதல் பிரச்சினை, தொழில் பிரச்சினை, குடும்பப் பிரச்சினை, வெளிநாட்டு பயணம் போன்ற பிரச்சினைகளுக்கு முன்கூடியே 077 7368640 தொடர்பு கொண்டு வரவும். www.eswari.com (காலை 10 மணி தொடக்கம் 6.00 மணிவரை) Dr.ஈஸ்வரி Hons JP , இல.21/1/1 ஜெம்பட்டாவீதி கொழும்பு 13.

### தேவை

அனுபவமுள்ள சலூன் வேலையாட்கள் உடனடியாக தேவை. வயதெல்லை 35 இற்கு உட்பட்டவர்கள் பகல் உணவு மற்றும் தங்குமிட வசதி உண்டு. தொடர்புகளுக்கு - 077 4746236

### கடை விற்பனைக்கு/ வாடகைக்கு

கொழும்பு 12 (Pettah) சென்ட்ரல் ரோட்டில் கடை/ வர்த்தக நிலையம். A/C Office & Bathroom, இரண்டு மாடி, 3.70 Perch. Main Street, Sea Street, Dam Street அருகாமையில், பிரதான வீதியில் அமைந்துள்ளது. 076 7672036

### தேவை

நிட்டம்புவயில் உள்ள சொசேஜஸ் தொழிற்சாலைக்கு ஆண்/ பெண் தேவை. உணவு, தங்குமிடம் தரப்படும். அடிப்படை சம்பளம் 40,000/=. மேலதிக தகவல்களுக்கு - 0777 355722, 071 1442816

### வாடகைக்கு

1 ஆம் மாடியிலுள்ளதும் W.A.Silva Mw பாமன் கடை சந்தியிலுள்ளதுமான Apartment 6 மாத வாடகை முற்பணத்துடன் உண்டு. 3 அறைகள் கொண்டது. இயற்கை காற்றுடனும் வெளிச்சத்துடனும் இடவசதியும் வாழ ஏற்றது. 19/12/2021 பார்வையிடலாம். Viber / WhatsApp 077 8075566 குறைந்த Maintanance Fee கொண்ட இதனை ஆகக் குறைந்தது. 2 வருடத்திற்கு வாடகைக்கு கிடைக்கும்

### ஜோதிடம்

பிரிவால் வேதனையா நல்ல நட்பை இழந்து விட்டீர்களா? வீண் கவலை வேண்டாம் நீங்கள் நினைப்பது நடக்கும் கைரேகை, எண் ஜோதிடம், ஜாதகப்பிரசன்னம் மூலம் தொழில் நஷ்டம், திருமணம், வெளிநாட்டு பயணம், அதிர்ஷ்டம், கடன் தொல்லை நீங்க மற்றும் எதிர்காலத்தை தெளிவாக அறிந்து நிம்மதியுடன் வாழ ஜோதிட மனவள ஆலோசகர் சாமி கங்காதரன் ஐயாவை தொடர்பு கொள்ளுங்கள். 077 2105957 இரகசியம் நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாக்கப்படும். No. 145/1, Galle Road, Colombo - 06. 0777 310088, 011 2055655

### தேவை

முட்டை தொழிற்சாலைக்கு ஆண்/ பெண் தேவை. உணவு, தங்குமிடம் தரப்படும். வயது 25 - 55. சம்பளம் 35,000/=. 0777 355722, 071 1442816

### சேவை

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை. AAA Gold Center. 076 5684346

### வாடகைக்கு

ஸ்டோர் வாடகைக்கு 20F நீளம், 10 1/2 அடி அகலம், 10 1/2 அடி உயரம் ஸடர் கேட் பாதுகாப்பானது, லோடிங் வசதி, இல.69, பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு - 12. வாடகை 40,000/=. ஒரு வருட அட்வான்ஸ், வாடகை 20,000/=, 800,000/= டிபோசிட் ரிபன்டபல். தொடர்பு - 071 8828263 ஜின்னா.

### மணமகன் தேவை

1994 யாழிந்து விஸ்வகுலம், ஹஸ்தம், Teacher, யாழ்ப்பாணம், பதிவு #6650, புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர் கூலி இல்லை. Appointments 076 664 9401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd., 91 - 4/2, Galle Road, Bambalapitya, Colombo - 04.

### தேவை

தேங்காய் பால்மா தொழிற்சாலைக்கு ஆண்/ பெண் தேவை. வயது 18 - 40 அடிப்படை சம்பளம். 40,000/= - 45,000/= வரை. மேலதிக தகவல்களுக்கு - 0777 355722, 071 1442816

நம்பகத்தன்மையான நடைமுறை தகவல்களை உடனுக்குடன் அறிந்துக்கொள்ள...
www.virakesari.lk


DESIRES
Kurtis
Legins / Plazzo
Sizes M to 5XL
Discounts Available
28/4 A, Duplication Road, Colombo - 04.
Tel : 0112 552 126
Mobile : 0777 767 684

## பெயர் மாற்றம்

இல.78/2, பெனிதுடுமுல்ல வீதி, நாவலப்பிட்டி எனும் முகவரியைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இல. **757872145V** ஐ கொண்ட **கருப்பையா சண்முகம் கிருஷ்ணன் வடிவு** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **கருப்பையா சண்முகம் கிருஷ்ணன் வடிவு / சண்முகம் ஜெகதீஸ்வரன் வடிவு** என மாற்றிக்கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பம் இடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**கருப்பையா சண்முகம் கிருஷ்ணன் வடிவு / சண்முகம் ஜெகதீஸ்வரன் வடிவு** 11.12.2021

## பெயர் மாற்றம்

இல.23/26, எழுத்தூர் தோட்டக்காடு, மன்னார் எனும் முகவரியைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இல **465920386V** கொண்ட **வள்ளியம்மை** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **பாக்கியம்** என மாற்றிக்கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

07.12.2021 த.பாக்கியம்

நவீன் செராமிக்
பண்டிகைகால விசேட விற்பனை
Latest collection out for Christmas!
வரையறுக்கப்பட்ட கையிருப்பு
WALL TILES
FLOOR TILES
BATHROOM SETS
TAPS & SHOWERS
BATHROOM DOORS
ACCESSORIES
*ரூ. 800/- இலிருந்து
*நிபந்தனைகளுக்குட்பட்டது
NAVEEN CERAMIC (PVT) LTD
கொட்டாஞ்சேனை
297, George R.De Silva Mw, Colombo - 13.
Tel : 011 232 5406, 234 5197/8
நுகேகொடை
104, Nawala Rd, Nugegoda.
Tel : 011 553 5530


ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயத்தில்
கீதா ஜெயந்தி
14.12.2021

ISKCON
முகவரி: இல. 188 புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13
தொலைபேசி இல: 0772288166
மின்னஞ்சல்: iskcon @slt.lk
முகநூல் முகவரி: Iskcon Sri Lanka
கொட்டாஞ்சேனை ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் நாளை 2021.12.14 திகதி செவ்வாய்க்கிழமையன்று கீதா ஜெயந்தி அனுஷ்டிக்கப்படும்.
அன்றைய தினம் மாலை 5.00 மணிமுதல் பகவத் கீதை பாராயணம் நடைபெறும். பாராயண நிகழ்வில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு பகவத்கீதை அன்பளிப்பாக வழங்கப்படும்.
பக்தர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு பகவான் அருளைப்பெற்றுய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

உலக தமிழ் செய்தி வரலாற்றில் 90 வருட பாரம்பரியத்தை கொண்டுள்ள, இலங்கையின் முதன்நிலை முதற்தர செய்தி வழங்குனர்
வீரகேசரி செய்திகள்
நடந்தவற்றை அப்படியே திரிபு இல்லாமல் உள்ளது உள்ளபடியே உங்களுக்காக!


STAR தமிழ் TELEVISION
UHF 46 | DIALOG TV 22 | PEO TV 21
ASK CABLE 48 | CITY CABLE
தினந்தோறும் இரவு 7 மணிக்கு காணத்தவறாதீர்கள்

வென்டோல்
அஸ்வபல வர்தணி
திருமணமான ஆண்கள் இழக்கும் சக்தியை மீளப்பெற வேண்டும்.
உணவுகளால் கிடைக்காத தினந்தோறுமாக பாவிக்கக்கூடிய 100% இயற்கையான உபரி போஷனை சேர்க்கை
வென்டோல் அஸ்வபல வர்தனி
உயர் சக்தி லேகியம்
80 குளிகைகள் 890/=
கஸ்தூரி 4 குளிகைகள் 490/=


0774 525 425
சகல ஆங்கில , சிங்கள மருந்தகங்களில் பெற்றிடலாம்.








# விண்டீஸ் அணிக்குள் கொரோனா

பாகிஸ்தானுக்கு பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணியில் 3 வீரர்களுக்கும், ஒரு ஊழியருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அவர்கள் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

மே.இ.தீவுகள் அணியில் வேகப்பந்துவீச்சாளர் ஷெல்டன் கொட்ரெல், ரொஸ்டன் சேஸ், கைல் மேயர்ஸ் ஆகியோரும், ஒரு ஊழியரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். கராச்சியில் வீரர்களுக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இவர்களுக்கு தொற்று இருப்பது உறுதியானது.

பாகிஸ்தான் அணியுடன் 3 ஒருநாள், இருதுக்கு 20 போட்டிகளில் விளையாடுவதற்காக மே.இ.தீவுகள் அணி கடந்த வியாழக்கிழமை கராச்சி நகரம் சென்றடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## தெற்காசிய மகளிர் இளையோர் கால்பந்தாட்ட தொடர்
# பூட்டானிடம் வீழ்ந்த இலங்கை

தெற்காசிய நாடுகளுக்கிடையிலான 19 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் கால்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டி பங்களாதேஷில் நடைபெற்று வருகின்றது. இதில் இலங்கை உட்பட இந்தியா, பூட்டான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய ஐந்து நாடுகள் பங்கேற்றுள்ளன.

கடந்த சனிக்கிழமை ஆரம்பமான இந்தத் தொடரின் முதலாவது போட்டியில் இலங்கையும் பூட்டானும் பலப்பரீட்சை நடத்தின. இதில் பூட்டான் அணி அபாரமாக ஆடி 5–0 என்ற கோல்கள் அடிப்படையில் முதல் போட்டியில் வெற்றியீட்டியது.

இலங்கை அணியோ பரிதாபகரமாக தோற்றுப் போனது.

அதேவேளை அன்றைய தினம் நடைபெற்ற மற்றுமொரு ஆட்டத்தில், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதின.

இதில் இரு அணிகளும் எந்தவொரு கோலையும் பதிவு செய்யாத நிலையில் போட்டி 0–0 என்ற அடிப்படையில் சமநிலையில் முடிந்தது.

தொடரில் இன்று நடைபெறவுள்ள போட்டியில் இலங்கை அணி இந்தியாவை எதிர்த்தாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# லங்கா பிரிமியர் லீக் தொடர் சிறந்த வீரர்களை உருவாக்கும்

இலங்கையில் தரமான கிரிக்கெட் வீரர்களைக் கண்டறிய லங்கா பிரிமியர் லீக் தொடர் நிச்சயமாக உதவும் என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் ரவி போப்ரா தெரிவித்துள்ளார்.

லங்கா பிரிமியர் லீக் கண்டிப்பாக இலங்கை கிரிக்கெட்டுக்கு உதவும் என்று நான் நினைக்கிறேன். எந்த நாட்டில் ஒரு லீக் உருவாக்கப்பட்டாலும், அந்த லீக் அந்த நாட்டில் சிறந்த கிரிக்கெட் வீரர்களை உருவாக்க உதவியது.

லங்கா பிரிமியர் லீக்கின் தாக்கத்தை இன்னும் 3 அல்லது 4 ஆண்டுகளில் நீங்கள் காண்பீர்கள். வனிந்து போன்ற வீரர்கள் இலங்கையிலிருந்து வருவதை நாங்கள் ஏற்கனவே காண்கிறோம்.

வனிந்து ஹசரங்க தற்போதுள்ள மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

லங்கா பிரிமியர் லீக் தொடரில் ரவி போப்ரா கண்டி அணியில் விளையாடி வருகின்றார்.

காலிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் ரவி போப்ரா ஆட்டநாயகனாக தெரிவுசெய்யப்பட்டார். இந்தப் போட்டியில் அவர் 39 பந்துகளில் 34 ஓட்டங்களைப்பெற்று அணியின் வெற்றிக்கு பங்காற்றினார்.






**இன்றைய எல்.பி.எல். போட்டி**
யாழ்ப்பாணம் எதிர் தம்புள்ளை இரவு 7.30

# ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டுக்கு இடமில்லை

லோஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டி பட்டியலில் கிரிக்கெட் இடம்பெறவில்லை.

கடந்த 1900 பரிஸ் ஒலிம்பிக்கில் முதன் முறையாக கிரிக்கெட் இடம்பெற்றது. இதில் இங்கிலாந்து அணி தங்கம் வென்றது. பின் கிரிக்கெட் நீக்கப்பட்டது. எதிர்வரும் 2024 ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டை சேர்க்க வேண்டும் என ஐ.சி.சி.விண்ணப்பித்துள்ளது.

இதனிடையே 2028, லோஸ் ஏஞ்சல்ஸ் (அமெரிக்கா) ஒலிம்பிக்கில் இடம்பெறும் 28 விளையாட்டு கொண்ட முதற்கட்ட பட்டியலில் கிரிக்கெட் இடம்பெறவில்லை.

குத்துச்சண்டை, பளுதூக்குதல், குதிரையேற்றம் நீக்கப்பட்டு ஸ்கேட்போர்ட், அலைச்சறுக்கு, ஸ்போர்ட்ஸ் கிளிம்பிங் போட்டிகள் உத்தேச பட்டியலில் சேர்க்கப்பட்டன.

தவிர 2023இல் இன்னும் சில விளையாட்டுகளை சேர்க்க பட்டியல் தரப்படும். இதில் கிரிக்கெட்டை இணைக்க ஐ.சி.சி. முயற்சிக்கிறது.

# அமெரிக்காவைத் தாக்கிய சூறாவளி 100 க்கும் அதிகமானோர் உயிரிழப்பு

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனது நாட்டில் சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு உதவுவதற்கான அனைத்தையும் மேற்கொள்ள அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு தாக்கிய இந்த சூறாவளியால் வீடுகளும் வர்த்தக நிலையங்கள் பலவும் தரைமட்டமாகியுள்ளன. மேற்படி சூறாவளியில் சிக்கி குறைந்தது 100 பேர் பலியாகியுள்ளதாக அஞ்சப்படுகின்ற நிலையில் 70 க்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் அநேகர் மெழுகுதிரி தொழிற்சாலையொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த தொழிலாளர்களாவர்.

இந்நிலையில் ஜோ பைடன் இது வரலாற்றில் மிகப் பெரிய சூறாவளியாகவுள்ளது எனத் தெரிவித்து, சூறாவளியால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள கென்துக்கி மாநிலத்தில் அவசரகால அனர்த்த நிலையொன்றைப் பிரகடனப்படுத்தியுள்ளார். "இது மிகவும் துன்பகரமான நிகழ்வாகும். இந்த சூறாவளியால் இடம்பெற்ற உயிரிழப்புகள் மற்றும் சேதங்கள் என்பன குறித்து எம்மால் அறிய முடியாதுள்ளது" என அவர் கூறினார்.

இந்த சூறாவளியால் கென்துக்கியின் மேபீல்ட் பிராந்தியத்திலுள்ள மெழுகுதிரி தொழிற்சாலை, அயல் பிராந்தியமான அர்கன்ஸாஸிலுள்ள மருத்துவ நிலையம் என்பன அழிவடைந்துள்ளன. அதேசமயம் இலினொயிஸ் மாநிலத்தில் அமேஸன் பண்டகசாலையொன்று சூறாவளியில் சிக்கியதில் குறைந்தது 6 பணியாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

மேற்படி சூறாவளியால் கென்துக்கி மாநில வரலாற்றிலேயே மிக மோசமான சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக அந்த மாநில ஆளுநர் அன்டி பெஷியர் தெரிவித்தார்.

மெழுகுதிரி தொழிற்சாலையில் சம்பவம் இடம்பெற்ற போது சுமார் 110 தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருந்ததாகவும் அவர்களில் சுமார் 40 பேர் மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கென்துக்கிக்கும் சூறாவளியால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள ஏனைய மாநிலங்களான மிஸோரி, அர்கன்ஸாஸ், இலினொயிஸ், தென்னஸி, மிஸிஸிப்பி என்பனவற்றுக்கும் அவசரகால நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



# ஆஸ்திரியாவில் கொவிட்-19 தடுப்பூசிகள் தொடர்பான ஆணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரிய ஆர்ப்பாட்டம்




ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் தடுப்பூசிகள் தொடர்பான ஆணை உட்பட கொவிட்-19 கொரோனா வைரஸ் பரவுவதை முறியடிக்க முன்னெடுக்கப்பட்டுள்ள கடும் கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்லாயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வியன்னா நகரில் தொடர்ந்து நான்காவது வார இறுதியில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் சுமார் 44,000 பேர் கலந்து கொண்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஆஸ்திரியாவானது கொவிட்-19 தொடர்பில் கடந்த மாதம் முடக்க நிலையை மீள அமுல்படுத்திய முதலாவது மேற்கு ஐரோப்பிய நாடு என்ற பெயரைப் பெற்றிருந்த நிலையில் அந்த முடக்க நிலை நேற்று ஞாயிற்றுக்கிழமை முடிவுக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது

எதிர்வரும் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து கொவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக தடுப்பூசி மருந்தை ஏற்றியிருப்பது தொடர்பில் ஆணை பிறப்பிக்க அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தீவிர வலதுசாரி விடுதலைக் கட்சியின் ஆதரவுடன் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. மருத்துவக் காரணங்கள் விதிவிலக்காக 14 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கொவிட்-19 வைரஸுக்கு எதிரான தடுப்பூசியேற்றியிருப்பதைக் கட்டாயமாக்கும் நடவடிக்கையை முன்னெடுத்த முதலாவது ஐரோப்பிய ஒன்றிய நாடாக ஆஸ்திரியா உள்ளது. தாம் தடுப்பூசி மருந்து ஏற்றிக் கொள்வதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் சுதந்திரம் மக்களுக்கு உள்ளதாக இந்த ஆணையின் எதிர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். மேற்படி ஆணையை மீறுபவர்கள் 3,600 யூரோ (4,000 அமெரிக்க டொலர்) வரையான தண்டப் பணத்தை எதிர்கொள்ள நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 8.9 மில்லியன் பேரை சனத்தொகையாகக் கொண்ட ஆஸ்திரியாவில் கொவிட்-19 கொரோனா வைரஸால் 13 ஆயிரத்து 143 பேர் பலியானதுடன் 12 இலட்சத்து 25 ஆயிரத்து 555 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். உலகளாவிய ரீதியில் இந்த வைரஸால் 53 இலட்சத்து 20 ஆயிரத்து 300 பேர் உயிரிழந்துள்ளதுடன் 27 கோடியே ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 275 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அதேசமயம் தொற்றுக்குள்ளானவர்களில் 24 கோடியே 28 இலட்சத்து 90 ஆயிரத்து 125 பேர் குணமடைந்துள்ளனர்.

# பாகிஸ்தானில் தலிபான்களின் துப்பாக்கி சூட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் பலி

பாகிஸ்தானிய தலிபான் ஆயுதக் குழுவைச் சேர்ந்த துப்பாக்கிதாரிகள் இளம்பிள்ளை வாதத்திற்கு தடுப்பு மருந்து வழங்கும் மருத்துவ உத்தியோகத்தர்கள் குழுவொன்றிற்கு பாதுகாப்பு வழங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது நேற்று முன்தினம் சனிக்கிழமை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்துள்ளதுடன் பிறிதொருவர் காயமடைந்துள்ளார்.

அரசாங்கத்துடன் ஒரு மாத யுத்த நிறுத்த உடன்படிக்கை முன்னெடுக்கப்பட்ட நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாகிஸ்தானிய தலிபான் தீவிரவாத குழுவான தெஹ்ரீக் -ஈ- தலிபான் குழுவின் பேச்சாளர் மொஹமட் குரஸானி இந்தத் தாக்குதலை தமது குழுவினரே நடத்தியதாக உரிமை கோரியுள்ளார்.

# நியூ கட்டலோனியாவில் சுதந்திரத்துக்கான வாக்களிப்பு

பிரான்ஸின் பசுபிக் பிராந்தியமான நியூ கட்டலோனியாவானது பிரான்ஸிலிருந்து சுதந்திரம் பெறுவதற்கான மூன்றாவது இறுதி சர்வஜன வாக்கெடுப்பை நேற்று நடத்தியது.

கொவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றானது வாக்கெடுப்புகள் நீதியான முறையில் நடைபெறுவதற்கு தடையாகவுள்ளதாக தெரிவித்து மேற்படி வாக்கெடுப்பை பிரதான சுதந்திரக் கட்சிகள் பகிஷ்கரிப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவுஸ்திரேலியாவின் கிழக்கே சுமார் 2,000 கிலோமீற்றர் தொலைவிலுள்ள நியூ கட்டலோனியா பிராந்தியத்தில் சுமார் 185,000 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இதற்கு முன்னர் அந்தப் பிராந்தியத்தில் பிரான்ஸிலிருந்து பிரிந்து சுதந்திரம் பெறுவதற்காக 2018 ஆம் ஆண்டிலும் பின்னர் கடந்த ஆண்டிலும் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியைத் தழுவியிருந்தன.

## உலகச் செய்திகள்

# பிரித்தானியாவில் ஜி7 வெளிநாட்டு அமைச்சர்களின் உச்சிமாநாடு

பிரித்தானியாவின் ஏற்பாட்டில் அந்நாட்டின் லிவர்பூல் பிராந்தியத்தில் ஆரம்பமான ஜி7 தொழிற்றுறை நாடுகளின் உச்சிமாநாட்டில் அங்கத்துவ நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு அமைச்சர்கள் கலந்து கொண்டு உலகளாவிய ரீதியான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக ஐக்கியத்துடன் செயற்படுவதை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது உக்ரேனிய எல்லையில் ரஷ்யப் படையினர் குவிக்கப்பட்டு வருவது குறித்தும் சீனா மற்றும் ஈரான் தொடர்பான பதற்றநிலை தொடர்பிலும் அங்கத்துவ நாடுகளின் இராஜதந்திரிகள் கவலையை வெளிப்படுத்தினர்.



# சிசிலியில் எரிவாயு வெடிப்பால் இடிந்து விழுந்த கட்டிடங்கள்



சிசிலிய நகரான ரவனுஸாவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற எரிவாயு வெடிப்பொன்றில் சிக்கி பல கட்டிடங்கள் இடிந்து விழுந்ததில் குறைந்தது ஒருவர் பலியானதுடன் இரு சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்ணொருவர் உட்பட 8 பேருக்கும் அதிகமானோர் காணாமல்போயுள்ளனர்.

மெதேன் வாயு கசிவையடுத்து ஒரு கட்டிடம் தீப்பற்றி எரிந்துள்ளது. சிசிலிய நகரான அகரிஜென்டோவில் இடம்பெற்ற இந்த எரிவாயு வெடிப்பால் 6 கட்டிடங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் தீயணைப்புப் படைவீரர்கள் பல மணி நேரம் போராடி தீயை அணைத்துள்ளனர்.

இடிபாடுகளின் கீழ் சிக்கியுள்ளவர்களை மீட்கும் நடவடிக்கையில் மோப்ப நாய்கள் மற்றும் ஆளற்ற விமானங்கள் சகிதம் பொது பாதுகாப்பு தொண்டர்கள் உள்ளடங்கலாக சுமார் 250 மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. எரிவாயு வெடிப்பால் இடிந்து விழுந்த கட்டிட இடிபாடுகளின் கீழிருந்து பல மணி நேரம் கழித்து வயோதிபப் பெண்ணொருவர் சிறு காயங்கள் மற்றும் எலும்பு முறிவுகளுடன் அதிசயிக்கத்தக்க வகையில் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

Printed and published by Express Newspapers (Cey) (Pvt) Ltd. at No. 267, Raja Mawatha, Ekala, Ja-Ela. On Monday, December 13, 2021